22 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733



Join Our Brokerage - Real Estate Needs
416.315.9397
www.mahendran.ca
Raja Mahendran, P.Eng.
Email: raja@mahendran.ca



நதி 22 | பாலம் 13 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JULY 01, 2012

# சொத்தைப் பாதுகாக்க பொதுமக்களுக்கு அதிகாரம்!

கனேடிய பழமைவாதக்கட்சி அரசாங்கம் தனது குறிக்கோள்களில் முக்கியமானதொன்றாக குற்றவாளிகளின் தண்டனையை கூட்டுவதாலும் நகர்காவலர்களுக்கு அதிக அதிகாரம் வழங்குவதாலும் நாட்டில் குற்றச் செயல்களை குறைக்க வேண்டும் என்று முடிவெடுத்துள்ளது.




இதன் ஓர் அம்சமாக யூன் 28, 2012 இல் கனடிய ஆளுனர் கையெழுத்திட்டதுடன் அமலுக்கு வந்த 'பொதுமக்கள் கைது செய்தலும் தற்பாதுகாப்பு முயற்சியும்' என்ற சட்டமூலம் பொதுமக்கள், திருடர்களை கைது செய்ய புதிய வழிமுறைகளை வகுத்துள்ளது. நீதி அமைச்சரான மதிப்பிற்குரிய Rob Nicholson ஊடகவியலாளர்களுக்கு தெரிவிக்கையில் தற்போது நடைமுறைக்கு வரும் புதிய சட்டமூலம் வியாபார நிலையங்களின் சொந்தக்காரர்களுக்கு தங்களது சொத்துக்களை பாதுகாக்க சில அதிகாரங்களை வழங்குகிறது என்றார்.

தற்போது நடைமுறையில் உள்ள சட்டமூலத்தின்படி ஒருவரின் சொத்தை யாராவது திருடும் போது அச்சொத்தின் உரிமையாளர் நேரடியாகக் கண்டால் மட்டுமே அந்த திருடனை பிடித்து வைத்திருந்து நகர்காவலரிடம் கையளிக்கும் அதிகாரம் இருக்கிறது.

இப்போது அமல்படுத்தப்பட்டுள்ள புதிய சட்டமூலத்தின்படி, சொத்தின் உரிமையாளரிற்கோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவரிற்கோ, அவரின் சொத்தை யாராவது திருடும்போதோ அல்லது ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் அவரின் சொத்தை திருடியிருந்தாலோ அந்த திருடனை பிடித்து வைத்திருந்து நகர்காவலர்களிடம் கையளிக்கும் அதிகாரம் வழங்கப்படுகிறது.

ஊடகவியலாளரின் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அமைச்சர், சொத்தின் உரிமையாளர் ஒருவர் தற்பாதுகாப்பிற்காக 'தகுதியான முறையில்' தனது சொத்தையோ அல்லது தனது குடும்பத்தைக் காக்கவோ நடந்திருந்தால் அரசால் அவர்மீது பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படமாட்டாது என்றார்.

இச்சட்டமூலம் வருவதற்கான நோக்கம் ரொறொன்ரோ Chinatown பகுதியில் மே 2009 இல் நடைபெற்ற நிகழ்வாகும். இப்பகுதியில் உள்ள Lucky Moose Food Mart கடையில் பொருட்கள் திருடியவரான, Chinatown பகுதியில் பலரால் அறியப்பட்ட பிரபல திருடனை இக்கடையை சேர்ந்த இரண்டு ஊழியர்கள் துரத்திப்பிடித்தனர். அவரை கட்டி தமது வானில் வைத்திருந்து நகர்காவலரிடம் கையளித்தார்கள். நகர்காவலர்கள் திருடனை விட்டு விட்டு (அவர் களவாடும் போது பிடிக்கப்படவில்லை.) திருடனை பிடித்தவர்களை கைது செய்தார்கள். அவர்கள் மீது ஒருவரை தாக்கியதற்காகவும் மற்றும் அவரை தனிமையில் வைத்திருந்ததற்காகவும் நீதிமன்றத்தில் குற்றம் சாட்டினார்கள்.

இது தினமும் திருட்டுக்கள் நடைபெறும் Chinatown பகுதி வியாபாரிகளிடம் பெரிய அதிதிருப்தியை ஏற்படுத்தியது. 17 மாத காலம் நடைபெற்ற வழக்கு விசாரணைகளின் பின்னர் Lucky Moose Food Mart கடை உரிமையாளர் David Chen குற்றமற்றவர் என சட்டபூர்வமாக தெரிவிக்கப்பட்டது. நீதிபதியால் தெரிவிக்கப்பட்டு அவர் மீதான வழக்கும் தள்ளப்பட்டது. David Chen குற்றமற்றவர் என்று நீதிபதி கூறினாலும் அவர் செய்தது சரி என நீதிமன்றம் ஒத்துக்கொள்ளவில்லை. David Chen சீன சமூகத்திடம் இச்சம்பவத்தின் பின் மிகுந்த செல்வாக்குப் பெற்றார். அவரும் அவரை சார்ந்தவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் சேர்ந்து எடுத்த முயற்சியின் விளைவே யூன் 28, 2012 இல் இந்த புதிய சட்டமூலம் அமலுக்கு வந்தது.

தொடர்ச்சி 02ஆம் பக்கம்







வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated



Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
9 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585





துரித பணமாற்றுச் சேவை
• 54 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 21 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3 416.267.8221
3351 Markham Rd. #109 416.321.8221




இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
DR. Iru VIJAYANATHAN, BDS, FAGD
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022



# சொத்தைப் பாதுகாக்க...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

நீதி அமைச்சர் யூன் 27, 2012 இல் Chinatown இல் Lucky Moose Food Mart அருகில் பேசும் போது சிரிப்புடன் காணப்பட்ட David Chen யை நோக்கி உமது கடின உழைப்புத்தான் இச்சட்டமூலம் வெளிவர உதவியது என்றார். உமது இந்த முயற்சியை கனடியர்கள் எல்லாருமே வரவேற்கிறார்கள். தனது சொத்தையோ அல்லது தனது குடும்பத்தையோ பாதுகாக்க முயன்றவரை சட்டம் தண்டிக்கக் கூடாது என்பதை எல்லா கனடியர்களுமே ஏற்றுக்கொள்வார்கள் என்றார்.

ஊடகவியலாளரிடம் கருத்து தெரிவித்த David Chen தான் இந்த புதிய சட்டமூலம் அமலுக்கு வந்ததில் மிகவும் மகிழ்ச்சி அடைவதாக தெரிவித்தார். இப்போது எனது கடையையும் எனது குடும்பத்தையும் பாதுகாக்க எனக்கு அதிக அதிகாரம் கிடைத்ததுள்ளது என்றார்.

# நயாகரா நீர்வீழ்ச்சியை கயிற்றில் கடந்து சாதனை!

நயாகரா நீர்வீழ்ச்சியை கயிற்றில் கடந்து வரலாற்று சாதனை படைத்தார் நிக் வாலேண்டா.



நயாகரா நீர்வீழ்ச்சியை கயிற்றில் கடக்க முடியுமா? நினைத்துப் பார்க்கவே பிரமிப்பாக உள்ள இதனை உண்மையில் செய்து வரலாற்று சாதனை படைத்துள்ளார் நிக் வாலேண்டா என்ற இளைஞர். நயாகரா நீர்வீழ்ச்சிக்கு குறுக்காக கயிற்றினை கட்டி அதன் மேல் நடந்து சாதனை புரிந்துள்ளார். இது சாதாரண விடயமல்ல. இந்த சாதனையைப் புரிய அசாத்திய துணிச்சலும், எப்படியும் சாதித்தே தீருவேன் என்ற வெறியும் நிக் வாலேண்டாவிடம் இருந்திருக்க வேண்டும்.

கனமான பனிமூட்டமும், பலத்த காற்றும் வீசியதால் நிக் வாலேண்டாவால் இந்த சாதனையை புரிய முடியாது. பாதியிலேயே கைவிட வேண்டிய சூழலே நேரும் என்ற நிலை ஏற்பட்ட போதும் கூட அவரிடம் திருந்த திடமான மனவுறுதி இந்த சாதனைக்கு ஊன்றுகோலாய் அமைந்தது.

அனைத்து பகுதிகளிலுமிருந்து பலத்த காற்று அடித்த போது தன்னையும் அறியாமல் முன் கைகள் நடுங்கியதால் மிகவும் உணர்ச்சிகரமான நிலை ஏற்பட்டது. இருப்பினும் தன்னுடைய கவனம் அனைத்துமே எப்படியும் இதனைக் கடந்து சாதனை படைக்க வேண்டும் என்பதில் இருந்ததால் சாதிக்க முடிந்ததாகக் கூறினார் நிக்.

33 வயதாகும் நிக் நயாகராவின் அமெரிக்க பகுதியில் சாதனையை தொடங்கி கனடிய மண்ணில் முடிவுக்கு கொண்டு வந்துள்ளார். இவர் கடந்த தூரம் 1,800 அடி. எடுத்துக்கொண்ட நேரம் 25 நிமிடங்கள். சாதனைக்கு வயதும், தூரமும் தடையல்ல என்பதை உணர்த்தியிருக்கிறார் நிக்.

# பெண்கள் வாழ தகுதியான நாடு - கனடா முதலிடம்

பெண்கள் வாழ தகுதியான நாடுகளின் பட்டியலில் கனடா முதலிடத்தை பிடித்துள்ளது. உடல் ரீதியாகவும், தொழில் ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பெண்களுக்கு தேவையான அடிப்படை உரிமைகளை நிறைவேற்றுதல், வன்கொடுமைகளை தடுத்தல் போன்றவை கனடா நாட்டு அரசாங்கம் சிறப்பாக நிறைவேற்றி வருகிறது. இதனால்தான் ஜி 20 நாடுகளிலேயே பெண்கள் வாழ தகுதியான நாடுகளின் பட்டியலில் கனடா முதலிடத்தை பிடித்துள்ளது. மேலும் பெண்களின் வன்முறைக்கு எதிரான நடவடிக்கைகள், பெண்களின் சுகாதாரத்தைப் பேணும் திட்டங்கள் சிறப்பாக இருப்பதும் முக்கிய காரணம் ஆகும்.
கனடாவைத் தொடர்ந்து ஜெர்மனி, பிரிட்டன், அவுஸ்திரேலியா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் முதல் 5 இடங்களைப் பிடித்துள்ளன.

இந்தியாவில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகம் உள்ளதால் இந்தியா கடைசி இடத்தில் உள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகளை பாலியல் தொழிலுக்காக விற்றல், குழந்தை திருமணம், வரதட்சணை கொடுமை, வீட்டுப் பணிப்பெண்கள் பாலியல் கொடுமைக்கு உள்ளாவது போன்ற காரணங்களால் பெண்கள் வாழ தகுதியான நாடுகளின் பட்டியலில் இந்தியாவுக்கு கடைசி இடம் கிடைத்துள்ளது.

இந்தியாவிற்கு முன்னதாக உள்ள இடங்களில் சவுதி அரேபியா, இந்தோனேசியா, தென்னாபிரிக்கா, மெக்சிகோ ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# பிளாஸ்டிக் பைகளுக்குத் தடை கொண்டுவர ரொறொன்ரோ மாநகராட்சி முடிவு!

ஒருமுறை பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பை தடை செய்வது என ரொறொன்ரோ மாநகராட்சி கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது. இந்த தடை ஜனவரி 01, 2013 அன்று ரொறொன்ரோ மாநகர் முழுவதும் நடைமுறைக்கு கொண்டு வரப்படும். இதன் பின்னர் சில்லறை வணிகர்கள் பொருட்கள் வாங்குவோருக்கு அவற்றை ஒருமுறை பயன்படுத்தக் கூடிய பொலித்தீன் பைகளில் போட்டுத் தரக் கூடாது என்ற சட்டமும் நடைமுறைக்கு வரும். இது தொடர்பாக மாநகர அவையில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 24 பேர் மாநகராட்சியின் முடிவை ஆதரித்தும் 20 பேர் இதனை எதிர்த்தும் வாக்களித்தனர். முன் ஆய்வு மற்றும் ஆலோசனைகள் ஏதுமின்றி சுற்றுச் சூழலை கருத்தில் கொண்டு திடீரென பொலித்தீன் பைகளுக்குத் தடை விதிப்பது என ரொறொன்ரோ மாநகராட்சி எடுத்துள்ள முடிவினை சுற்றுச் சூழல் நிபுணர்கள் பாராட்டியுள்ளனர். அதே நேரத்தில் மாநகராட்சியின் இந்த முடிவுக்கு எதிராகவும் சிலர் நீதி மன்றத்தை நாடக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

பிளாஸ்டிக் பைகளின் மூலம் மட்டுமே மக்களிடமிருந்து கடைக்காரர்களுக்கு $5-மில்லியன் வருமானமாகக் கிடைக்கிறது. இதனை மையமாக வைத்தே சில நிறுவனங்கள் பிளாஸ்டிக் பைகளை அதிகம் தயாரித்து வருகின்றனர் என நகரசபை உறுப்பினர் ஒருவர் குற்றஞ்சாட்டினார். பிளாஸ்டிக் பைகளினால் சுற்றுச் சூழல் மாசுபடுவதுடன் பொதுமக்களுக்கு ஒவ்வாமை நோயும் உருவாகிறது என்பதாலே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என மாநகராட்சி கூட்டத்தில் விளக்கமும் அளிக்கப்பட்டது.




பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜே பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201,*
*TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059 FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com*


விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. *Vlambaram Publications Inc. ,*
   *5215 Finch Ave. E. #201,*
   *Toronto, ON M1S 0C2*
2. *Tel.: 416.282.8059*
3. *Fax: 416.282.4978*
4. *email: vlambaram@sympatico.ca*
5. *web: vlambaram.com*

## வாசகர் எண்ணம்

வாசகன் எழுதுவது,

என் தேடல்களுக்கு விருந்தளிக்கும் உமது எண்ணக்கருக்களால் நான் பெரும்நிறைவு பெறுகின்றேன். மாதம் இருமுறை எப்போது முதலாம் திகதி, 15ஆம் வருமென்று காத்திருந்து விருந்துண்பேன். அதுகும் நான் இருக்கும் இடத்தில் பத்திரிகை கிடைக்காததால் GTA Square க்குள் இருக்கும் என் அன்பருடைய கடையில் சொல்லி வைத்து இரண்டு பேப்பர்களையும் ஒன்றாக எடுத்து வந்து வாசித்து மட்டற்ற மகிழ்ச்சியில் நிறைவு பெறுவேன். அகணியின் 'வெகுளாமை', K.G மாஸ்ரரின் கட்டுரைகள் மற்றும் ஆன்மீகக் கட்டுரைகள், புலவரின் நண்பனுக்கு எழுதும் கடிதம் எல்லாம் பாற்கடலில் கடைந்து எடுத்த அமுதம் போல் நீர் தேர்வு செய்துள்ள முத்தானவர்களின் முத்துக்கள்.

சொல்லொன்று செயலொன்று என்ற இன்றைய உலகில் அதுகும் தமிழ் இனத்தில் சொல்லே செயலாக வாழுகின்ற அகணி, புலவர் இவர்களுடைய எழுத்துக்கள் நெஞ்சை அள்ளும் கருத்துக்கள். 'அவன் துறவியா புறவியா' என்னும் புலவரின் கடிதம் எனக்கே எனக்காக எழுதியது போல் இருந்தது. அதனை வாசிக்கும் போது கழுத்தறுப்புக்கள், கண்கட்டு வித்தைகள், எத்தனையோ நினைவுகள் நினைவில் ஊசலாடுகின்றன. 'சும்மாயிரு சொல் அற' என்று கனடாவிற்கு வந்து வாழ்ந்த என்னை சொல்லி வைத்து விட்டது.

கந்தவனம் ஐயாவின் வெட்டி வைத்த தேங்காய்ப் பாதி போன்ற கண்கள். ஒவ்வொரு அசைவும் ஒவ்வொரு நாடகம். வயது போனாலும் உடலும், உள்ளமும் சுருங்கினாலும் உணர்வுகள் சுருங்குவதில்லை என்பதை உணர்த்துகின்றன. எனவே உமது நற்பணி என்றும் தொடர இன்றும், என்றும் எனது ஆசிகள். நீர் நீழி காலம் வாழ்க வென்று வாழ்த்துகின்றேன். இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

A. S. குமாரலிங்கம்.

# ரொறொன்ரோ மாநகர மண்டபத்துக்கு வருக!

## சுய வழித்துணைச் சுற்றுலா

ரொறன்ரோ மாநகர மண்டபமே ரொறன்ரோ மாநகராட்சி மன்றத்தின் உறைவிடம். இது ஓர் உலகப் புகழ்பெற்ற தலைசிறந்த கட்டிடப் படைப்பாகும். 1965-ம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது முதல் இற்றைவரை இது ரொறன்ரோ மாநகரத்தின் புகழ்மிகு சின்னங்களுள் ஒன்றாகத் திகழ்ந்து வந்துள்ளது. ரொறன்ரோ மாநகர மண்டபத்தின் உள்ளும் புறமும், நேதன் பிலிப்ஸ் சதுக்கம் எங்கும் நீங்கள் சுற்றுலா புரிவதற்கு இந்த சுய-வழித்துணைச் சுற்றுலா பனுவல் உங்களுக்குத் துணைநிற்கும். பல்லாண்டுகளாக இம்மாநகர மண்டபத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள தனித்துவம் வாய்ந்த சிறப்புகளையும், பல்வேறு கலைப் படைப்பகளையும் கண்டுகளிக்கவும்.

### ரொறன்ரோ மாநகர மண்டபம் - ஒரு கண்ணோட்டம்

என்றென்றும் ஒரு மாநகரத்தால் நடத்தப்பட்ட மாபெரும் கட்டிடவமைப்புப் போட்டிகளுள் ஒன்றின் பெறுபேறாகவே ரொறன்ரோ மாநகர



மண்டபம் எழுந்தது எனலாம். உலகளா விய முறையில் 42 நாடுகளிலிருந்து முன்வைக்கப்பட்ட 510 வடிவமைப்புகளை ஒரு சர்வதேச நடுவர் குழாம் மட்டுக் கட்டியது. அதில் பின்லாந்தின் தலைநகர் ஹெல்சிங்கியைச் சேர்ந்த கட்டிடக்கலைஞர் வில்ஜோ றெவெல் (Viljo Revell) வெற்றிபெற்றதாக 1958-ல் மாநகராதிபதி நேதன் பிலிப்ஸ் (Nathan Phillips) அறிவ-ித்தார். 1961-ல் கட்டுமானம் தொடங்கியது. நான்கு ஆண்டுகள் கழித்து, 1965 செப்டெம்பர் 13-ம் திகதி மாநகரம் திறப்புவிழா நடத்தியது. வில்ஜோ றெ-வலின் வடிவமைப்பு நான்கு பிரதான பாகங்களாகப் பிரிக்கப்பட்டது: மக்கள் சதுக்கம், மேடை, சுற்றுக் குழிவு மன்றக் கூடம், உயர வேறுபாடு கொண்ட இரு அலுவலக கோபுரங்கள். மாநகர மண்டப கட்டிடத்தொகுதி முழுவதும் சிறப்பச் சிறப்பு வாய்ந்தது. இத்தகைய சிறப்பச் சிறப்பு மக்களை ஈர்க்கும் இடச்சின்னமாக இம்மாந-கரத்தை திகழ வைக்கிறது. ஓங்கும் மாந-கரத்தின் இலட்சிய சின்னமாகவும் இதனை அது திகழ வைக்கிறது. வட்டமாடத்தின் கிழக்குப் பக்கத்தில், முன்வாயிலின் உட்புறத்தில், சுவராணி ஓவியத்தின் அருகிலிருந்து உங்கள் சுற்றுலாவைத் தொடங்கவும். உங்கள் சுற்றுலாவின் பொழுது நீங்கள் ஒளிப்படம் பிடிக்கலாம். நினைவுத் தூபி வில்ஜோ றெவெலின் நினைவாக, சுவராணி ஓவியத்தின் எதிரே அமைந்துள்ள பெருந்தூணில் அவருடைய பெயர் பொறிக்கப்பட்டுள்ளதை நீங்கள் காண்பீர்கள். அவருடைய புகழ்பெற்ற இக்கட்டுமானம் பூர்த்தியடைவதற்கு ஆகப் 10 மாதங்கள் இருக்கையில் அவர் மாரடைப்பினால் இறந்தமை வருத்தம் தருகிறது. றெவெல் சார்பாக அவர் மனைவி திறப்பு விழாவில் கலந்துகொண்டார்.

### சுவராணி ஓவியம்

கிழக்குச் சுவராணி ஓவியம் மாநகர் (Metropolis) எனப்படுகிறது. 1974-ல் நிலையான ஓவியம் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்பட்ட போட்டியில் டேவிட் பாட்றிச் (David Partridge 1919 - 2006) என்னும் ஓவியர் முன்வைத்த சுவராணி ஓவியமே வெற்றி பெற்றது. இம்மாநகர மண்டபத்தின் கட்டிடப் பாணிக்கு அணிசேர்க்கும் இச்சுவராணி ஓவியம் இம்மகத்தான மாநகரத்தின் அல்லது மாநகரின் குறியீட்டு விளக்கமாய்த் திகழ்கிறது. 1,00,000 சாதாரண ஆணிகள் கொண்டு படைக்கப்பட்ட இச்சுவரோவியம் ஒன்பது சட்டங்கள் கொண்டது. ஒவ்வொரு சட்டமும் ஏறத்தாழ 180 கிலோகிறாம் எடை கொண்டது. நடுவில் உள்ள செப்பாணித் திரள்வட்டம் இம்மாநகரத்தின் இதயத்தை, அதாவது அக நகரத்தைக் குறிக்கிறது. மாடித்தளமும் உட்கூரையும் சிறப்புவாய்ந்த இம்மாடித்தளம், இத்தாலியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, கனடாவில் அரியப்பட்டு, கையினால் இடப்பட்ட (Carrara எனப்படும்) வெண்பளிங்குக் கல்லால் ஆனது. கட்டிட பராமரிப்புப் பணியாளர்கள் மின்கம்பி பொருத்துவதற்கும், வேறு சாதனங்களைச் சென்றடைவதற்கும் ஏதுவாக நிலைபெயரும் அலுமினிய வரிச்சுகளால் ஆனதே இம்மண்டபத்தின் உட்கூரை. கலை நடைகூடம் ரொறன்ரோ பொது நூலகத்தின் மாநகர மண்டபக் கிளைக்கு இட்டுச்செல்லும் நடைகூடச் சுவர்களில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாநகர மண்டப கட்டுமான சாயை கள் இடப்பட்டுள்ளன. தையற்பூக் கலையில் நாட்டம் கொண்டவர்கள் (உண்டிச்சாலையின் அருகில்) உள்ள படிவரிசையில் இறங்கி, அதன் அடியில் காணப்படும் பெரிய தையற்பூவைப் பார்வையிடலாம். 1984-ல் ரொறன்ரோ தையல் குழுமம், ரொறன்ரோ மாநகரத்தின் 150-வது ஆண்டு நிறை வைக் கொண்டாடுமுகமாக அரும்பாடுபட்டு ஆக்கிய காலத் தையலை (Stitches in Time) மாந-கரத்துக்கு வழங்கியது. முகப்பின் குறுக்கே முன்வாயில் கடந்து மேற்கு நோக்கி நடக்கவும். கண்ணாடிக்கூட்டில் ரொறன்ரோவின் மாதிரியுரு காட்சிக்கு வைக்கப்பட்டிருப்பதை நீங்கள் காண்பீர்கள்.

### மாதிரியுரு

ஒன்ராறியோ ஏரிக்கரையிலிருந்து நோக்கும்பொழுது புலப்படும் நடுமாநகரப் பகுதியின் இம்மாதிரியுருவை எமது திட்டமிடல் அலுவலர்கள் ஆக்கினார்கள். இது முழு மாநகரத்தையும் புலப்படுத்தும் மாதிரியுரு அல்ல. இதன் எல்லைகள்: கிழக்கே டொன் ஆறு, வடக்கே புளோர் வீதி, மேற்கே டவ்றின் வீதி, தெற்கே ஒன்ராறியொ ஏரி. இளஞ்சிவப்புக் கட்டிடங்கள் வரலாற்று அல்லது கட்டுமான முக்கியத்துவம் வாய்ந்தவை என்று குறிக்கப்பட்டுள்ளன. வெண் கட்டிடங்கள் அவ்வாறு குறிக்கப்படாதவை. பளிங்குக் கட்டிடங்கள் இந்த மாதிரியுரு ஆக்கப்பட்டபொழுது திட்டமிடப்பட்டவை அல்லது முன்மொழியப்பட்டவை. மாதிரியுருவின் பின்புறம் உள்ள திரைச்சீலையில் காணப்படும் 1897-ல் ரொறன்ரோ (Toronto in 1897) என்னும் தலைப்புடன் கூடிய நெய்யோவியம் 1914-இல் ஓவன் ஸ்டேப்பிள்ஸ் (Owen Staples) என்னும் ஓவியரால் தீட்டப்பட்டது. இன்று காணப்படும் முக்கிய கட்டிடங்கள் சிலவற்றை இந்த ஓவியத்தில் காணலாம். எடுத்துக்காட்டுகள்: கிழக்கே டொன் ஆற்றின் அருகில் அமைந்துள்ள Gooderham and Worts Distillery எனப்படும் வடிசாலை, தென்மேற்கே அமைந்துள்ள கனடிய தேசிய பொருட்காட்சியகம் (Canadian National Exhibition).

311 தகவல் பீடத்துக்கு அப்பால் உள்ள கட்டிட நடுப்பகுதிக்கு நடந்து செல்லவும். தரைத்தள மட்டத்துக்கு கீழே அமைக்கப்பட்ட வட்டத் தூணிலிருந்து மேலெழும் பாரிய உருளை உரு ஒன்றை அங்கு நீங்கள் காண்பீர்கள். நீலக் கம்பளம் பதித்த விசாலமான படிவரிசை, நினைவு மண்டபத்தின் அங்கம் ஆகும்.

### நினைவு மண்டபம்

இது இம்மாநகர மண்டபத்தின் சிறப்பம்சங்களுள் ஒன்று. இது அதிகாரபூர்வமான போர்-நினைவுச்சின்னம் அல்ல. எனினும் போருடன் தொடர்புடைய நினைவுச் சின்னங்களை இது தன்னகத்தே கொண்டுள்ளது. இரண்டாம் உலகப் போரில் இறந்த 3,500 ரொறன்ரோ வாசிகளின் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுப் பொன்னேட்டை இக்கண்ணாடிக் கூட்டில் காணலாம். காட்சிக் கூட்டின் இருமருங்கும் கொடிகள் ஊன்றப்பட்டுள்ளன. இடதுபுறம் கனடியக் கொடி, வலதுபுறம் ஐக்கிய இராச்சியக் கொடி. பிரித்தானிய பொதுநலவாயத்தில் கனடா அங்கம் வகிப்பதால், ஐக்கிய இராச்சியக் கொடி சேர்க்கப்பட்டது. முன்னொருகால் ரொறன்ரோவில் தலைமையகம் கொண்டிருந்த கனடிய ஆயுதப் படையின் இலச்சினை கொண்ட அணித்தகடுகள் இருபுறங்களிலும் சுவர்மீது பொறிக்கப்பட்டுள்ளன. படிவரிசை யின் இடைநடுவில் (உலோகத் தகடு கவிந்த நிலையில்) நிற்கும் உருளை, 1962 நவம்பர் 7-ம் திகதி பதித்த காலப் பேழையைக் கொண்டுள்ளது. நாணயங்கள் மாநகரக் கையேடுகள் மாநகர மண்டப வடிவமைப்பு போட்டி பற்றிய குறுவிபரம் 1834-ம், 1962-ம் ஆண்டுகளுக்குரிய மாநகர கேடயச் சின்னங்கள் செய்தித்தாள்கள், ஏடுகள், அமைவுப் படங்கள் போன்றவற்றின் ஒளிப்படப்பிரதிகள் என்பன காலப் பேழையுள் அடங்கிய பொருட்களுள் சிலவாகும். இது திறந்து வைக்கப்பட்ட திகதி குறிக்கப்படவில்லை. - தொடரும்


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing


- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL


# குழந்தையும் கல்வியும்



## சத்குரு வாசுதேவ்

*உங்களைப் போன்று ஒரே ஒருவர் கூட இல்லை.*

குழந்தைகளை வளர்ப்பதில் பெற்றோர்கள் தங்களுக்குத் தாங்களே அழுத்தத்தை வரவழைத்துக் கொள்கிறார்கள். இந்த அழுத்தம் எதனாலென்றால், நீங்கள் முற்றிலும் தனித்தன்மை வாய்ந்த வெவ்வேறு உயிர்களை ஒப்பிட்டுப் பார்க்கிறீர்கள். இந்த கிரகத்தில் உங்களைப் போன்றே இன்னொரு மனிதன் இருக்கிறாரா? உங்களைப் போன்று ஒரே ஒருவர் கூட இல்லை. அதிர்ஷ்டவசமாக அப்படியில்லை. ஒவ்வொரு உயிரினமும் முற்றிலும் தனித்தன்மை மிக்கது. இது உங்கள் குழந்தைக்கும் பொருந்தும். ஆனால் நீங்கள் அனைவரையும் ஒரே பிரிவினுள் உட்படுத்தி ஒப்பிட்டுப் பார்க்கிறீர்கள். குழந்தைகளுக்கு ஒன்று இரண்டு என கற்பித்து மற்றவரைவிட தங்களை உயர்வாகவோ, தாழ்வாகவோ கருத வைக்கிறீர்கள். முதலில் கற்பது என்பதைப் பற்றிய உங்கள் கண்ணோட்டமே தவறாக இருக்கிறது.

தெரியாத புதிய விஷயத்தைத் தெரிந்து கொள்ளும்போது, இயல்பாகவே அது மகிழ்ச்சியைக் கொண்டு வரும். தெரியாத ஒன்றை நீங்கள் கற்றுக்கொண்டால், அது உங்களை மகிழ்ச்சியானவராய் ஆக்க வேண்டும். ஆனால் குழந்தைகள் பள்ளியில் மிகவும் மகிழ்ச்சியின்றி இருக்கிறார்கள். கற்பது குழந்தைகளுக்கு துயரத்தை உருவாக்குகிறதெனில், கற்பதைப் பற்றியே நாம் இன்னமும் புரிந்து கொள்ளவில்லை என்றே பொருள். துரதிர்ஷ்டவசமாக, உங்கள் குழந்தைகளை பள்ளிக்கு எதையும் தெரிந்து கொள்வதற்காக நீங்கள் அனுப்புவதில்லை. தெரிந்து கொள்ளவேண்டும் என்கிற தாகத்தினை அவர்களுக்குள் வளர்ப்பதற்காக அவர்களைப் பள்ளிக்கு அனுப்புவதில்லை, அவர்கள் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காகத்தான் பள்ளிக்கு அனுப்புகிறீர்கள். பள்ளி செல்லும் குழந்தைகள் பொருளாதாரத்திற்கு அடிமையாய் இருக்க வேண்டுமென நீங்கள் நினைக்கிறீர்கள். எனவே ஆசிரியர்கள் உங்களுக்காக இந்தப் பணியைச் செய்கிறார்கள். இது கல்வியைக் கையாளும் ஒரு துரதிரஷ்டவசமான வழி.

அறிவிற்கான தாகம் அவனில் தூண்டி விடப்பட்டால், அவன் கற்பதை யாராலும் தடுக்கமுடியாது. கல்வியும் முழுநோக்கமும் வெறுமனே அறிவின் திணிப்பாக இல்லாமல், அறிவிற்கான தாகத்தைத் தூண்டுவதாக இருக்க வேண்டும். அறிவிற்கான தாகம் அவனில் தூண்டிவிடப்பட்டால், அவன் கற்பதை யாராலும் தடுக்கமுடியாது. எப்படியும் அவன் கற்றுக்கொள்ளத்தான் போகிறான். ஆனால் அந்த ஆர்வத்தைத் தூண்டுவதற்குப் பதிலாக நீங்கள் அதனை அடக்குகிறீர்கள், கல்வியைப் பற்றிய உங்கள் அபிப்பிராயத்தினைக் கொண்டு அவனை அடித்துக் கீழே தள்ளுகிறீர்கள். ஏனெனில் கல்வியென்பது உங்களைப் பொறுத்தவரையில், பணமும் சமூக அந்தஸ்தும் தான். இது கல்வியைப் பற்றிய தவறான அணுகுமுறை. நீங்கள் உங்களுக்குள் வளர்த்து வைத்துள்ள நிர்பந்தங்களால் அவர்களை முழுமையாக திசை மாற்றுவதன் காரணமாக மகிழ்ச்சியில் வெடித்து மலரவேண்டிய சின்னஞ்சிறு மொட்டுக்கள் மெல்ல மெல்ல சோகமயமாகிறார்கள். தேவையற்ற உங்கள் நிர்பந்தங்களை நீங்கள் அவர்கள் மீதும் திணிக்க முயற்சிக்கிறீர்கள்.

நீங்கள்தான் இந்தப் போட்டிகளையும், ஒப்பீடுகளையும் கொண்டு வந்திருக்கிறீர்கள். பெரும்பாலான பெற்றோர்களுக்கு இந்த விடயம் கல்வியைப் பற்றியதாக இல்லாமல், முதலிடம் பெறவேண்டும் என்பதாக உள்ளது. உங்களது குழந்தை அனைத்துக் குழந்தைகளுக்கும் மேலே இருக்கவேண்டும். உங்கள் விருப்பமெல்லாம், எப்படியாவது உங்கள் குழந்தை 100% எடுக்கவேண்டும். குழந்தைக்கு என்ன நடந்தாலும் பரவாயில்லை. உங்கள் குழந்தை முதல் மதிப்பெண் எடுக்கவேண்டும். உங்களுக்கு கல்வியிலோ வளர்ச்சியிலோ அக்கறை யில்லை. உங்களது முழு முயற்சியுமே உச்சாணிக்கொம்பில் அமர்வதுதான். அனைவரும் முதலிடத்தில் இருக்கவே விரும்புகிறார்கள். ஆனால், அனைவருமே முதலிடத்தில் இருக்கமுடியாது. எனவே முதலிடத்தில் இருப்பவர்களைத் தவிர மற்றவர்கள் இயல்பாகவே அழுத்தத்தில் இருப்பார்கள், வேறு வழியேயில்லை.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:** www.innerengineering.org

உங்கள் குழந்தை முதல் மதிப்பெண் பெறவேண்டும். இந்த நோய்த்தன்மை முதலில் போகவேண்டும். இல்லையில்லை, பள்ளிகள்தான் அதுபோல இருக்கின்றன என்று நீங்கள் சொல்லலாம். ஆனால் பள்ளிகள் உங்கள் நோக்கங்களைத்தான் செயல்படுத்துகின்றன. உங்கள் நோக்கங்கள் மாறினால் பள்ளிகளும் மாறும். எது வேலை செய்கிறதோ அந்த விதத்தில் தங்கள் வியாபாரத்தினை நடத்த அவர்கள் விரும்புகிறார்கள். நீங்கள் கட்டணம் செலுத்துவதால், உங்களது விருப்பங்களை அவர்கள் நிறைவேற்றுகின்றனர். இந்தச் செயலினால் குழந்தை பாதிப்படைகிறது. ஆனால் உங்களுக்கு அது ஒரு பொருட்டேயில்லை. உங்கள் குழந்தை மகிழ்ச்சியில்லாமல் இருக்கிறது. உங்களுக்கு அது பிரச்சினையாக இல்லை. அவன் முதல் மதிப்பெண் பெற்றாகவேண்டும். இந்த நோய்த்தன்மை முதலில் போகவேண்டும்.

கல்விமுறை இவ்வாறு இருக்குமானால், உங்கள் குழந்தை உண்மையான அறிவாளியாக மலரமுடியாது. அவர்களின் முழுத்திறமை போட்டியினால் வெளிப்படாது, முற்றிலும் தளர்ந்தநிலையில் தான் வெளிப்படும். நீங்கள் உங்களுக்குள் அமைதியாக, ஆனந்தமாக இருக்கும்போது தான் உங்கள் உடலும், மனமும் அதன் முழுத்திறமையுடன் செயல்படும். நீங்கள் மற்றவருடன் போட்டியிட முயலும்பொழுது, மற்றவரை விட ஒரு அடி எப்படி முன்னே இருப்பது என்றுதான் சிந்திப்பீர்கள். உங்களின் உச்சபட்சத் திறமையைப் பற்றிச் சிந்திக்கமாட்டீர்கள். எனவே, தற்போதுள்ள கல்வி முறையினால் ஒரு தலைமுறை மக்களையே வீணடித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

இன்றைய கல்வி உங்களை குறுகிய மனப்பான்மை உள்ளவராக மாற்றிவிட்டது. ஈஷாவில் நடத்தப்படும் பள்ளியில் ஒருவருக்குள் ஒரு திறந்த நிலையைக் கொண்டுவர விரும்புகிறோம். யார் வாழ்க்கையைப் பற்றி ஒரு திறந்தநிலையை வளர்த்துக்கொள்கிறார்களோ, அவருக்கு எதைப் பற்றியும் முடிவான கருத்தில்லை, இந்தப் பள்ளியில் மதரீதியாகவோ, கலாச்சார ரீதியாகவோ அல்லது வேறு எந்தவிதமாவோ இல்லாமல், அவன் வாழ்வின் எல்லா அம்சங்களையும் ஒரு திறந்தநிலையில் பார்க்க கற்றுக் கொடுக்கப்படுகிறது, முழுமையாகத் திறந்தநிலையில் அவன் வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்தினையும் பார்ப்பான். அவன் வாழ்வின் எல்லா அம்சங்கள் பற்றியும் ஒரு திறந்தநிலையை வளர்த்திருக்கிறான். சொல்லப்போனால், கல்வியென்பது ஆரம்பத்திலிருந்தே அவ்வாறு தான் இருக்கவேண்டும். கல்வி கற்பதன் முக்கிய நோக்கமே எல்லைகளை விரிவாக்கத்தான், இல்லையா? ஆனால் மனிதர்கள் கற்கக் கற்க அவர்களது எல்லைகள் குறுகி விடுகிறது.

இந்தியாவில் முன்பு மக்கள் கூட்டுக் குடும்பமாகத்தான் வாழ்ந்து வந்தார்கள். இப்போது ஒரே இடத்தில் இரண்டு, மூன்றுபேர் ஒன்றாய் வாழமுடிவதில்லை. இல்லையா? இன்றைய கல்வி இதைத்தான் உங்களுக்குக் கற்றுக்கொடுத்திருக்கிறது. இது உங்கள் எல்லைகளை விரிவடையச் செய்யவில்லை. இது எங்கோ உங்களை குறுகிய மனப்பான்மை உள்ளவராகவும், தனிமனிதத் தன்மையுடையவராகவும் மாற்றிவிட்டது. நம் குழந்தைகளுக்கு நாம் கொடுக்கும் கல்வி, அவர்களை அனைத்தையும் விலக்கி வைக்கச்செய்கிறது. யாரோடும் அவனால் வாழ்க்கையில் ஒன்றாய் இருக்க முடிவதில்லை. எனவே இது ஒரு தனிப்பட்ட பிரச்சினையல்ல. இது ஒரு உலகளாவிய பிரச்சினை. இது ஒவ்வொரு தலைமுறையிலும் நடக்கும் சிக்கல். அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு கல்விமுறையால் மட்டுமே நீங்கள் உங்களுடன் இந்த முழு உலகையும் சேர்த்துக்கொண்டு வளர்வீர்கள், அதுதான் ஆனந்தத்திற்கு அடிப்படை. எனவேதான் அத்தகையதொரு கல்வியை, அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு கல்வியைக் கற்பிக்க விரும்புகிறோம்.

பல்கலைக்கழக சான்றிதழ்களால் உங்களுக்கு வெற்றி வருவதில்லை, திறமை இருப்பதால்தான் வெற்றி வருகிறது. மக்கள் பட்டங்களினாலோ அல்லது பல்கலைக்கழக சான்றிதழ்களாலோ தங்கள் வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்களாக இருப்பதில்லை. திறமையானவர்களாக இருப்பதால்தான் வெற்றி பெற்றவர்களாக திகழ்கிறார்கள். எனவே ஏதோ ஒரு சான்றிதழை தன்னுடன் வைத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக அவனைத் தயார் செய்யாமல், அவன் இயல்பாக எந்தத் துறையில் திறமையாய் இருக்கிறானோ, அந்தத் துறையில் அவனது திறமையை அதிகரிக்கச் செய்வது எப்படி எனப் பார்க்க வேண்டும். இப்போதுள்ள கல்வியில் இரண்டு அம்சங்கள் உள்ளன. ஒரு மனிதன் சம்பாதிப்பதற்கு தன்னைத் தயார்செய்வது எப்படி? இவ்வுலகில் வாழ்வதற்கு தன்னைத் தயார்செய்வது எப்படி? என்பதுதான் அவை. நாம் குழந்தையை இந்த நவீன உலகில் வாழ்வதற்கு ஏற்ப தயார் செய்தாகவேண்டும். அதேநேரத்தில் புதுமை என்கிற பெயரில் நடக்கும் முட்டாள்தனத்திலும் அவன் சிக்கிப்போகக்கூடாது.

ஒருநாள் இப்படி நடந்தது, பல்கலைக்கழகத்தில் ஒரு பேராசிரியையாக இருக்கும் ஒரு பெண்மணி, தன் வீட்டிற்கு ஒரு சிறிய அளவு வீட்டு சாதனப் பொருளை வாங்கி வந்தார். பெட்டியைப் பிரித்து எல்லா குறிப்புகளையும் படித்தார். அந்தப் பெட்டியில் வந்த அனைத்தையும் ஒன்றாய் இணைக்க முனைந்தார். அவர் எவ்வளவோ கடுமையாக முயன்றும் அவரால் அவற்றை ஒன்றாய்ப் பொருத்தமுடியவில்லை. கடைசியாக, எல்லா பாகங்களையும் ஒரு குவியலாக வைத்து விட்டு வேலைக்குச் சென்றுவிட்டார். மாலை நேரம் வீடு திரும்பியவர் ஆச்சரியப்படும் வகையில், அந்த வீட்டு சாதனப் பொருள் சரியாகப் பொருத்தப்பட்டு, ஏற்கெனவே உபயோகப்படுத்தப்பட்டு இருந்தது. அவர் வேலைக்காரப் பெண்மணியைக் கூப்பிட்டு, அதைப் பொருத்தியது யாரெனக் கேட்டார். வேலைக்காரப் பெண்மணி, தான் தான் அதைப் பொருத்தியதாகக் கூறினார். அவரால் நம்பவே முடியவில்லை. அவரிடம், “எப்படி இதனைச் செய்தீர்கள்?” என்று கேட்டார். “எப்பொழுது உங்களுக்கு எழுதப் படிக்க தெரியவில்லையோ, அப்பொழுது நீங்கள் உங்கள் மூளையைப் பயன்படுத்தியே ஆகவேண்டும்” என்றார் அந்தப் பெண்மணி.

எனவேதான், நாம் குழந்தைகளுக்கு எழுதப் படிக்க மட்டும் கற்றுக்கொடுக்காமல், அவர்களுக்கு தங்கள் மூளையை எப்படிப் பயன்படுத்துவது என்பதனையும் கற்றுக் கொடுக்க வேண்டும். எழுதுவதும் படிப்பதும் முக்கியம்தான். ஆனால் மூளையை உபயோகிப்பது அதைவிட முக்கியம், இல்லையா? பெரும்பாலான படித்த மக்கள், தங்கள் தொழிலில் வெற்றிபெற்றவர்களாகவும் ஆனால் சொந்த வாழ்க்கையில் சிக்கலோடும் இருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள். சொந்த வாழ்க்கை என்று வரும்பொழுது அவர்கள் தங்கள் மூளையைப் பயன்படுத்துவதில்லை என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது, இல்லையா? எப்படி மருத்துவராவது, இஞ்ஜினியராவது, பெரிய அறிஞராவது எல்லாம் அவர்களுக்குத் தெரியும். ஆனால், அவர்களது வாழ்க்கை என்று வருகிறபோது, மூளையைப் பயன்படுத்த மறந்துவிடுகின்றனர்.

நீங்கள் ஒரு கற்றறிந்த முட்டாளாக வெளிவருகிறீர்கள், இது மனிதகுலத்திற்கு செய்யும் மிகப்பெரிய துரோகம். எனவேதான், கல்வியென்பது உங்கள் மூளையை மந்தப்படுத்தக்கூடாது, அதனைத் தூண்டிவிட வேண்டும். கல்வி உங்கள் அறிவை எடுக்கக்கூடாது, அதைத் தூண்டிவிட வேண்டும். ஒரு குழந்தை இருபது வருடங்கள் தற்போதைய முறையிலான கல்வியைக் கற்றால், அவனுடைய புத்திசாலித்தனத்தில் எழுபது சதவீதம் மீட்கமுடியாத அளவு அழிக்கப்படுவதாக உலகெங்கிலும் உள்ள இன்றைய கல்வியியல் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அதாவது, நீங்கள் ஒரு கற்றறிந்த முட்டாளாக வெளிவருகிறீர்கள். இது மனிதகுலத்திற்குச் செய்யும் மிகப்பெரிய துரோகமாகும், இல்லையா? ஒரு

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

**சனிக்கிழமை வோக் - இன் 9.00 am - 5.00 pm வரை**

இப்ப மோட்கேஜ் எடுக்கிறதுக்கான
விதிகளையும் மாத்திப்போட்டடங்கள் !
ஜூலை 9 க்கு பிறகு
புது விதிகள் அமுலுக்கு வருகுது. . !

உதுக்குத்தானே இப்ப
**மோட்கேஜ் கிளினிக்** நடக்குது. !
அங்க போனால்
உது எல்லாம் அறியலாம் . ! ! !
மோட்கேஜ்ஜும் செய்யலாம் !

**Our New Rates:**

| | | |
|---|---|---|
| 5 Yr Fixed Rate | : | 3.09 % |
| 3Yr Fixed rate | : | 2.69 % |

OAC

# மோட்கேஜ் கிளினிக்



# 416-644-3555

**CENTUM Rapid Mortgages Inc.**
FSCO LIC # 10156

211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4



**தயா PK கந்தையா** BAS, ABR, AMP
**Principal Broker / President**
FSCO License # M 08001083
**T.P : 416-716-8707**

**ஜெ. இராசதுரை (Jey)** MBA, BBA (Hons), AMP
**Team Leader & Agent**
FSCO License # M 09001428
**T.P : 416-624-4843**

rapid realty inc. ⟹ **"Rapid Response; Rapid Results"**

# VIVA WORLD CUP 2012 - தமிழீழ அணி

## விளையாட்டுத்தகவல் 331

கனேடிய மண்ணில் எமது இளம் சமுதாயத்தின் வளர்ச்சியை முன்நோக்காக கொண்டு கனேடிய தமிழர் விளையாட்டு துறை (CTSA) பல முன்னேற்பாடுகளையும் பல சாதனைகளையும் ஏற்படுத்தி வருவது யாவரும் அறிந்ததே. இதற்கு அடுத்த ஒரு மைல் கல்லாக உலகளாவிய ரீதியில் தமிழ் இளையோர் அவையின் ஏற்பாட்டில் கனேடிய தமிழர் விளையாட்டு துறையின் ஆதரவுடன் சர்வதேச அரங்கில் இடம் பெறும் உதைபந்தாட்ட போட்டியான 'வீவா' VIVA WORLD CUP போட்டிகள் குருதிஸ்தானில் (வட ஈராக்) இல் இடம் பெற்றது. இந்த உலக கிண்ணப் போட்டியில் தமிழீழம் அணி சார்பாக கனடா, சுவிற்சலாந்து மற்றும் பிரித்தானியாவில் வாழும் ஈழத் தமிழர்கள் அடங்கிய அணியும் களத்தில் இறங்கியது. இந்த அணியில் கனடாவில் இருந்து 5 வீரர்கள் பங்குபற்றியமை ஒரு பெருமைக்குரிய விடயமாகும்.



ஐக்கிய நாடுகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நாடுகளுக்கிடையே FIFA அமைப்பினால் நடத்தப்படும் உதைபந்தாட்ட போட்டிகளில் பங்குபெற முடியாத தேசிய இனங்களுக்கான போட்டியாக VIVA CUP உதைபந்தாட்ட போட்டிகள் நடைபெறு கின்றன. இப்போட்டிகளில் முதல்முறையாக இம்முறை தமிழீழம் சார்பாக தமிழ் ஈழ அணி பங்குபற்றியது. இதில் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் இருந்து தமிழ் உதைபந்தாட்ட வீரர்கள் கலந்து கொண்டனர்.

இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் இப்போட்டிகளில் இம்முறை தமிழீழம், டார்புர் குருதிஸ்தான், வடசைப்ராஸ், ரேடியா, ஒக்சிரான்ரியா, புரோவென்ஸ், மேற்கு சகாரா, சான்சியா ஆகியன விடுதலைக்காக போராடும் தேசிய இனங்களை சார்ந்த அணிகள் கலந்து கொண்டன. இந்த சர்வதேச தரத்தில் நடை-பெற்ற இவ் உலக கிண்ண போட்டிகளில் VIVA WORLD CUP 2012 தமிழீழ அணி பங்கு பற்றி 3 ஆட்டங்களில் தோல்வியை யும் ஒரு ஆட்டத்தில் வெற்றியையும் பெற்றமை ஒரு வரலாற்றுப் பெருமையாகும். சர்வதேச தரத்தில் விளையாடுவதற்கு 5 கனேடிய தமிழ் வீரர்கள் தெரிவு செய்யப்பட்டமை கனடாவில், கனேடிய தமிழர் விளையாட்டுதுறையின் செயல் திட்டங்களுக்கு கிடைத்த பெரும் வெற்றியும் கனேடிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப் பட்ட கனேடிய தமிழர் விளையாட்டுத்துறை (CTSA) க்கு சர்வதேச தரத்தில் கிடைத்த பெருமையும் ஆகும்.

# ஜேர்மனியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது இத்தாலி

14வது யூரோ கிண்ண கால்பந்து தொடரின் இறுதிப் போட்டிக்கு மூன்று முறை சாம்பியன் பட்டம் வென்ற ஜேர்மன் அணியை தோற்கடித்து இத்தாலி தகுதி பெற்றது. போர்ச்சுகல், ஸ்பெயின், இத்தாலி, இங்கிலாந்து ஆகிய அணிகள் அரையிறுதிக்கு தகுதிபெற்றன. போலந்து மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகள் இணைந்து நடத்தும் இத்தொடரின் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் போர்ச்சுகலை வீழ்த்தி ஸ்பெயின் அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. இந்நிலையில் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியில் மூன்று முறை சாம்பியனான ஜேர்மனி அணி, மற்றொரு முன்னாள் சாம்பியனான இத்தாலியுடன் மோதியது. ரசிகர்களின் எதிர்பார்ப்புக்கேற்ப இப்போட்டி முதலில் மிகவும் விறுவிறுப்பாக சென்று கொண்டிருந்தது. ஆனால் திடீரென ஆட்டம் இத்தாலி வீரர் மரியா பலோடெலியின் கைக்கு சென்றது. ஆட்டத்தின் 20-வது நிமிடத்தில் கசானோ கடத்தி கொடுத்த பந்தை தலையால் முட்டி பலோடெலி அருமையான கோல் அடித்தார்.

அந்த அதிர்ச்சியிலிருந்து ஜேர்மனி வீரர்கள் மீள்வதற்குள், ஆட்டத்தின் 36-வது நிமிடத்தில் அவர்களுக்கு அடுத்த அதிர்ச்சியையும் பலோடெலி அளித்தார். இம்முறை களத்தில் பம்பரம் போல புயல் வேகத்தில் செயல்பட்ட பலோடெலி, பந்தை வெகுதூரத்திலிருந்து தனி ஆளாகக் கடத்தி கொண்டுவந்து, கம்பீரமாக கோல் அடித்தார். இவ்வாறு ஆட்டத்தின் ஆரம்பம் முதலே இத்தாலி அணியினரின் கை ஓங்க ஆரம்பித்தது. ஜேர்மனி அணியினரும் சிறப்பாக ஆடினர். அந்த அணியின் மரியோ கோமெஸ் போன்ற வீரர்கள் சிறப்பாக ஆடினாலும், அவர்களால் கோல் அடிக்க இயலாமல் போனது. முதல் பாதியின் முடிவில் இத்தாலி அணி 2-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. ஆட்டத்தின் இரண்டாவது பாதியிலாவது பதில் கோல் அடிக்க வேண்டுமென ஜேர்மனி வீரர்கள் மேலும் தீவிரம் காட்டினர். ஆனால் இத்தாலி அணியின் கேப்டனும், கோல் கீப்பருமான கியான்லுகி பபன் சிறப்பாக செயல்பட்டு ஜேர்மனி வீரர்களின் அனைத்து முயற்சிகளுக்கும் முட்டுக்கட்டை போட்டார். இதனால் கோல் அடிப்பது ஜேர்மனி அணியினருக்கு எட்டாக்கனியாகவே இருந்தது.

இந்நிலையில் ஆட்டத்தின் 66-வது நிமிடத்தில் காலில் ஏற்பட்ட காயம் காரணமாக இத்தாலியின் நட்சத்திர வீரர் பலோடெலி வெளியேறினார். அவருக்கு பதிலாக மாற்று வீரராக டி நடாலி களம் புகுந்தார். விறுவிறுப்பாக ஆடிய இரு அணி வீரர்களும், கோல் அடிக்காமல் போயினர். 90-வது நிமிடத்தில் ஜேர்மனியின் ஓசில் தனக்கு கிடத்த பெனால்டி கிக் வாய்ப்பை பயன்படுத்தி கோல் அடித்தார். எனினும் கடைசி கட்டத்தில் அடிக்கப்பட்ட அந்த கோல் ஜேர்மனி அணிக்கு வெறும் ஆறுதலாகவே அமைந்தது. ஆட்டத்தின் இறுதியில் 2-1 என்ற கோல் கணக்கில் ஜேர்மனியை வீழ்த்தி இத்தாலி அணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது. ஞாயிற்றுக்கிழமை நடக்கும் இறுதிப்போட்டியில் இத்தாலி அணி, ஸ்பெயினை எதிர்த்து விளையாடுகிறது.



## போர்ச்சுகலை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது ஸ்பெயின்

யூரோ கிண்ண கால்பந்து போட்டியின் அரையிறுதிப் போட்டியில் போர்ச்சுகல் அணியை வீழ்த்தி நடப்பு சாம்பிய னான ஸ்பெயின் அணி இறுதிச்சுற்றுக்கு முன்னேறியது. இப்போட்டியில் போர்ச்சுகல் அணி, நடப்பு யூரோ சாம்பியன் மற்றும் நடப்பு உலக சாம்பியனான ஸ்பெயின் அணியுடன் மோதியது. போட்டியின் ஆரம்பம் முதலே இரு அணியினரும் ஆக்ரோசமாக விளையாடினர். குறிப்பாக போர்ச்சுகல் அணி யின் அணித்தலைவரும் நட்சத்திர வீரருமான கிறிஸ்டியானோ றொனால்டோவின் ஆட்டத்தில் அனல் பறந்தது. எனினும் ஸ்பெயின் வீரர்களும் சிறப்பாக ஆடியதால் போர்ச்சுகல் அணியினரால் எளிதாக கோல் அடிக்க இயலவில்லை. இதனால் முதல் பாதியின் முடிவில் கோல் எதுவும் அடிக்கப்படவில்லை.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியும் தொடக்கம் முதலே விறுவிறுப்பாக நடந்தது. றொனால்டோவின் ஆட்டத்துக்கு ஈடு கொடுத்து ஆடிய ஸ்பெயின் வீரர்கள் கோல் அடிக்க விடாமல் செய்தனர். விறுவிறுப்பாக ஆடிய இரு அணி வீரர்களும், ஒவ்வொரு நிமிடமும் ஒருவருக்கொருவர் மோதிக்கொண்டு தரையில் விழுந்தனர். போர்ச்சுகல் அணித்தலைவர் றொனால்டோ தனக்கு கிடத்த ப்ரீ கிக் வாய்ப்புகளை தொடர்ந்து வீணடித்தார். 90 நிமிடங்களின் முடிவிலும் கோல் எதுவும் அடிக்கப்படாததால், கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. கூடுதலாக வழங்கப்பட்ட 30 நிமிடங்களிலும் இரு அணியினராலும் கோல் அடிக்க இயலவில்லை. இம்முறை ஸ்பெயின் அணியினர் தங்களுக்கு கிடைத்த சில அருமையான வாய்ப்புகளை தவறவிட்டனர். இறுதியில் போட்டியின் முடிவை நிர்ணையிப்பதற்காக பெனால்டி "ஸூட் அவுட் வழங்கப்பட்டது. முதலாவது பெனால்டி 'ஸூட் வாய்ப்பில் ஸ்பெயின் வீரர் சேவி கோல் அடிக்க தவறினார்.

அவரது முயற்சியை போர்ச்சுகல் கீப்பர் அருமையாக தடுத்தார். போர்ச்சுகல் அணிக்கு கிடைத்த முதலாவது வாய்ப்பை அந்த அணியும் தவறவிட்டது. 2வது வாய்ப்பில் ஸ்பெயின் வீரர் கோல் அடித்தார். இம்முறை பதிலுக்கு போர்ச்சுகலும் கோல் அடித்தது. 3வது வாய்ப்பில் ஸ்பெயின் மீண்டும் கோல் அடித்தது. இம்முறை போர்ச்சுகல் வீரர் நானி பதில் கோல் அடித்தார். 4வது வாய்ப்பையும் ஸ்பெயின் வீரர் கோலாக மாற்றினார். பதிலுக்கு போர்ச்சுகல் அணியால் கோல் அடிக்க முடியாமல் போக ஸ்பெயின் 3-2 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. 5வது மற்றும் இறுதி வாய்ப்பில் ஸ்பெயின் மீண்டும் கோல் அடித்தது. இதனால் இறுதியில் பெனால்டி 'ஸூட் அவுட்டில் 4-2 என்ற கோல் கணக்கில் போர்ச்சுகலை வீழ்த்தி ஸ்பெயின் அணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது. நடப்பு சாம்பியனான ஸ்பெயின் அணி யூரோ கோப்பை இறுதிப்போட்டிக்கு தகுதி பெறுவது இது இரண்டாவது முறையாகும். தரவரிசைப் பட்டியலில் 100வது இடத்தில் உள்ள ரோசலிடம் நடால் அதிர்ச்சி தோல்வி கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் லண்டனில் நடைபெற்று வருகிறது. நடந்த 2-வது சுற்று ஆட்டத்தில் ஸ்பெயின் வீரரும் 11 முறை கிராண்ட்சிலாம் பட்டம் வென்றவருமான ரபேல் நடால்



**எஸ். கணேஷ்**

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# மாறும் அடமானக்கடன் - யூலை 09, 2012

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

**தொடர் - 369**

மாற்றம் ஒன்றே மாறாதது. புலி வருகிறது, வருகிறது என்று பலகாலம் எதிர்பார்த்து இப்பொழுது வந்து விட்டது. கனடிய மக்களின் சராசரிக் கடன் அதிகரிப்பு, ரொறொன்ரோ, வன்கூவர் நகரங்களின் ஆதனத்தின் அதீதவிலை அதிகரிப்பு கனடிய நிதி அமைச்சர் மற்றும் கனடிய மத்திய வங்கியின் ஆளுனர்களை பலகாலம் சிந்திக்க வைத்துள்ளது. இதனை அவர்களின் அண்மைய அறிக்கையின் மூலம் அறியக்கூடியதாகவே இருக்கிறது. அதன் முடிவே யூன் 21, 2012 அன்று நிதி அமைச்சரால் அடமானக்கடன் பெறுவதில்



ஏற்படுத்திய பல மாற்றங்கள். எனினும் இந்த அதிரடி அடமானக்கடன் மாற்றங்கள் யூலை 09, 2012 இல் இருந்தே அமலிற்கு வருகின்றது. ஏற்கெனவே அடமானக் கடன் பெற்றவர்களின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் ஏற்படாது. அத்துடன் இந்தத்திகதிக்கு முன்னர் பெறும் அடமானக்கடனிற்கும் இந்த புதிய கட்டுப்பாடுகளினால் மாற்றம் ஏற்படாது. இதன் முடிவாக நான்கு முக்கிய மாற்றங்கள் நடைமுறைக்கு கொண்டு வரப்படவுள்ளது.

இந்த மாற்றங்களின் முக்கிய நோக்கம், ஆதன வியாபாரத்தை சீராக வைத்திருப்பது. அதிக விலை அதிகரிப்பை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது.

1. நிதி நிறுவனத்தில் பெறப்படும் அடமானக்கடனை திருப்பி அடைக்கும் காலம் (Amortization) 30 வருடங்களிலிருந்து 25 வருடங்களாக குறைக்கப்படுகின்றது. (குறிப்பு: இவ்வாறு கடனைத்திருப்பி கொடுக்கும் காலம் குறைக்கப்படுவதால் மாதாந்த கொடுப்பனவு அதிகரிக்கும். ஆனால் மொத்தமாக நிதிநிறுவனத்திற்கு செலுத்தப்படும் மொத்த வட்டியின் அளவு குறிப்பிடப்படுமளவு குறையும். கடனை அடைக்கும் காலமும் குறைகின்றது. 1990 களில் 25வருட Amortization காணப்பட்டது என்பது முக்கிய விடயமாக அறிந்திருப்பது நல்லது.

2. ஆதனத்தை பாவித்து மீள கடன் எடுக்கும்போது (Re - Financing) ஆகக் கூடியது 80% வரையான கடனே பெறமுடியும். இப்பொழுது 85% வரையான கடன் பெறமுடிகின்றது. (குறிப்பு - ஆதனத்தை பாவித்து பெறும் கடன் குறைக்கப்படுகின்றது. அதிக பணத்தை ஆதனத்தை அடமானமாக வைத்து கடன்பெற்று செய்யும் மேலதிக செலவு கட்டுபடுத்தப்படுகின்றது. தனிப்பட்டவரின் கடனின் பழு குறைக்கப்படுகின்றது.)

3. அரசினால் காப்புறுதி செய்யப்படும் ஆதனத்தின் ஆகக்கூடிய பெறுமதி 1 மில்லியன் டொலராக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
(குறிப்பு - 1 மில்லியனிற்கு மேற்பட்ட விலையுள்ள வீடுகள் வாங்கும் போது குறைந்து 20% அளவான முதலீடு (Downpayment) செய்தல் வேண்டும்.

4. அடமானக் கடன் பெறும்போது, மொத்தக்கடனிற்காக மாதாந்தம் செலுத்தப்படும் தொகை மொத்த வருமானத்தின் 44% இற்கு குறைவாகவும் (Total Debt Service Ratio)

தொடர்ச்சி 10ஆம் பக்கம்


HomeLife/GTA Realty Inc. Brokerage* *Independently Owned & Operated



Raja Mahendran, P. Eng.
Broker/Owner

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

CONDO FOR RENT
KENNEDY & HWY 401
1 Bedroom condo for rent.
1 Parking,
1 Year old building.
Easy access. Rent $1100+

CONDO. FOR SALE
FINCH & MIDDLEFIELD



2 + Den condo.
Close to GTA Square.
Asking Price $229,000

OFFICE SPACE FOR LEASE / SALE
FINCH & MIDDLEFIELD
2 Room renovated.
Many uses Available.

OFFICE SPACE FOR LEASE



745 Sq.ft Embassy plaza.
2nd floor. All inclusive
Resonable rent. ($850)

CONVENIENCE STORE FOR SALE
Weekely sale (18k - 22k).
Lotto, video, CD, DVD.
Established store
Asking only $139,900.
Many other businesses can be done in this location.

BUSINESS SPACE FOR SALE
MARKHAM & STEELES
-700 Sq.ft
-731 Sq.ft
Price negotiable.
Building sale.

5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969 & 145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

# வாகன காப்புறுதியில் மேலதிகமான நட்டஈட்டு பிரிவுகள்

## EXTRA OPTIONAL COVERAGE

## கனடிய தகவல் தொடர் 175

மேற்குறிப்பிட்டவை அடிப்படையானது. ஆனால் விரும்பினால், ஏற்படலாம் என எதிர்பார்க்கும் ஆபத்துக்கு ஒரு பாதுகாப்பு தேவை என கருதினால் மேலதிக பணம் கொடுத்து பெற்று வைத்திருக்கும் நட்டஈட்டு பிரிவுகள் பின்வருமாறு!

(பொதுவாக விலை உயர்ந்த வாகனங்களுக்கு இம் மேலதிக நட்டஈட்டு பிரிவினை சகலரும் பெற்று வைத்திருப்பது வழமையாகும்)

1. தப்பான மோதலில் உருவாகும் பாதிப்பு களுக்கு நட்டஈடு (Collision or Upset)

தங்களின் தப்பினால் தங்களின் வாகனத்திற்கு ஏற்படும் பாதிப்புகளுக்கான நட்டஈட்டு பிரிவுகளே இதுவாகும். தங்களின் தப்பு வாகன விபத்தில் பின்வரும் நிலைகளில் ஏற்படலாம்.

1. இன்னொரு வாகனங்களுடன் ஏற்பட்ட விபத்தில் ஏற்படலாம்.

2. ஏதாவது ஒரு சுவருடன் அல்லது மரங்களுடன் மோதியதில் வாகனத்திற்கு பாதிப்பு ஏற்படலாம்.

மேற்குறிப்பிட்ட நிலைகளில் இருந்து, ஆபத்துக்கள் உருவாகி தங்களுடைய வாகனத்திற்குரிய பாதிப்புகளுக்கு இப்பிரிவுகளில் இருந்து நட்டஈடு பெறும்போது, தொடர்ந்து புதுப்பிக்கும் போது காப்புறுதியின் மாத கட்டுபணம் அதிகரிக்கும்.

2. விபத்து அல்லது மோதல் என இல்லாத நிலையில் வாகனம் ஒரு இடத்தில் தரித்து நின்ற நிலையில் ஏற்படும் பாதிப்புகளுக்கு நட்டஈடு. (Comprehensive Coverage)

மோதல் அல்லது விபத்து என இல்லாது வேறு ஏதாவது வழிகளில் வாகனத்திற்கு ஏற்படும் பாதிப்புகள் இப்பிரிவில் அடங்கும். பின்வரும் நிலைகளில் வாகனத்திற்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு இப்பிரிவில் இருந்து நட்டஈடு பெறுவதனை இங்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

1. கண்ணாடிகள் உடைதல்
2. தீ பிடித்தல்
3. இயற்கையின் அழிவால் ஏற்படும் பாதிப்புகள்.
4. திருட்டு போதல்
5. மிருகங்களினால் வரும் பாதிப்புகள்.

போன்ற பல்வேறு வகையான ஆபத்துகளினால் ஏற்படும் பாதிப்புகளை இங்கு குறிப்பிடலாம்.

இவ்விபத்து அல்லது மோதல் என எதுவும் இல்லாது வாகனம் ஒரு இடத்தில் தரித்து நிற்கும் போது, வாகனம் ஒன்றுக்கு ஏற்படும், ஆபத்துகள், பாதிப்புகள் என்பது பல வழிகளில், பல ரூபங்களில் ஏற்படலாம். அதனை வாகன காப்புறுதியில் இக் குறிப்பிட்ட ஒப்பந்த பிரிவில் பின்வரும் தலைப்பின் கீழும் குறிப்பிட்டு இருக்கலாம்.

1. குறிப்பிட்ட சில ஆபத்துக்களினால் மட்டும் ஏற்படும் பாதிப்புகளுக்கான நட்டஈடுகள் (Specified Perils). இப்பிரிவில் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட ஆபத்துகள் தவிர ஏனைய ஆபத்துக்களினால் ஏற்படும் பாதிப்புகளுக்கு நட்டஈடு கிடையாது.

2. சகல வகையான ஆபத்துக்களினாலும் ஏற்படும் பாதிப்புகளுக்கான நட்டஈடுகள். (All Perils)



இங்கு ஒரு இடத்தில் தரித்து நிற்கும் வாகனத்திற்கு என்னமாதிரி ஆபத்து ஏற்பட்டாலும் நட்டஈடு பெறலாம் என ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் ஒப்பந்தப் பிரிவு ஆகும்.

### வாடகை கார் தற்காலிகமாக வைத்திருப்பதற்கான நிவாரண பிரிவு

***(OPCF - 20 - Coverage for Transportaion Replacement)***

வாகன காப்புறுதி ஒப்பந்த பிரிவில் OPCF - 20 என இப்பிரிவும் மேலதிகமாக உள்ளடக்கப்பட்டு இருந்தால் அது இக்குறியீட்டில் காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

இவ் ஒப்பந்த பிரிவு சேர்க்கப்பட்டிருந்தால்

1. ஒரு நாளுக்கு குறிப்பிட்ட ஒரு தொகையில் குறிப்பிட்ட சில நாட்களுக்கு மட்டும் என அதாவது விபத்துக்குள்ளான வாகனம் திருத்தும் வரை அல்லது திருட்டு போயிருந்தால் அதற்குரிய நட்டஈடு பணம் காப்புறுதி கம்பனியிலிருந்து கிடைக்கும்வரை என ஒரு தொகையை காப்புறுதி கம்பனி வழங்கும்.

2. போக்குவரத்துக்கு என இக்காலங்களில் Taxi க்கு அல்லது அரச போக்குவரத்து வாகனங்களுக்கு என செலவழிக்கும் பணத்தினையும் இங்கு இப்பிரிவில் இருந்து மீளப் பெறலாம்.

### குடும்ப பாதுகாப்பு ஒப்பந்த பிரிவு

***(Family Protection Endorsement - OPCF - 44)***

வாகன காப்புறுதி பத்திரத்தில் OPCF - 44 என்னும் குறியீடு குறிப்பிடப்பட்டிருந்தால் இங்கு குடும்ப பாதுகாப்பு பிரிவு என ஒரு மேலதிக பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது என்பதாகும்.

இப்பிரிவினை மேலதிகமாக சேர்த்து ஒப்பந்தத்தில் வைத்திருப்பதால் என்ன மாதிரியான பாதுகாப்பு இங்கு கிடைக்கும்? இதுவே இங்குள்ள ஒரு கேள்வி.

ஒருவருக்கு வாகன விபத்துகளில் உடல் காயம் ஏற்பட்டால் ஒரு குறிப்பிடப்பட்ட ஒரு தொகை வரையே நட்டஈடு பெறலாம் என்பதுடன் காயமடைந்தவரின் பராமரிப்பில் மனைவி, பிள்ளைகள் என எவராவது தங்கியிருந்தாலும் ஒரு குறிப்பிட்ட ஒரு தொகை வரையே நட்டஈடு பெறலாம்.

ஆனால் இவ் ஒப்பந்த பிரிவு மேலதிகமாக சேர்த்து வைத்திருந்தால், பாதிப்பு என்பது சாதாரணமாக நட்டஈடு வழங்கும் எல்லையினை கடந்து மேலதிகமாக இருந்தால், பாதிப்புக்குள்ளானவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் இம்மேலதிக பிரிவில் இருந்து நட்ட ஈடு பெறும் வசதிகள் உண்டு.

### ஈட்டுக்கடன் நிறுவனத்தினை பாதுகாக்கும் ஒப்பந்த பிரிவு

(Mortgagees & Lienholders - OPCF - 23)

சில நேரங்களில் விலை கூடிய புதிய வாகனங்களை வங்கி அல்லது ஒரு நிதி நிறுவனம் வழங்கிய கடனில் வாங்கி விட்டு



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

**Sitham Sam Shanmugam** (Sales Rep)
**HomeLife/GTA Realty Inc.**
HOMELIFE HIGHER STANDARDS
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

High Demand in Future
Big lots, Acre land
Bungalow
1, 2 Acres
HWY 48, Stouffville
New Market


Daisy Mart
Brand New
convenience store at Tim Hortons
North of Newmarket
at Leslie Main Road

10% profit appreciation
brand new homes
3,000 sqft.
only $5,000 deposit
February 2014 closing
Near HWY 400

For Sale
Markham & Ellesmere
3 Bedrooms Condo.
for sale

10 % down / commercial mortgage/ Private lenders
Antony P. Thangarajah
Mortgage Agent
Dir.: 416.457.0651
Tel./Fax: 416.431.5115

Renovate and Sell
Old detached
bungalow near
University of Toronto


Sell your home
faster
and more money
Guildwd/Kingston
$346,000
3+1 Bedrooms, 2 W Rooms
Fireplace
Markham/Eglinton
$349,900
2 Bedrooms, 2 W Room
Ceramic Floor
Harmony/Coldstream
$407,900
3 Bedrooms, 3 W Rooms
Brimley / Denison
$399,900
3 Bedrooms, 2 W Rooms
Ceramic ,Hardwood Floor
Ravenscroft/Rossland
$429,900
3 Bedrooms, 3 W Rooms
Combined W/Dining
9th Line/ Hwy 7
$479,800
3 Bedrooms, 3 W Rooms
Ceramic Floor
9th Line And Hoover Park
$498,000
3 Bedrooms, 3 W Rooms
Hardwood ,Ceramic Floor
Mccowan & Denison
$519,000
4 Bedrooms, 3 W Rooms
W/O To Yard
Neilson & Finch
$519,900
3+1 Bedrooms, 4W Rooms
Ceramic,Parquet Floor
Mccowan/Hwy 7
$599,000
3 Bedrooms, 3 W Rooms
Hardwood Floor
16th Ave/Hwy 48
$599,900
4 Bedrooms, 3 W Rooms
Ceramic Floor
Bur Oak/9th Line
$619,000
4 Bedrooms, 3 W Rooms
Hardwood, Ceramic Floor
Markham/S. Of Steeles
$695,000
4 Bedrooms, 4 W Rooms
Ceramic, Hardwood Floor
Ravenshoe Rd /Hwy48
123 Acres
$649,000
Property for Sale
9th Line/ 407
$699,000
4 Bedrooms, 3 W Rooms
Hardwood,Ceramic Floor
When you list your home with Mike,you receive these Guarantees.
Your home advertised 24 hours a day until it is sold
Your home advertised in full color prints ads every week until it is sold
Our team of specialists for the same price as hiring a single agent
Your home sold in 90 days or we buy it
KZG 647-200-5833
RE/MAX
PhI-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770
Elaguppillai Srinathan (Mike) B.Sc
Sales Representative
Direct 416 - 276-1225
Email: esrinathan@trebnet.com
I can also assist you Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# குழந்தையும்...

### 04ஆம் பக்கத்தொடர்ச்சி

குழந்தையின் அறிவினை அழிப்பது, மனிதகுலத்திற்குச் செய்யும் துரோகமாகும். ஏனெனில் வருங்கால உலகம் அவர்களது மூளையைக் கொண்டே அமையவுள்ளது, இல்லையா? நாம் இந்த உலகில் மிக அழகானவற்றை உருவாக்கப்போகிறோமா அல்லது அழிவுமிக்க அணுகுண்டுகளை உருவாக்கப்போகிறோமா அல்லது அதைவிட இன்னும் அழிவுதரக் கூடியவற்றினை உருவாக்கப்போகிறோமா என்பது, மனிதனின் உணர்ச்சிகள், புத்திசாலித்தனம், மற்றவை எவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன என்பதனைப் பொறுத்துத்தான் உள்ளது. அந்தவிதமாகத்தான் அவன் அவனது புத்திசாலித்தனத்தை உபயோகப்படுத்தப் போகிறான். அதைத்தான் உலகில் அவன் உருவாக்கப்போகிறான்.

வரமாக இருக்கவேண்டிய கல்வி சாபமாக இருக்கிறது. நமது நல்வாழ்விற்கெதிராக புத்திசாலித்தனம் திசைமாறினால், அது புத்திசாலித்தனமே இல்லை. தற்போது மனித புத்திசாலித்தனம் இப்படித்தான் உள்ளது. இது ஒரு வரமல்ல, இது சாபம். மனிதனுக்கு இருக்கும் ஒரு மிகப்பெரிய வரம், அவனுடைய புத்திசாலித்தனம் தான். ஆனால் இப்பொழுது இந்த புத்திசாலித்தனமே மனிதகுலத்திற்கு ஒரு பெரிய சாபமாய் உள்ளது. ஏனென்றால், ஒரு மனிதன் மிக நன்றாய் ஒருங்கிணைக்கப்பட்ட மனிதனாக வெளிவருவதில்லை, அவன் தன்னுள்ளேயே பிளவுபட்டு இருக்கிறான். இதுபோன்ற புத்திசாலித்தனம் ஆபத்தானது. நீங்கள் ஒரு கழுதையாக இருந்தால் உங்களால் உதைக்க மட்டுமே முடியும். அதற்குமேல் எதுவும் செய்யமுடியாது. உங்களால் விளையக்கூடிய அதிகபட்ச வன்முறை, உங்கள் இரு கால்களினால் ஒரு உதை கொடுப்பதுதான். ஆனால் இப்பொழுது மனித புத்திசாலித்தனம் மிகவும் ஆபத்தானதாக மாறியுள்ளது. எது வரமாக இருக்கவேண்டுமோ, அது இன்று மிகப்பெரிய சாபமாக இருக்கிறது. அதில் கல்வி நிச்சயமாக ஒரு பெரும் பங்கினை வகிக்கிறது.

எந்தவிதமான நம்பிக்கையும் கருத்துக்களும் திணிக்கப்படாமல் இருந்தால், ஒரு குழந்தை தனக்குத் தேவையானதைத் தானே தேர்வு செய்துகொள்ளும் கல்விமுறையால் குழப்பப்படாமல், எந்த ஆதிக்கமும் இன்றி, எந்த மதமும் இன்றி, எந்தவிதமான நம்பிக்கையும் கருத்துக்களும் திணிக்கப்படா மல் இருந்தால், ஒரு குழந்தை தனக்குத் தேவையானதைத் தானே தேர்வு செய்து கொள்ளும். எப்பொழுது நீங்களே உங்களுக்குத் தேவையானதைத் தீர்மானிக்க அனுமதிக்கப்படுகிறீர்களோ, அப்பொழுது இயல்பாகவே நீங்கள் உள்நோக்கிப் பார்ப்பீர்கள். பைபிளையோ, கீதையையோ அல்லது இந்த மனிதர் சொல்வதையோ அந்த மனிதர் சொல்வதையோ கேட்கிறீர் களென்றால், அப்பொழுது உள்நோக்கிப் பார்க்க மாட்டீர்கள். ஏனெனில் ஏற்கெனவே யாரோ உங்கள் அருகில் உட்கார்ந்து உங்கள் காதில் ஓதிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அதுபோன்ற எதையும் படிக்காமல், வாழ்க்கையைப் பற்றி நீங்களாகவே சிந்திக்க ஆரம்பிக்கும்போது, வாழ்க்கையைப் பார்க்க ஆரம்பிக்கும்போது, இயல்பாகவே நீங்கள் பார்க்க வேண்டிய ஒரே இடம் உங்கள் உள்நிலைதான், இல்லையா? வேறெங்கு நீங்கள் பார்ப்பீர்கள்?

பெரும்பாலான மக்கள் தங்கள் இயல்புப்படி வாழாமல், தங்கள் மேல் சுமத்தப்பட்ட கல்விய நிவின்படி வாழ்வதாலேயே, ஆன்மீகம் என்பது அவர்களது வாழ்வில் அதிதொலைவில் உள்ளது. ஒரு குழந்தை எதைப்பற்றியும் எந்தவிதமான கற்பனையும் இல்லாமல், எந்தவொரு முட்டாள்தனமும் இல்லாமல் வளர்ந்தாலே, அவன் இயல்பாகவே ஆனந்தத்தில் இருக்கிறான். மற்றவரின் தாக்கமின்றி, தன் இயல்பான தன்மையுடன் வாழ்ந்தாலே, சுய புத்திசாலித்தனத்துடன் வாழ்ந்தாலே, ஆனந்தமாய் மாறுவது இயல்பாய் அவனுக்குள் நிகழும். ஆனந்தமாய் மாறுவதுதான் இறுதி இலக்கு, இல்லையா?

- *சத்குருவின் உரைகளிலிருந்து*

# மாறும் அடமானக்கடன்...

### 07ஆம் பக்கத்தொடர்ச்சி

(TDSR) அடமானக்கடனின் கொடுப்பனவும் முதல் + வட்டி, சோலைவரி, வெப்பமாக்கல், குளிராக்கல், மாதாந்த பராமரிப்பு செலவு (Maintenance Fee) போன்றவற்றின் கொடுப்பனவு மற்றும் Gross Debt service Ratio வருமானத்தின் 39% இற்கு குறைவாகவும் காணப்படுதல் வேண்டும். முதல் + வட்டி + சோலை வரிகள் மொத்த கொடுப்பனவு.

கடந்த சில காலங்களாக வட்டிவீத அதிகரிப்பு என்ற பதம் கூறிவந்த போதிலும் உலகளாவிய பொருளாதாரம் மிகவும் இக்கட்டான நிலையில் இருப்பதால் வட்டிவீத அதிகரிப்பு இலகுவானதாக இருக்கமுடியாது. ஆனால் ரொறொன்ரோ, வன்கூவர் நகரங்களின் ஆதன விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த இவ்வாறான நடவடிக்கைகள் தேவை என்பதனை பொருளாதார விற்பனர்கள் தெளிவுபடுத்தி யுள்ளார்கள். இந்த மாற்றங்களின் தாக்கம் விரைவில் காணக்கூடியதாக இருக்கும்.

குறிப்பு:

1. கனடிய மக்களின் சராசரிக் கடன் அவர்களின் வருமானத்தின் 152% ஆக அதிகரித்துள்ளது.

2. Toronto பெரும்பாகத்தில் மே 2012 -



சராசரி வீட்டுவிலை $516, 787.

3. CMHC (Canada Mortgage & Housing Corporation) இனால் வழங்கிய காப்புறுதியின் பெறுமதி 2007 இல் $345 Billion. 2011 $567 Billion.

# கனடா வீதி...

### 08ஆம் பக்கத்தொடர்ச்சி

இக்கடனை மாதா மாதம் ஒரு சிறு வட்டியுடன் திரும்பி செலுத்த வேண்டிய நிலையில் ஒருவர் இருக்கலாம். உதாரணமாக $25,000 டொலர் பெறுமதியில் எதுவித முரண்பாடும் இன்றி வாகனத்தினை ஒருவர் வாங்கும் போது முழுப்பணமும் மாதா மாதம் செலுத்தி முடிக்கும் வரை வாங்கிய வாகனம் நிதி நிறுவனத்தின் அடமானத்திலேயே இருக்கும். கடன் தொகையினை திருப்பி செலுத்த தவறினால் கடன் வழங்கிய நிதி நிறுவனத்தினால் வாகனம் சட்டரீதியாக பறிமுதலாகி விடும். ஆனால் இதே வாகனம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் திருட்டு போனால் அல்லது விபத்தில் பூரணமாக திருத்த முடியாது உபயோகமற்ற நிலைமைக்கு தள்ளப்பட்டால் இழப்பு நடந்த நேரம் எவ்வளவு தொகை பெறுமதியோ அதே தொகையினையே காப்புறுதி கம்பனி கொடுத்து தீர்க்கும்.

உதாரணமாக காப்புறுதி கம்பனி இத்தகைய நிலையில் $15,000 டொலர் மட்டுமே வழங்கியிருந்தது என வைத்துக்கொள்வோம். ஆனால் ஈட்டு கடனின் மிகுதி தொகை $20,000 டொலர் என இருந்து. மிகுதி $5,000 டொலர் தொகையினையும், ஈட்டு கடன் நிறுவனத்திற்கு வாகன உரிமையாளர் எப்படி கொடுத்து தீர்ப்பார்?

இத்தகைய நிலையில் ஈட்டுக்கடன்காரரை பாதுகாப்பதுடன், வாகன உரிமையாளருக்கும் உள்ள பிரச்சினையினை தீர்ப்பதற்காக

அடிப்படை வாகன காப்புறுதி பிரிவுகள் என்பது (One way Insurance Covergae) சட்டரீதியாக, கண்டிப்பாக பெற்று வைத்திருக்க வேண்டியவை. அவையாவன பின்வருமாறு

1. மூன்றாம் நபர் பொறுப்பு காப்புறுதி (Third Party Liability Coverage)

2. உடல் காயங்களுக்கான நட்டஈட்டு பிரிவு (Accident Benefits)

3. தப்பு எதுவும் இல்லாத நிலையில் தங்கள் வாகனத்திற்கு ஏற்படும் பாதிப்புக்களுக்கு வழங்கும் நட்டஈட்டு பிரிவு (Direct Property Compensation Damage-no fault Coverage)

4. காப்புறுதியில்லாத வாகனத்துடன் ஏற்பட்ட விபத்தில் நட்டஈடு (Uninsured & Unidentified Coverage)

மேலதிகமாக ஒப்பந்தத்தில் சேர்க்கப்படும் பிரிவே (OPCF- 23) இதுவாகும்.

# ஜேர்மனியை...

### 06ஆம் பக்கத்தொடர்ச்சி

அதிர்ச்சி தோல்வி அடைந்தார். நேற்றைய ஆட்டத்தில் 2-வது வீரரான ரபேல் நடால் டென்னிஸ் தரவரிசையில் 100-வது இடத்தில் இருக்கும் செக்குடியரசு வீரரான லூகாஸ் ரோசலுடன் மோதினார். இதில் 6-7, (9.`.11), 6-4, 6-4, 2-6, 6-4 என்ற செட் கணக்கில் நடாலை ரோசல் வீழ்த்தினார். இந்த தோல்வியின் மூலம் நடால் 2-வது சுற்றிலேயே வெளியேற வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டது. நடாலை வீழ்த்திய ரோசல் இதுவரை 5 முறை மட்டுமே விம்பிள்டன் போட்டிகளில் விளையாடி இருக்கிறார். ஆனால் அவர் முதல் சுற்றுக்கு மேல் தகுதி பெற்றது இல்லை. ஆனால் இப்போது 2008 மற்றும் 2010 விம்பிள்டன் சாம்பியனான நடாலை வீழ்த்திய பெருமை பெற்றார்.

ஏற்கனவே 2005 விம்பிள்டன் போட்டியில் ஒருமுறை நடால் இதுபோல் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். அப்போதும் 2-வது சுற்றில் முல்லரிடம் தோற்றார். அதன்பிறகு இப்போது மிக மோசமான தோல்வியை நடால் சந்தித்து இருக்கிறார். இதில் தோற்றதன் மூலம் நடால் ஒலிம்பிக் போட்டியில் விளையாடும் வாய்ப்பை இழந்தார்.


Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
**Cell: 613 850 9931**

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

**Buying or Selling**

**Relocation Service**
**Ottawa> > > < < < GTA**



நந்தா ஐயாத்துரை

**Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555**

# நற்பொருள் நாற்பது

ஏதமிலார் மக்கட் பிறப்பின் இயல்பறிவார்
சாதிகளைப் பாரார் சமுதாயம் - பேதமின்றி
வையகத்தில் ஒற்றுமையாய் வாழ வழிவகுத்து
நெய்விளக்காய் ஏற்றிடுவார் நீதி. (32)

சாதிபே தங்கள் தமிழர் சரித்திரத்தில்
ஆதிமுதல் இல்லையவர் ஆட்சியிலே - நீதிமுறை
காத்தவரும் காணாத சாதிமுறை கண்ணிழந்த
சாத்திரிகள் செய்த சதி. (33)

பாடும் குயில்போல ஆடும் மயில்போல
ஈடில் எழுத்தாளர் எப்போதும் - பீடார்
இலக்கியங்கள் நன்றே இயற்றுவராம் இந்த
நிலக்கவலை நீக்க நினைந்து. (34)

தயிரும் இரசமுமில்லாச் சாப்பாட்டைப் போன்ற
நயமில் இலக்கியங்கள் நாட்டும் - முயலொன்றை
அம்பெய்தி ஐம்பதுபேர் ஆராய்ந்து செய்கின்ற
கொம்பில்லை என்னும் கொலை. (35)

உண்மை உளத்தூய்மை ஓம்பல் உயிர்பேணல்
வண்மை வழங்குவது மற்றின்னும் - திண்மை
திறஞ்செய்தல் மக்கள் சிறக்கப் பொதுச்சேவை
அறஞ்செய்தல் தொண்டாம் அறி. (36)

செய்யும் உதவிகளைச் செய்திகளாற் கையுடனே
வையம் அறியவைக்க மாயாதீர் - தெய்வம்
அருள அறப்பணிகள் ஆற்றினமென் றெண்ணிப்
பொருளீயும் வேண்டாம் புகழ். (37)

புகழுக்குச் செய்வாரின் போலி ஒருநாள்
பகலுக்கு வந்தாகும் பார்த்து - முகத்துக்கு
நின்ற புகழும் நிலையாது நீங்குமென்றும்
பொன்றாப் புகழே புகழ். (38)

வானம் வறண்டாலும் வற்றாக் கடல்போல
மானத் தவர்வறுமை வந்தாலும் - ஈனக்
கரமேந்தி நில்லார் கடுமுயற்சி யாலே
உரமேற நிற்பார் உயர்ந்து. (39)

ஒன்றினைச் செய்தால் உதவி பலவற்றை
நன்றுபின் பெற்றே நலம்பெறலாம் - என்றெண்ணி
தூய குணத்தார் துயர்வரினும் செய்வதில்லை
ஆயதமிழ்ப் பண்பும் அது. (40)

நூற்பயன்

நற்பொருள் நாற்பதையும் கற்பவர்கள் நானிலத்தில்
பொற்புறவே வாழ்வர் புவிபோற்ற - எப்பொழுதும்
நற்பணிகள் செய்தாலும் சொற்புகழை நாடாத
விற்பனரின் மாண்பிமய மாண்பு.

நற்பொருள் நாற்பது
முற்றும்.



கவிஞர் வி. கந்தவனம்


**50** PARTY HALL
EVENT CENTRE
MEETING PLACE
AVAILABLE FOR RENT

*Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting,* புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய *50* பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு.

*GTA Square Mall (FINCH & MIDDLEFIELD*
தொடர்புகளுக்கு: *416.917.6883*

TBC Toronto Business College
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்

SECOND CAREER
- EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
- 2005ம் ஆண்டுக்குப் பின் வேலை இழந்தவர்கள்
- 5 வருடங்களுக்குள் Maternity Benefits பெற்றவர்கள்

அரசாங்க நிதி உதவியில் இலவசமாகக் கற்று உங்கள் எதிர் காலம் மிளிர்வதைக் காண்பீர்கள்.
Tuition Fees, Books, Living Expenses, Daycare, & Transportation up to $28,000 Free Funding.

ODSP, WSIB Recepients & New Immigrants Welcome

ACCOUNTING & PAYROLL ADMINISTRATOR
35 WEEKS
NEW



JOB OPPORTUNITIES
- Payroll Clerk
- Pay Clerk
- Payroll & Benefit Clerk
- Accounting & Payroll Clerk
- Accounts Assistant

COMPUTERIZED ACCOUNTING DIPLOMA
26 WEEKS

JOB OPPORTUNITIES
- Accounts Clerk
- Accounts Receivable
- Accounts Payable
- Bookkeeper
- Accounts Assistant



MEDICAL OFFICE ADMINISTRATOR DIPLOMA
32 WEEKS



JOB OPPORTUNITIES
- Medical Secretary
- Medical Office Assistant
- Hospital Ward Clerk
- Medical Office Administrator
- Medical Record Clerk

PERSONAL SUPPORT WORKER DIPLOMA
26 WEEKS

JOB OPPORTUNITIES
- Patient Care Aide
- Hospital Attendant
- Long Term Care Aide
- Nurse Aide
- Personal Support Worker



CERTIFICATE COURSES
- Windows
- MS Office
- Quickbooks
- Simply Accounting
- Accpac
- Food Handler
- Medical Transcription
- First Aid & CPR
- OHIP Billing

4465 Sheppard Avenue East, Suite 208
Toronto (Sheppard & Brimley)
info@tbcollege.com www.tbcollege.com
416-291-5155
Registered as a Private Career College under the the Private Career College Act 2005

# Universal Community Help

## *1. EXPRESS METRO HOUSING*

வருமானம் குறைந்தவர்களுக்கும், Shelter இல் வசிப்பவர்களுக்கும், முதியவர்கள், தனியே வாழ்பவர்கள், தனிப்பெற்றோர் புதிய குடிவரவாளர்கள் அனைவருக்கும் கூடிய விரைவில் 4 கிழமை தொடக்கம் 3 மாதங்களில் Subsidized House பெற்றுத்தருவோம்.

## *2. WALKER OR WHEEL CHAIR OR SCOOTE*

இதனுடன் Washroom உட்பட 15,000 டொலர் பெறுமதியான பொருட்களை குறைந்தது 3 மாதத்தில் பெற்றுத்தருவோம். WALFARE OR O.D.S POR WSIB OR PENSION இருப்பவர்கள் உடனே விண்ணப்பிக்கவும். அரச அனுமதி பெற்ற Occupational Therapist ஒருவர் எம்முடன் இணைந்து கடமையாற்றுகிறார். June 7, 8, 16, 18, 23, 25 ஆகிய திகதிகளில் விசேட நேர்முகத் தேர்வுகள் உண்டு.

## *3. FOOT CARE CLINIC*

கால்களில் பல்வேறு காரணங்களால் பாதணிகள் பாவிக்க முடியாமல் இருப்பவர்களுக்கு Free Medicated Shoes 3 மாதங்களில் பெற்றுத் தருவோம்.

4. இலங்கை, இந்தியத் தூதரகங்கள் ஊடாக உங்களுக்குத் தேவையான கடவுச்சீட்டு, அடையாள அட்டை, பிறப்பு, இறப்பு, விவாக மரண விவாகரத்துப் பத்திரங்கள் பெற்றுக் கொடுக்கப்படும்.

5. கனடியக் குடிவரவு சட்டப்படி Sponcer செய்து தாமதமாக இருப்பவர்களுக்கு துரிதப்படுத்தி வரவசதி செய்து கொடுக்கப்படும். இலங்கை இந்திய பாகிஸ்தானியர்களும் தொடர்பு கொள்ளலாம்.

6. Separation ஆக இருப்பவர்கள் அனைவர்க்கும் Quick Divorce Certificate வசதி செய்து தரப்படும். இருவரும் தனித்தனி அல்லது இருவரும் முன் கூட்டியே அனுமதி பெற்று வரவும்.

7. எமது பயிற்சி பெற்ற வைத்தியர்கள் மூலம் Special Diet Allowance Form அத்தாட்சிப்படுத்திக் கொடுக்கப்படும்.

8. நீண்டகாலமாக Tax Return பெற்றுக் கொள்ளாமல் தவறவிட்டவர்கள் Special Re Tax Return Service மூலம் Revenue Canada பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும்.

## 9. தானம் - தர்மம் - தொண்டு

புதிய குடிவரவாளர்களே ***Vegetarian Food Bank or U.C.H or Thiruchchenchdoor Murugan Temple*** தொண்டர்களுடன் இணைந்து கொள்வதன் மூலம் அரச உதவியாக 6 மாதப் பணமாக 600 டொலரையும் முதல் மாதம் மேலதிகமாக 250 டொலரையும் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்டுள்ள சகல சேவைகளுக்கும் ஆகக் குறைந்த அலுவலகக் கட்டணம் அறவிடப்படும்.

## *10. Food handling certification certified food handle training.*

## *11. UCH Legal Clinic*

## தொடர்புகளுக்கு: *416.744.3011*

**Office Hours -** 11.00 Am to 4.00 Pm
*Monday to Sunday -* 416.744.4357
12.00pm to 10.00 pm
*Monday to Sunday -* 416.554.5040
9.00 am to 9.00 pm
*Special hot line*

***Unite - B - 5***
***2370 Midland ave***
***Midland & Sheppard***
***M1S 5C6***

***Unit - E***
***3005 Isilington Ave.***
***Steel & Isilingtion***
***M9L 2K9***

# அழகாக இருப்பதன் இரகசியம்

## ஓடும் நீர் உறைவதில்லை 145

உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் உயிரினங்களில் மனிதன் மட்டுமே அழகாக இருக்கவேண்டும் என்பதில் தனது நேரத்தையும் வளங்களையும் பயன்படுத்திக் கொள்கிறான். ஒவ்வொருவரும் உருவ அமைப்பில் வேறுபட்டிருப்பினும் தம்மை அழகாக்கிக் கொள்ள வேண்டும் என்பதில் மிகவும் அக்கறை கொண்டுள்ளனர். அழகாய் இருப்பதற்கான வழிமுறைகளும் அதற்கான பயன்பாட்டுப் பொருள்களும் சந்தைப்படுத்தப் படுகின்றன. எத்தனையோ நவீன உபகரணங்களும் தொழில் நுட்ப வசதிகளும் ஒருவர் அழகாக இருப்பதற்கு அவசியமான வையாக அமைக்கப்பட்டுவிட்டன. அழகு படுத்தலில் ஏற்படும் போட்டிகளால் அறுபது களை இருபதுகளாகத் தோற்றமளிக்க வைக்கும் மாய வித்தைகள் கூட மிக மலிவாகக் கிடைக்கின்றன. இவை அனைத்தும் ஒருவரது தோற்றத்தின் உண்மைத் தன்மையை மாற்றியமைக்கும் ஒரு தற்காலிகமான நடவடிக்கைகளே. ஏனெனில் உண்மையான அழகு ஒரு பொழுதும் அதன் தன்மையை இழப்பதில்லை.

ஒருவரது உருவ அமைப்பின் வெளித் தோற்றத்தை அடிப்படையாகக் கொண்டு அழகானவர் என்றோ அல்லது அழகற்றவர் என்றோ அல்லது அசிங்கமானவர் என்றோ மதிப்பீடு செய்கின்றோம். இந்த மதிப்பீடு மனிதனால் மட்டுமே மேற்கொள்ளப்படு கின்றது. மரங்களோ, பறவைகளோ, மிருகங்களோ அல்லது ஏனைய உயிரினங்களோ இந்த மதிப்பீட்டை மேற்கொள்வ தில்லை. உண்மையில் மனிதன் மட்டுமே அழகு பற்றிய இரகசி யத்தை மறந்துவிட்டான். இங்கே மறந்து விட்டான் என்று கூறுவதற்கான காரணம் ஒரு காலத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் அழகின் இரகசியம் புரிந்திருந்தது. நாளடைவில் அந்த இரகசியத்தின் அடிப்படைகளை மறந்ததன் மூலம் அழகாக இருப்பதன் இரகசியத்தை மறந்துவிட்டான். அழகின் இரகசியம் என்ன என்பதில் முதலாவதாக நாம் நினைவு படுத்திக் கொள்ள வேண்டியது எல்லாமே அழகு என்பதுதான். இயற்கையின் படைப்புக்கள் அனைத்தும் அழகானவையே. இயற்கை அழகானது என்பதில் ஒருவருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. அழகான ஒன்றால் படைக்கப்படுவதும் அழகானதே. இயற்கை தனது அழகைத் தொடர்ச்சியாக வைத்திருப்பதன் இரகசியமும் அதன் படைப்புக்களும் அழகானவையாக இருப்பதனால் தான். இயற்கையின் படைப்புக்கள் அத்தனையும் அழகானவை என்பதை நாம் புரிந்து கொள்வதற்கு மிகவும் இலகுவான வழி என்னவென்றால் ஒரு குழந்தையின் இயல்பை அவதானிப்பது தான். ஒரு குழந்தைக்கு அதன் பார்வையில் அகப்படும் ஒவ்வொன்றும் அதி உச்ச ஆனந்தத்தையும் பரவசத்தையும் கொடுக்கின் றது. குழந்தைகளுக்கு பார்ப்பதெல்லாம் அழகு மட்டுமே. இதுதான் இயற்கையின் இயல்பு. நாமும் குழந்தைகளாக இருந்த பொழுது இயற்கையின் படைப்பு



ஒவ்வொன்றினதும் அழகை முழுமையாக அனுபவித்தோம். குழந்தையின் இயல்பில் இருந்து விலக விலக அழகு என்பது ஒவ்வொருவரதும் தனிப்பட்ட தெரிவாக மாறிவிடுகின்றது. உதாரணமாக, மலர்கள் எல்லாமே அழகாக இருந்தன. இப்போது ஒருவருக்கு ரோசா அழகு இன்னொருவருக்கு மல்லிகை அழகு என்றாகிவிட்டது. அழகு எப்பொழுது தெரிவுக்கு உட்படுகின்றதோ அப்பொழுது அதன் முழுமைத்தன்மை இழக்கப்பட்டுவிடுகிறது.

அடுத்ததாக, அழகாக இருப்பதற்கான இரகசி யம் என்னவென்று பார்ப்போம். இயற்கையின் படைப்பு ஒவ்வொன்றும் உயர்வு தாழ்வுகளுக்கு இடமற்ற வகையில் அழகானவை. ஒவ்வொன்றும் தனித்துவ மானவை. இந்தத் தனித்துவமே அழகின் இரகசியம். இப்போது தனித்துவத்தின் தன்மை என்ன என்பதை நாம் புரிந்து கொள்ளல் வேண்டும். அதற்கு மலர்களை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். மலர்களை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வதற்கான காரணம், அழகு என்றவுடன் நம் எல்லோரதும் நினைவுக்கு வருவது மலர்களே. இப்போது மலர்கள் அழகாக இருப்பது மட்டும் அல்லாமல் தொடர்ச்சியாகவும் அந்த அழகைத் தக்க வைத்துக் கொள்கின்றனவே எப்படி என்பதை அவதானிப்போம். முதலில் நாம் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம் என்னவெனில் ஒவ்வொரு மலரும் தனித்துவமானது என்பது தான். ஒரே செடியில் மலருகின்ற மலர்களாக இருந்தாலும் சரி அல்லது வெவ்வேறு செடி களில் மலருகின்ற மலர்களாக இருந்தாலும் சரி ஒவ்வொரு மலரும் தனித்துவமானதே. அதாவது இயற்கையின் சிறப்பு என்னவெ னில் அது ஒன்றைப் போல் இன்னொன்றைப் படைப்பதில்லை. உதாரணமாக, ஒரு செடியில் நான்கு மலர்கள் மலர்ந்திருந்தால் ஒன்றைப் போல் மற்றையது இருப்பதே இல்லை. இதனைத் தான் தனித்துவம் என்கிறோம். அதாவது இயற்கையால் படைக்கப்படும் ஒவ்வொன்றும் பிரதியீடு செய்யமுடியாதது என்பதாகும்.

இப்போது மலர்கள் அழகாக இருப்பதற்கான இரகசியத்தைப் பார்ப்போம். மலர் ஒன்று அழகாக இருப்பதற்கு அது மூன்று இயல்புகளைத் தன்னகத்தே கொண்டி ருக்கின்றது. முதலாவதாக, அந்த மலர் தன்னை மற்றவற்றுடன் ஒரு பொழுதும் ஒப்பீடு செய்வதில்லை. ஏனெனில் தன்னைப் போல் இன்னொன்று உருவாக்கப்படுவ தில்லை என்ற இயற்கையின் சிறப்பு அதற்குத் தெரியும். இரண்டாவதாக, ஒரு மலர் இன்னொன்றுடன் போட்டியிடுவதில்லை. ஏனெனில் தனித்துவம் என்பது போட்டிக்கு அவசியமில்லாதது. மூன்றாவதாக, ஒரு மலர் இன்னொரு மலருக்காகவோ அல்லது வேறு ஒன்றுக்காகவோ தனது சுய இயல்பை மாற்றிக் கொள்வதில்லை. இந்த மூன்றுமே ஒரு மலர் தனது அழகை அதன் வாழ்காலம் வரை தொடர்ச்சியாக வைத்திருப்பதற்கு அடிப்படைகளாகின்றன. மலர்கள் மட்டுமல்ல, உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் அத்தனை உயிரினங்களும் இந்த மூன்று தன்மைகளையும் கொண்டிருப்பதால் அழகானவைகளே. நாங்கள் ஒவ்வொருவரும் அழகானவர்கள் தான். வாழும் காலம் முழுவதும் அந்த அழகை நாம் தொடர்ச்சியாக வைத்திருப்பதற்குத் தேவை நமது தனித்துவத்தைப் பாதுகாத்துக் கொள்வதுதான். நமது தனித்துவம் ஒப்பீடு அற்றது. போட்டி அற்றது. சுய இயல்பைத் தவிர வேறு எதையும் வெளிப்படுத்தாதது. இதுவே நாம் அழகாய் இருப்பதற்கான இரகசியமாகும்.

**KG Master**-kgmaster@rogers.com
www.kgmaster.com

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master

## உன்னை நீயே அறிந்துகொள்

பாலைவனம் சோலையாக மாற பருவமழை வேண்டும்.
பரவிய இருள் அகல விளக்கு ஒன்று வேண்டும்.
துன்பத்தின் அலை அகல இன்பத்தின் ஊற்று வேண்டும்.
உள்ளத்தில் அமைதி பெற உன்னையே நீ அறிய வேண்டும்.
உன்னையே நீ அறிவதற்கு ஆசானின் உதவி வேண்டும்.

**TORONTO** வில் மகராஜியுடனான நிகழ்ச்சி
**காலம்:** ஞாயிற்றுக்கிழமை July 8th, 2012.
**இடம்:** *Roy Thomson Hall, 60 Simcoe St., Toronto, Ontario M5J 2H5*

இதற்கான அனுமதி இலவசம். ஆனால் முன்கூட்டியே பதிவு செய்தல் அவசியம். ஆசன பதிவுகளுக்கு *www.wopg.org/en/events*
தொடர்பு கொள்ளவும்: **416.431.5000**

**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**

**மஹாராஜியின் உரைகள்**



| On DVD | On TV |
| --- | --- |
| இலவச DVDக்கு அழையுங்கள் (416) 431-5000 1 877 707 3221 | Saturdays at 11:00 am<br>Rogers Cable Channel - 20<br>Bell Express vu Channel - 219 |

# வெகுளாமை (Calm) - 17

வெகுளாமை கொண்டு வாழ்வதற்குத் தியானப் பயிற்சி எவ்வாறு பயனுள்ளதாக விருக்கும் என்று முந்திய கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன். மேலும் முழுமையான யோகாசனப் பயிற்சியும், வெகுளாமை கொண்டு வாழ்வதற்கு மிகவும் பயனுள்ள தென ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இது பற்றியும் சற்று விரிவாக இந்தக் கட்டுரையில் ஆராய்வோம். அடிக்கடி கோபம் கொள்ளும் ஒருவர் மன உளைச்சலுக்கும், விரக்திக்கும் உள்ளாவார். ஆழ்கடலில் தத்தளிக்கும் வள்ளம் போலாகக் கோபத்திற்குள்ளானவரின் மனம் தத்தளிக்கும். அவரினால் எந்த விடயத்திலும் சீராகக் கவனம் செலுத்த முடியாத நிலை ஏற்படும்.

கோபம் ஒருவரின் உடல்நிலையையும் கடுமையாகப் பாதிக்கின்றது. அதிக இரத்த அழுத்தம், வயிற்றுப் புண் போன்ற அறிகுறிகளுடன் கடுமையான மன அழுத்தம் மறைந்திருந்து தாக்கிக் கொண்டேயிருக்கும். நாங்கள் கோபம் கொள்ளும் பொழுது எங்களினால் மற்றவர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்ற பொதுவான கருத்திற்கு மேலாக கோபம் கொள்ளும் நாங்களும் கடுமையாகப் பாதிக்கப்படு கின்றோம் என்பதைக் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்தக் கட்டுரையில் முன்பு குறிப்பிட்டவாறு



சுவாசப்பயிற்சி, தியானம் போன்ற பல்வேறு வழிமுறைகள் இவ்வாறான சுய பாதிப்புக்களைக் குறைப்பதோடு மீண்டும் கோபம் கொள்ளும் சூழ்நிலையையும் தவிர்த்துக் கொள்ள உதவுகின்றன. ஆன்மீகவாதிகளும், ஆய்வாளர்களும் யோகாசனப் பயிற்சி கோபத்தை நெறிப்படுத்துவதற்கான ஒரு சிறந்த வழிமுறை என்பதை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். கோபத்தை நெறிப்படுத்து வதில் உள்மனதில் ஆழமாகப் பதிந்து கிடக்கும் விடயங்களைப் புரிந்து கொள்ளும் தன்மை வேண்டும். இதை யோகாப்பியாசனம், தியானம் போன்ற பயிற்சிகள் அளிக்கின்றன. உள் மனதில் உள்ள விடயங்கள் தீர்க்கப்படும் பொழுது கோபம் எழுவதற்கான காரணங்களும் இல்லாமல் போகின்றன என்று கூறிக்கொள்ளலாம். மற்றவர்களால் நாங்கள் கோபம் அடைகின்றோம் என்ற நிலைமை நீங்கி கோபத்தை நெறிப்படுத்துவது எங்களின் பொறுப்பு என்ற எண்ணத்தை நாங்கள் கொண்டிருக்க வேண்டும். தியானம், மூச்சுப்பயிற்சி ஆகியவையும் யோகாசனப் பயிற்சியின் அங்கமாகவும் உள்ளன. சிலர் முழுமையான யோகாசனப்பயிற்சி செய்யா விட்டாலும் தவறாது தியானம், மூச்சுப் பயிற்சி போன்றவற்றை மட்டும் செய்து வருவதைக் காண்கின்றோம்.

வெகுளாமை கொண்டு வாழ்வதற்கென பல்வேறு யோகாசனப்பயிற்சிகளும் உள்ளன. இவற்றை அறிந்து நடைமுறைப்படுத்தலும் வெகுளாமை கொண்டு வாழ்வதற்கான சிறந்த வழிமுறையாகக் கருதப்படுகின்றது. நாளாந்த உடற்பயிற்சியும் வெகுளாமைக்குதவும் நடவடிக்கை என்பதால் உடலிற்கான பயிற்சியையும், உளத்திற்கான பயிற்சியை யும் ஒருங்கே கொடுக்கின்ற யோகாசனம் எவ்வளவு தூரம் வெகுளாமை கொண்டு வாழ்வதற்கு உதவும் என்பதை நாங்களே ஊகித்து அறிந்து கொள்ளலாம்.

இன்றுடன் விளம்பரத்தின் பதினேழு இதழ்களில் வெகுளாமை என்ற இந்தத் தொடர்கட்டுரை பயணித்திருக்கின்றது. இந்தக் கட்டுரையைப் பல வாசகர்கள் வாசித்திருக்கின்றனர். பத்திரிகை வாசகர்களில் சிலர் தமது எண்ணக் கருத்துக்களை வாசகர் எண்ணப் பகுதியில் பதிவுசெய்து என்னை மிகவும் ஊக்கப்படுத்தி யிருந்தார்கள். வேறும் சிலர் தனிப்பட்ட முறையில் தமது கருத்துக்களைத் தெரிவி த்து ஊக்கப்படுத்தினார்கள். விளம்பரம் பத்திரிகையினை இணையத்தளத்தில் வாசித்தும் வெளிநாடுகளில் இருந்தும் சிலர் தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்கள். எல்லா வாசகர்களுக்கும் எனது நன்றி. இந்தத் தொடர்கட்டுரை ஏதோ ஒரு வகையில் வாசகர்களுக்கு பயனுள்ளதாக அமைந்தால் எனது முயற்சிக்கான பலன் கிடைத்து விட்டது என்பதே எனது எண்ணமாகும். இந்தக் கட்டுரையை விளம்பரத்தில் வெளியிட்டு எனது கருத்தை வெளிப்படுத்து வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திய விளம்பரம் பத்திரிகை நிறுவனத்தினருக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தக் கட்டுரை எழுதிய காலத்தில் அவ்வப்போது என்னுடன் உரையாடிப் பயனுள்ள கருத்துக்களைப் பரிமாறிக் கொண்ட உளவளத்துணை ஆலோசகர் திரு பிரான்சிஸ் சேவியர் அவர்களுக்கும், உளவியல் கல்வியறிவு கொண்ட பண்டிதர் ம.செ.அலெக்ஸ்சாந்தர் அவர்களுக்கும், நான் வாசித்த பல நூல்களைப் படைத்த முகம் தெரியாத எண்ணற்ற நூலாசிரியர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். குறிப்பாக வெகுளாமை அதிகாரத்தில் பல குறள்களைத் தந்த திருவள்ளுவரை நன்றியுடன் வாழ்த்துகின்றேன்.

வெகுவிரைவில் விளம்பரத்தில்
அகணி எழுதும்
**"காலத்தோடு வளரும் கணினிகள்"**
தொடர்கட்டுரை

அன்பான வாசகர்களே! நினைவாற்றல், வெகுளாமை என இரண்டு தொடர் கட்டுரைகள் மூலமாக உங்களுடன் சந்தித்துக் கொண்டேன். மேலும் விளம்பரத்தில் வெளிவரவுள்ள 'காலத்தோடு வளரும் கணினிகள்' மூலமாகச் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன். வளமான உங்கள் வாழ்விற்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

## வெகுளாமை கொள்வீர்! வெற்றிகள் குவிப்பீர்!.

- முற்றும் -



- அகணி -
authorakani@yahoo.com

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

**Pleasant Service with**
**LOWEST COMMISSION**
**Starting from 1%**



# BUYING OR SELLING?

## Meet a Realty Expert!

### Why rent when you can invest in real estate and save for your better future.

## Call me for a change

### I will save your $$$$ and earn your trust

## Why should you list or buy with me?????

### Surprise Gift for Every Buyer and Seller. You will not be disappointed

**Your House May Worth More Than You Think**
**ATTENTION BUYERS AND SELLERS THERE CAN'T BE A BETTER TIME THAN THIS**
**Just call me for a free home evaluation**

Superior Negotiating Skills Guaranteed. Continuous Full Advertising until SOLD in Major English and Tamil Media and Websites (24 Hours a Day).
With my 18 years of Real Estate and Mortgage experience I am confident that I will provide and qualify you with your Dream home.
List Your Property with me for the top dollar and be finance free. I provide FREE professional, Complimentary Staging, photography, virtual tour and flexible low commission or no commission (when you list and buy with me).
I Have Many Qualified Buyers Looking for Houses in Your Area

**No Down Payment, Bankruptcy /Bad credit /Self-Employed**
**Up to 20000.00 CASH BACK at closing & Discounted Mortgage Rates to Help you With Arranging your Mortgage**

View Thousands of Homes online www.nilahomes.com

**KNOWLEDGE ! EXPERIENCE! INTEGRITY! HONEST! & CONSCIENTIOUS FULL SERVICE**



# Nila Ravindran

**Sales Representative**

# 647-836-6502

E-Mail: nila@topremax.ca
Web: www.nilahomes.com

Buyers Have a 1 in 3 Chances of Receiving Lawn Mowing or Snow Removal Services for Up to One Year!

RE/MAX®

RE/MAX CROSSROADS REALTY INC., BROKERAGE
1055 Mcnicoll Avenue, Toronto E05, ON M1W3W6
Office:416-491-4002Cell: (647) 836-6502 Fax(416)756-1267
**"Your Referrals Are The Sincerest Compliment I can Receive"**

# இந்திய ஜனாதிபதி தேர்தல் 2012 நடைமுறையும் வெற்றி வாய்ப்பும்

இந்தியக் குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டில் பதவிக் காலம் ஜூலை 2012-இல் முடிவடையும் நிலையில், அடுத்த இந்திய குடியரசு தலைவர் யார் என்பதுக்கான விடைதான் இப்போது இந்தியா மட்டுமல்லாமல் உலகம் முழுக்க எதிர்பார்க்கப்படும் கேள்வி. இந்திய குடியரசு தேர்தல் நடைமுறைகளையும் போட்டியிடும் வேட்பாளர்களையும் யாருக்கு வெற்றி வாய்ப்பு என்பதையும் குறித்த ஒரு சிறு அலசல்.

இந்தியக் குடியரசுத் தலைவர் என்பவர், இந்தியக் குடியரசு எனப்பட்ட ‘இந்திய அரசின் தலைவர்’ ஆவார். மத்திய நிர்வாகக் குழுவின் தலைவர், கூட்டாட்சி நிர்வாகத்தின் தலைவர், இந்திய இராணுவத்தின் முப்படை-களின் தலைமைத் தளபதி என மூன்று முக்கிய பதவிகளை உள்ளடக்கியது இப்பதவி. ‘இந்தியாவின் முதல் குடிமகன்’ என்றும் ‘ஜனாதிபதி’ என்றும் அவர் குறிப்பிடப்படுகிறார். இந்திய குடியரசுத் தலைவரின் பணிகள் சடங்கு நோக்கிலேயே அமைந்துள்ளன, என்பதால், ‘ரப்பர் ஸ்டாம்பு’ என இப்பதவி நக்கல் அடிக்கப்படுகிறது. ஆனால், இந்தியாவின் மிகப் பெரிய அதிகாரம் கொண்ட பதவி இது என்பது குறிப்பிடத்தக்கது. பிரதமரும் அமைச்சரவையுமே செயல்படுத்தும் அதிகாரத்தை குடியரசு தலைவர் கொண்டுள்ளார்.

இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவையின் பெரும்பான்மையினர் ஆதரவு பெற்ற கட்சியின் தலைவரை ஆட்சியமைக்க (இந்தியப் பிரதமராக பதவியேற்க) அழைப்பது, பிரதம மந்திரியை நியமிப்பது, பிரதம மந்திரியின் பரிந்துரைப்படி மற்ற மத்திய அமைச்சர்களை நியமிப்பது, அமைச்சரவை மூலமாக நாட்டை நிர்வகிப்பது, நாடாளுமன்றத்தைக் கூட்டுவது, தள்ளி வைப்பது, மாநில ஆளுநர், உயர் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள், இந்திய அரசின் தலைமை வழக்கறிஞர், இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர்கள், வெளி நாட்டுத் தூதுவர்கள் ஆகிய பதவிகளுக்கு பிரதமரின் அறிவுறுத்தலின் பேரில் பதவி நியமனம் செய்துவைப்பது, நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்வது (பிரிவு-352), நாடாளுமன்றத்தின் கீழவையைக் கலைப்பது, தேர்தல் நடத்துவது, அவசர ஆணைகள் பிறப்பிப்பது, மாநில அரசைக் கலைப்பது (பிரிவு-356), உச்ச நீதிமன்றம் அளித்த தண்டனையைக் குறைப்பது ஆகிய சிறப்பு அதிகாரங்கள் இந்தியக் குடியரசு தலைவருக்கு உண்டு.

‘ரப்பர் ஸ்டாம்பு’ என கிண்டலாக குறிப்பிடப்பட்டாலும், இந்திய குடியரசு தலைவர் பதவி எந்தளவுக்கு முக்கியமானது என்பதற்கு ஒரு உதாரணம்: 2004 இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் மற்றும் கூட்டணி கட்சிகள் வெற்றிபெற்று, சோனியா காந்தியை பிரதமர் பதவிக்கு தேர்வு செய்தன. ஆனால், கடைசி நேரத்தில் சோனியா பிரதமராகாமல் மன்மோகன்சிங் பிரதமர் ஆனார் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். ஏன் சோனியா பிரதமர் ஆகவில்லை, திரைமறைவில் நடந்தது என்ன என்பது இன்று வரைக்கும் மர்மமாகவே உள்ளன. சோனியா பிரதமர் ஆவதைத் தடுத்து அப்போது குடியரசு தலைவராக இருந்த அப்துல் கலாம்தான் என்பது ஒரு உறுதி செய்யப்படாத தகவல். பிரதமராக சோனியாகாந்திக்கு பதவி பிரமாணம் செய்துவைக்க கலாமை அணுகியபோது, சோனியாவின் வெளிநாட்டுக் குடியுரிமையைக் காரணம் காட்டி கலாம் அதற்கு மறுத்துவிட்டார் எனக் கூறப்படுகிறது. அதன்பிறகு இன்றுவரைக்கும் சோனியா பிரதமர் ஆகமுடியாமல் ஆகிவிட்டது. இதிலிருந்தே இந்தியக் குடியரசு தலைவர் பதவி எந்தளவுக்கு அதிகாரம் படைத்தது என்பது புரிந்திருக்கும்.

இந்திய குடியரசு தலைவர் ஆவதற்கு, 35 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய இந்திய குடிமகனாக இருத்தல் வேண்டும், இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவையின் உறுப்பினராவதற்கான தகுதி பெற்றிருக்க வேண்டும், எந்த அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களிலும் பணிபுரியக்கூடாது என்பது விதிமுறைகள். இவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற இரு அவைகள் மற்றும் மாநிலங்களின் கீழ்ச் சபைகளின் உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார். குடியரசுத் தலைவரின் பதவிக் காலம் 5 ஆண்டுகள். ஆனால், ஒருவரே எத்தனை



- மா. கிருஷ்ணன் -

முறை வேண்டுமானாலும் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படலாம்.

இந்தியா ஜனவரி 26, 1950இல் குடியரசானது. அதுவரை ‘இந்தியன் யூனியன்’ அல்லது ‘இந்திய டொமீனியன்’ என்ற அரசாட்சி அமைப்பாக இருந்த இந்தியாவின் நாட்டுத் தலைவராக ‘கவர்னர் ஜெனரல்’ இருந்தார். குடியரசானவுடன், குடியரசுத் தலைவர் இந்தியாவின் நாட்டுத் தலைவர் ஆனார். இந்திய அரசியலமைப்பு நிர்ணய மன்றத்தின் தலைவராக இருந்த ராஜேந்திர பிரசாத் இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராகப் பதவியேற்றார். பின்னர் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறைகள் உருவாக்கப் பட்டன. 1952ஆம் ஆண்டு இம்முறைகள் ‘இந்திய குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் தேர்தல் சட்டம், 1952’ என்ற பெயரில் சட்டமாக இயற்றப்பட்டன. இதன் விதிகளின் படி குடியரசுத் தலைவர் இந்திய நாடாளு மன்றத்தின் இரு அவைகளின் உறுப்பினர் கள் மற்றும் மாநில சட்டமன்றங்களின் உறுப்பினர்கள் அடங்கிய வாக்காளர் குழுவினால் தேர்ந்தெடுக்கக்கப்படுவார். வாக்காளர் குழு வாக்குகளில் சுமார் 50 சதவிகிதம் மதிப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும், மீதமுள்ள 50 சத விகிதம் சட்டமன்ற உறுப்பினர்களிடமும் உள்ளது. இந்த தேர்தல் விகிதாச்சாரப் பிர-திநிதித்துவ முறையில் நடத்தப்படும். 1952 தேர்தல் சட்டம் 1974 மற்றும் 1977ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டது. அதன்படி குடியரசுத் தலைவர் தேர்தல்கள் இந்திய தேர்தல் ஆணையத்தால் நடத்தப்படுகின்றன. வாக்காளர் குழுவில் இடம்பெற்றுள்ள சட்டமன்ற உறுப்பினர்களின் வாக்குகளின் மதிப்பு அவரவர் மாநில மக்கள் தொகை மற்றும் சட்டமன்றங்களின் பலத்தைப் பொறுத்து மாறும்.

35 வயது மதிக்கத்தக்க இந்தியக் குடிமகன் எவரும் இந்தியக் குடியரசு தேர்தலில் போட்டியிட மனுத் தாக்கல் செய்யலாம். ஆனால், குறிப்பிட்ட வைப்புத் தொகை கட்டுபவர்கள், குறிப்பிட்ட வாக்காளர் குழு உறுப்பினர்களால் முன்மொழிய மற்றும் பின்மொழியப்படுபவர்களின் வேட்பு மனுக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். வாக்குப்பதிவு டெல்லியிலும் மாநிலத் தலைநகரங்களிலும் நடைபெறும். வாக்காளர்கள் தங்களுக்கு விருப்பமான வேட்பாளர்களுள் இருவருக்கு வாக்களிப்பர் - முதல் தெரிவு மற்றும் இரண்டாம் தெரிவு என இரு வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பர்.

வாக்குகள் எண்ணப்படும் போது முதல் சுற்றின் முடிவில் எந்த வேட்பாளரும் வாக்காளர் குழுவில் 50 சதவிகித வாக்குகளைப் பெறவில்லையெனில் தேர்தல் விதிகளின்படி தேர்தல் அடுத்த சுற்றுகளுக்கு நகர்ந்து இரண்டாம் தெரிவு வாக்குகள் எண்ணப்படும். இவ்வாறு ஒவ்வொரு சுற்றிலும் கடைசியாக வந்த வேட்பாளர் நீக்கப்பட்டு அவரை முதல் தெரிவாகத் தேர்ந்தெடுத்திருந்த வாக்காளர்களின் இரண்டாம் தெரிவு வாக்குகள் பிற வாக்காளர்களுக்குப் பிரித்தளிக்கப்படும். இவ்வாறு இறுதியாக இரு வாக்காளர்கள் மட்டும் எஞ்சியிருக்கும் வரை சுற்றுக்கள் தொடரும். இறுதிச் சுற்றில் 50 சதவிகிதத்துக்கு மேல் பெறும் வேட்பாளர் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவார். தேர்தல் குறித்த மேல் முறையீடுகளை நேரடியாக உச்ச நீதிமன்றத்தில் முறையிட வேண்டும்.

தற்போதைய இந்திய குடியரசு தேர்தலில், நாடாளுமன்றத்தின் இரு சபை உறுப்பினர்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் உள்ளிட்ட மாநில சட்டசபை உறுப்பினர்கள் மொத்தம் 4896 பேர் (எம்.பி.க்கள் 776, எம்.எல். ஏ.க்கள் 4120) ஓட்டு போட தகுதி பெற்றுள்ளார்கள். இவர்களுடைய மொத்த ஓட்டு மதிப்பு 10 லட்சத்து 98 ஆயிரம் என்று நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கிறது. முந்தின பாராவில் சொன்னபடி, எம்.பி.க்களுக்கு சமமான ஓட்டு மதிப்பும், எம்.எல்.ஏ.க்களுக்கு அவர்களுடைய மாநில மக்கள் தொகைக்கு ஏற்பவும் ஓட்டு மதிப்பு நிர்ணயம்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

### பாக்ஸ்: ஈழத்தில் பிரணாப்

இந்தியா ஈழத் தமிழர்களுக்கு இழைத்த மாபெரும் வரலாற்று குற்றம் என்பது, பிரணாப் முகர்ஜியோடு தொடர்புடையது. ஈழப் போரின் இறுதிக் கட்டத்தில் ஏற்பட்ட பேரிழப்பை தடுக்கும் ஒரு மிகச்சிறந்த வாய்ப்பு 2008ஆம் ஆண்டு அக்டோபர் 14 அன்று வந்தது. அன்றுதான் ஈழத் தமிழர்கள் அழிப்பை இந்தியா இரண்டு வாரங்களில் தடுக்காவிட்டால், தமிழ்நாட்டின் எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒட்டுமொத்தமாக ராஜினாமா செய்வது என்று அப்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த எல்லா தமிழக கட்சிகளும் ஒருமனதாக முடிவெடுத்தனர். அந்த ஒரு முடிவு மட்டும் நிறைவேற்றப்பட்டிருந்தால், இலங்கையில் மாபெரும் மனிதப் பேரழிவு நிகழ்ந்திருக்காது தடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால், தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக ராஜினாமா செய்வதை தடுத்து அந்த வரலாற்று சம்பவம் நிகழாமல் தடுத்தார் பிரணாப் முகர்ஜி.

அக்டோபர் 26, 2008 அன்று காலை பிரணாப் முகர்ஜி இலங்கையின் பசில் ராஜபட்சேவுடன் பேச்சு நடத்தினார். பின்னர் சென்னை வந்து கலைஞரிடம் மூன்று மணி நேரம் பேசினார். அதன்பின்னர், ‘திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் ராஜினாமா செய்ய மாட்டார்கள்’ என்று பிரணாப் முகர்ஜியே அறிவித்தார். அதுமட்டுமல்ல, ஈழத்தில் நடக்கும் போரையும் தடுக்க மாட்டோம் என்றும் அப்போது அவர் அறிவித்தார்.

# கடன் தொல்லையினால் வருந்துகிறீகளா ?
# GET OUT OF DEBT WITHOUT BANKRUPTCY
# வங்குரோத்துக்கு செல்லாமல் கடன்களிலிருந்து விடுதலை
# GET OUT OF YOUR DEBT SYNDROMME

WE Settle your debts without bankruptcy



We Work for you, Trusty work for your creditors

உங்கள் அனைத்து கடன்களில்லிருந்தும் 80% வரையிலான கழிவை பெறுவதற்கும்

உங்கள் வீடு, வாகனம், மற்றும் சொத்துக்கள் அனைத்தும் சட்டமுறையில் பாதுகாப்பதற்கும்

கடன் கொடுத்தோரின் தொலைபேசி மிரட்டல்களையும், கடன் வட்டிகளை நிறுத்துவதற்கும்

மாதாந்தம் உங்கள் வருமானத்தில் இருந்து ஒரு பகுதியை கடன்காரர்கள் வசூலிப்பதை நிறுத்துவதற்கும்

ஓர் சிறிய மாதாந்தகட்டணத்தினூடாக எல்லா கடன்களையும் தீர்க்கும் வசதி செய்வதற்கும்

சகல கடன் பிரச்சனைகளிலிருந்து தீர்வுகாண சிறந்த நிபுணத்துவ வழிமுறைகளுக்கும்

உங்கள் மாதாந்த வருமானம் அரசாங்க அட்டவனைக்குட்பட்டிருந்தால்
இலவச ஆலோசனைகளையும், இலவச சேவைகளையும் பெறுவீர்கள்.................

**ARE YOU CONCERNED** ABOUT YOUR DEBTS ?
ABOUT YOUR HOUSE HOLD DEBTS ?

உங்கள் இறுதி முடிவை எடுக்கும் முன்னர் ஒரு தடவை எங்களை அழையுங்கள்

**இத்துறையில் பல வருட அனுபவமிக்க ARU KRISH ஜை**

**இன்றே அழையுங்கள்**

**இலவச ஆலோசனைகளுக்கு**

PEACE OF MIND
CREDIT REVOLVING CENTRE

# (416) 556-9287
**Credit Revolving Center**
**(GTA Square )**
5215 Finch Ave.E, Suite #223, Scarborough, ON M1S0C2

# தலைவலி (சிரசூலம்) போக்க வழிகள்!

## THE SIMPLE TECHNIQUE FOR HEALING HEADACHE

தலைவலி என்பது மிகவும் கடினமானது. இது அனைவருக்கும் அடிக்கடியோ அல்லது இடையிடையே நிகழ்வது. எது எப்படியோ நாளாந்த வாழ்வில் தலைவலி என்ற சொல்லை எவரும் பயன்படுத்தாமல் இருப்ப தில்லை, கேட்காமலும் வாழ்வதில்லை. இந்த தலைவலிக்கு நாம் மருத்துவரிடம் சென்றோ மருந்துக் கடைககளுக்குச் சென்றோ அதை குணப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. தலைவலி வருவதற்கான காரணத்தை அறிந்து அதை தவிர்ப்பதால் தலைவலியைச் சரி செய்து கொள்ளலாம்.

### சாதாரணமாக தலைவலிக்கான காரணங்கள்

1. படுத்துக்கொண்டோ அல்லது பயணம் செய்யும் போதோ படிப்பதால் தலைவலி ஏற்பட வாய்ப்புண்டு.
2. கண்களுக்கு அதிக வேலை கொடுப்பதாலும் இரவில் தூங்காது விழித்திருப்பதாலும் தலைவலி வரலாம்.
3. அதிக நேரம் தொலைக்காட்சி பார்ப்பது, மிகவும் பிரகாசமான அல்லது மங்கலான வெளிச்சத்திலோ எழுவது, படிப்பது தலைவலியை உருவாக்க வழிவகுக்கின்றன.
4. பற்களை சரிவர பாதுகாக்காவிட்டாலும் தலைவலியை தோற்றுவிக்கும், வெயிலில் அலைவதாலும், மழையில் நனைவதாலும், மது அதிகமாக அருந்துவதாலும், புகைபிடிப்பதாலும் தலைவலி வரலாம்.
5. மலச்சிக்கல் அதிகமாவதாலும், சமிபாட்டுக் கோளாறுகள் உருவாவதாலும், வாயுத்தொல்லை ஏற்படுவதாலும் தலைவலி வருவதுண்டு.

தலைவலிகள் பத்து வகைப்படும். இவற்றுள் ஒற்றைத்தலைவலி தான் மிகவும் வேதனையானது. பெரும்பாலான தலைவலிகள் தீங்கு இல்லாதவை. தானாகவே குணமாகக் கூடியவை. அதைவிடுத்து உடல்நோய்கள் சம்பந்தப்பட்ட காரணங்களால் தொடர்ந்து கொண்டுதான் அதைப் போக்குவதற்கு சம்பந்தப்பட்ட நோய்களைச் கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவருவதன் மூலமே அத்தகைய



**நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய**

தலைவலிகளை இல்லாது செய்ய முடியும். உதாரணமாக மன அழுத்தம், உடல் வரட்சி, இரத்தத்தில் சர்க்கரையின் அளவு குறைதல், உயர் இரத்த அழுத்தம், தலையில் நீர் கோர்த்தல் போன்ற நோய்களின் தாக்கம். பெண்களுக்கு மாதவிடாய் காலத்திலும், கருவுற்ற போதும், கருத்தடை மாத்திரைகளை அதிகம் அதிகம் உபயோகிப்பதாலும் தலைவலி ஏற்படும். இவற்றிலிருந்து விடுபடுவதற்கு யோகாப் பயிற்சி, மூச்சுப் பயிற்சி தியானம் போன்றவற்றை தினமும் ஒரு சில நிமிடமானது பழகி வந்தால் விரைவான பலனை அடைவது உறுதி.

### இலகுவான சிகிச்சை முறைகள்

சுக்கை (வேர்க்கம்பு) அரைத்து எலுமிச்சம்பழச்சாறு விட்டு நெற்றியில் பூச தலைவலி நீங்கும்.

ஒற்றைத் தலைவலிக்கு பூண்டை (Garlic) எடுத்து அரைத்து, மெழுகை விளக்கில் உருக வைத்து அதில் அரைத்த பூண்டினைப் போட்டு கலக்கி அதனை வலிக்கும். இடத்தில் பூச அடுத்த நிமிடமே ஒற்றைத் தலைவலி நீங்கும் என்கிறது சித்த மருத்துவம்.

நீர் சம்பந்தப்பட்ட தலைவலிக்கு கிராம்பு, உப்பு சேர்த்து பற்று போட்டால் அது குணமாகும். சைனஸ் (Cinus) சம்பந்தமான தலைவலிக்கு துளசி இலை, சுக்கு, ஏலம் என்பன சேர்த்து தேநீர் குடித்து வர குணமாகும். உடல் சோர்வு, மன அழுத்தம் போன்றவற்றால் வரும் தலைவலிக்கு, இஞ்சி, தேன், எலுமிச்சை சாறு என்பனவற்றை இளஞ்சூடான நீருடன் சேர்த்து காலையிலும், மாலையிலும் ஒரு டம்ளர் அருந்தினால் குணமாகும். தலைவலி குறைந்து விடும்.

### தலைச்சுற்று, தலைப்பாரம், மயக்கம் நீங்க

தலைவலியைப் போலவே தலைச்சுற்று மயக்கம் என்பன பல காரணங்களால் வரலாம். இதற்கு மருத்துவரை அணுகி அதன் காரணங்களை அறிவது சிறந்தது. ஒருவர் மயங்கி விழுந்தால் வெங்காயத்தின் சாற்றை மூக்கில் விடும் முறை இருக்கிறது. அல்லது பஞ்சினைக் கொழுத்தி அதன் புகையை மூக்கில் விடுவதும் வீட்டு வைத்திய முறையாகும். அதுமட்டுமன்றி எலுமிச்சை சாற்றினை பெருங்காயத்துடன் சேர்த்து குடிக்க வைத்தால் மயக்கம் தெளியும்.

இவ்வாறு வீட்டில் அன்றாடம் உபயோகிக்கும் பொருட்களைக் கொண்டு மருத்துவம் செய்து தலைவலி நோய் இல்லாமல் வாழலாம்.







Diploma in Yoga Therapy (India)

416.289.2033 after 7:00pm
416.617.5721


# இந்திய ஜனாதிபதி...

16ஆம் பக்கத்தொடர்ச்சி

செய்யப்பட்டு உள்ளது. அதன்படி, அனைத்து வாக்காளர்களும் ஓட்டு போட்டால் பதிவாகும் மொத்த ஓட்டுகளின் மதிப்பு, 10.98 லட்சம் ஆகும். இதில் 50 சதவீதத்திற்கு மேல், அதாவது 5 லட்சத்து 49 ஆயிரத்து 442 ஓட்டுகள் பெறுபவர், புதிய ஜனாதிபதியாக தேர்ந்து எடுக்கப்படுவார்.

இந்த இதழை நீங்கள் படித்துக் கொண்டிருக்கும் போது, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி வேட்பாளராக பிரணாப் முகர்ஜி வேட்பு மனு தாக்கல் செய்திருப்பார். காங்கிரஸ் கூட்டணியை வெளியில் இருந்து ஆதரிக்கும் முயலாம்சிங் தலைமையிலான சமாஜ்வாடி, மாயாவதி தலைமையிலான பகுஜன்சமாஜ் போன்ற முக்கிய கட்சிகள் பிரணாப் முகர்ஜிக்கு ஆதரவு அளித்துள்ளன. அதேநேரத்தில், பா.ஜனதா கூட்டணியில் பிளவு ஏற்பட்டு, அதில் இடம் பெற்றுள்ள ஐக்கிய ஜனதா தளம் மற்றும் சிவசேனா ஆகிய கட்சிகளும் பிரணாப்பை ஆதரிக்க முன் வந்துள்ளன. அத்துடன் இடதுசாரி கட்சிகளில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு மற்றும் பார்வர்டுபிளாக் ஆகிய இரு கட்சிகளும் பிரணாப்புக்கு தங்கள் ஆதரவை அதிகாரபூர்வமாக தெரிவித்து உள்ளன.

பிரதான எதிர்க்கட்சியான பா.ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில், ஜனாதிபதி தேர்தல் வேட்பாளரை தேர்வு செய்வதில் ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை. இதனால் அந்த கூட்டணியில் பிளவு ஏற்பட்டு உள்ளது. ஆனால், பிரணாப் முகர்ஜிக்கு எதிராக வேட்பாளரை நிறுத்துவதில் உறுதியாக இருந்த பா.ஜனதா, ஏற்கெனவே களத்தில் இருக்கும் நாடாளுமன்ற முன்னாள் சபாநாயகர் பி.ஏ.சங்மாவை ஆதரிக்க முடிவு எடுத்து உள்ளது. இந்த தகவலை பா.ஜனதா கட்சி அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதா மற்றும் ஒடிசா முதல் மந்திரி நவீன்பட்நாயக் ஆகியோர் சங்மாவை ஜனாதிபதி வேட்பாளராக ஏற்கெனவே அறிவித்து உள்ளனர். தற்போது பா.ஜனதாவும் அவரை ஆதரிப்பதன் மூலம், ஜனாதிபதி தேர்தலில் பிரணாப் முகர்ஜிக்கும் சங்மாவுக்கும் நேரடி போட்டி நடைபெறுவது உறுதியாகிவிட்டது.

காங்கிரஸ் கூட்டணியில் இடம்பெற்றுள்ள திரிணாமுல்



காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி ஆதரிக்க முன்வந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் தேர்தலில் போட்டியிட மறுத்துவிட்டார். இதனால், மம்தா தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் மட்டுமே தங்கள் ஆதரவு யாருக்கு என்பதை இன்னும் அறிவிக்கவில்லை. இந்திய கம்யூனிஸ்டு மற்றும் புரட்சிகர சோசலிஸ்டு கட்சி ஆகியவை ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்கப் போவதாக அறிவித்து இருக்கின்றன. தமிழகத்தில் விஜயகாந்த் தலைமையிலான தேசிய முற்போக்கு திராவிடர் கட்சியும் ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்க போவதாக அறிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி வேட்பாளர் பிரணாப் முகர்ஜிக்கு ஆதரவு பெருகி வரும் நிலையில், தற்போதைய கட்சி நிலவரப்படி, ஜனாதிபதி தேர்தலில் அவருக்கே வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. திரிணாமுல் காங்கிரஸ் ஆதரவு இல்லாததால், காங்கிரஸ் கூட்டணியின் ஓட்டு மதிப்பு 4 லட்சத்து 12 ஆயிரமாக குறைந்துவிட்டது என்றாலும், சமாஜ்வாடி (66688 ஓட்டுகள்), பகுஜன் சமாஜ் (45473), ஐக்கிய ஜனதா தளம் (40737), சிவசேனா (18495), மதச்சார்பற்ற ஜனதா தளம் (6138), மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, பார்வர்டு பிளாக் கட்சிகள் (41000) ஆகியவை ஆதரவுடன் பிரணாப் முகர்ஜியின் ஆதரவு ஓட்டுகள் 6 லட்சத்து 29 ஆயிரமாக அதிகரித்து உள்ளன. அவர் வெற்றி பெறுவதற்கு 5 லட்சத்து 49 ஆயிரத்து 442 ஓட்டுகள் போதும் என்பது குறிப்பிடத்தக்கது.

அதே நேரத்தில், அ.தி.மு.க. (36,920 ஓட்டுகள்), பிஜு ஜனதா தளம் (30125) ஓட்டுகளை சேர்த்து பா.ஜனதா கூட்டணியின் வேட்பாளர் பி.ஏ.சங்மாவின் ஓட்டு மதிப்பு 3 லட்சத்து 10 ஆயிரம்தான். திரிணாமுல் காங்கிரஸ் ஆதரவு யாருக்கு என்பதை மம்தா இன்னும் அறிவிக்கவில்லை. ஒரு வேளை அவர் சங்மாவை ஆதரிக்க முன்வந்தாலும், சங்மாவின் ஓட்டு மதிப்பு 3 லட்சத்து 56 ஆயிரமாக மட்டுமே உயரும் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, புதிய ஜனாதிபதியாக தேர்ந்து எடுக்கப்படுவதற்கு, காங்கிரஸ் கூட்டணி வேட்பாளர் பிரணாப் முகர்ஜிக்கே பிரகாசமான வாய்ப்பு உள்ளது.

# மனதைத்தொட்ட மகாஜனாவின் முத்தமிழ் விழா 2012

மகாஜனாவின் முத்தமிழ் விழா யூன் மாதம் 23ஆம் திகதி சனிக்கிழமை Chinese Cultural Centre இல் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. குறித்தநேரத்தில் சரியாக 4.30 மணிக்கு விழா ஆரம்பமாகியது. விழா ஆரம்பத்திலேயே மண்டபம் நிறைந்தகூட்டம் காணப்பட்டது. மங்கல விளக்கேற்றலும், தொடர்ந்து தேசியகீதமும் அடுத்து கல்லூரிக்கீதமும் முறைப்படி இசைக்கப்பட்டன. அடுத்து வந்தோரை வரவேற்கும் தமிழர் பண்பாட்டிற்கு அமைய வரவேற்புரையை திரு எஸ். ஸ்கந்தராசா அவர்கள் நிகழ்த்தினார். அத்துடன் 'கணேசவந்தனம்' என்ற வரவேற்பு நடனம் நாட்டியக்கலைமணி திருமதி. சாந்தினி சிவரூபன் அவர்களின் சிலம்பொலி சேத்திர நடனக்கல்லூரி மாணவிகள் பிரமிக்கத்தக்க வகையில் நடனமாடி சபையோர் மனதைக்கவர்ந்தனர். பரதக்கலாவித்தகர் சியாமா தயாளன் அவர்களின் பாரதி இந்திய சாத்திரிய நடனக்கல்லூரிமாணவிகள் 'துளிகளின் சக்தி' என்ற அற்புதமான நடன நிகழ்ச்சியை மேடையில் நிகழ்த்தினர். மழைத்துளியானது என்னென்ன வடிவங்களை எடுக்கின்றது. அதன் பலாபலன்கள் பற்றி நடனவடிவில் மிகவும் அற்புதமாக வெளிக்கொண்டு வந்தனர். ஆடலரசி செந்தில்செல்வி சுரேஸ்வரனின் ஸ்ரீ அபிராமி நாட்டியாலயா மாணவிகள் காலத்துக்கு ஏற்றவகையில் உதைபந்தாட்டபோட்டியை நடனவடிவத்தில் வெகு இயல்பாக ஆடிக்காட்டினர். அவ்வேளை ஆட்டத்தில் வெற்றி பெறும் வேளை துள்ளிக்குதித்து துள்ளல் இசையில் தம்மகிழ்ச்சியை பாவத்தோடு மிகவும் சிறப்பாக வெளிப்படுத்தினர். நாட்டிய மரபுக்கேற்ப திரை இசை மெட்டுக்களையும் பொருத்தமாகச்சேர்த்து 'ஆடும் சதங்கைகள்' என்னும் நடன நிகழ்ச்சி மனதைச்சுண்டி இழுக்கும் வகையில் வெகு சிறப்பாக அமைந்தது.



பிரபல எழுத்தாளர் அன்ரன் செக்கோவ் என்பவரின் நாடக மூலத்தை இ. முருகையன் அவர்கள் பிரதியாக்கம் செய்து நாகமுத்து சாந்திநாதன் அவர்களின் நெறி யாள்கையில் உருவான நாடகம் 'இரு துயரங்கள்'. இந்நாடகக்கலைஞர்கள் சிறப்பாக நடித்து பார்வையாளர்கள் பாராட்டைப்பெற்றுக்கொண்டார்கள். 'எழுதாத வரையறை' என்னும் நாடகம் முன்னாள் ஆசிரியர் செல்வி. நல்லம்மா குழந்தைவேல் அவர்களின் ஆக்கத்தில் ஜெகா. சுஜந்தன் அவர்களின் நெறியாள்கையில் தேர்ந்தெடுக் கப்பட்ட நடிகர்கள் குழுவால் மிகச்சிறப்பாக நடிக்கப்பட்டது. இந்நாடகத்தில் பங்குபற்றிய அத்தனை கலைஞர்களும் மிகப் பொருத்தமான கதாபாத்திரங்களை ஏற்று நடித்திருந்தனர். எல்லோருமே அந்தந்தப் பாத்திரங்களாகவே மாறி தம் நாடகத்திறமைகளை வெளிப்படுத்தினர்.

தலைவர் திரு. என். சாந்திநாதன் அவர்கள் தம் தலைமை உரையில் மகாஜனாக் கல்லூரியின் சிறப்பும், முத்தமிழ் விழாவின் சிறப்பும் பற்றி தெளிவாகவும் காத்திரமாக வும் குறித்த நேரத்துக்குள் உரையாற்றினார். பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த திரு.ஆர்.செல்வஸ்கந்தன் அவர்கள் 'நன்றி மறத்தல் நன்றன்று' என்ற பொருள் தொனிக்க மகாஜனாக்கல்லூரிக்கு சேவையாற்றிய குறிப்பிடத்தக்க அதிபர்கள் ஆசிரியர்களைக் குறிப்பிட்டு அவர்கள் சேவையை வியந்து நன்றி கூர்ந்தார். விழா சிறப்பாக நடைபெற உதவிய அத்தனை அன்பு நெஞ்சங்களையும் நினைவுகூர்ந்து முத்தமிழ் விழா செயற்றிறன்மிக்க செயலா- ளர் திரு.ஆர். ரவீந்திரன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். முத்தமிழ் விழாவை சிறப்பிக்க உதவி செய்த அத்தனை பேருக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்தார். இவ்விழாவில் உபதலைவர் திரு. கெ. ஜெயேந்திரன், திரு. எஸ். மகேந்திரராஜ் திருமதி. கோதை அமுதன், ஆகியோர் நிகழ்ச்சிகளை சிறப்பாகத் தொகுத்து வழங்கினர். பரிசளிப்புத் தொகுப்பாளராக கெ.பிரணவன், ஜெ.விதுரா



ஆகியோர் விளங்கினர்.

முத்தமிழ்விழா இனிதே நிறைவு பெற்றதை அடுத்து விழாவின் இறுதி நிகழ்வாக இராப்போசன விருந்தும் இடம்பெற்றது. இராப்போசன விருந்தும் குறித்த நேரத்தில் நடைபெற்றது. அவ்வேளை பாரதி ஆட்ஸ் குழுவினர் இன்னிசை மழைபொழிந்தனர். இராப்போசன விருந்தும் மிகவும் ஒழுங்கு முறையில் நேர்த்தியாக நடைபெற்றது.

**- ரஞ்சி கதிர் -**

பரிசில்கள் வழங்கும் சந்தர்ப்பங்களில் ஒரு சிலர் மேடைக்கு வரமுடியாத சூழ்நிலையில் சிறு தடங்கல் இடையிடையே ஏற்பட்டாலும் தொகுத்து நோக்கும் போது மகாஜனாவின் முத்தமிழ் விழாவும் இராப்போசன விருந்தும் ஒருங்கே மிகச்சிறந்த முறையில் ஒழுங்கமைக்கப்பட்டு இனிதே நிறைவேறியது.






# கனடா தமிழ் இலக்கியத் தோட்டம்

## இயல் விருது - 2012

கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் இயல் விருது விழா வழமைபோல ரொறெ-ன்ரோவில் யூன் 16ம் தேதி ராடிஸன் ஹொட்டலில் நடைபெற்றது. இம்முறை வாழ்நாள் இலக்கிய சாதனைக்கான இயல் விருது எஸ்.ராமகிருஷ்ணன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இயல் விருதை தொடர்ந்து மற்றைய விருதுகளும் வழங்கப்பட்டன: புனைவு இலக்கியப் பிரிவில் "பயணக் கதை" நாவலுக்காக யுவன் சந்திரசேகருக்கும், அபுனைவு இலக்கியப் பிரிவில் "கெட்டவார்த்தை பேசுவோம் நூலுக்காக பெருமாள் முருகனுக்கும், கவிதைப் பிரிவில் 'இரண்டு சூரியன்' தொகுப்புக்காக தேவதச்சனுக்கும், 'எனக்குக் கவிதை முகம்' தொகுப்புக்காக அனாருக்கும், மொழிபெயர்ப்பு பிரிவில் 'என் பெயர் சிவப்பு' நூலுக்காக ஜி.குப்புசாமிக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. மாணவர் கட்டுரைப் போட்டியில் ராம் அட்ரியன் பரிசு பெற்றார். சுந்தர ராமசாமி நினைவாக நிறுவப்பட்ட 'கணிமை விருது' வாசு அரங்கநாதனுக்கு வழங்கப்பட்டது. இந்த விழாவுக்கு பல நாடுகளில் இருந்து எழுத்தாளர்களும், கல்வியாளர்களும் ஆர்வலர்களும் வருகை தந்து சிறப்பித்தார்கள்.










AVANI
AT METROGATE
TRIDEL®
BUILT FOR LIFE
Open House
on Sunday
July 08
2012
For Your Early
Booking or
Information
Please Call
416.321.6969
Buy Through
HomeLife GTA Realty Inc.
Realtors
Chance to WIN**
• a trip to Cuba for 2
• iPad
• 42" TV
- digi Media -
• 10% Deposit*
• Price starting at $214,000
• One parking included
• FREE Assignment
• Occupancy early 2015
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife GTA Realty Inc.,
Brokerage*
5215 Finch Avenue E. # 203, Toronto, ON M1S 0C2
*Independently owned and operated. ** Some conditions may apply
***not intended to solicit buyers /sellers currently under contract

# பிரக்ஞை ஓர் அறிமுகம்




தனி மனித மாற்றத்திலிருந்து சமூக மாற்றத்தை நோக்கி-மேற்குலக அறிஞர்களின் பார்வையில்' என்ற தலைப்புக் கொண்ட மீராபாரதியின் நூல் வாசகர் மனதில் நிறையக் கேள்விகளை எழுப்பும் ஒரு நூலாக இருக்கும் என்று எண்ணுகின்றேன். ஆன்மீகப் பயிற்சி ஒன்றிற்கு அறிவுரீதியான, நவீன அறிவுத் துறைகளின் ஆய்வினூடாக, மேனாட்டுத் தத்துவ இயல் மூலமாக ஒரு பலமான அத்திவாரத்தினை, தத்துவ, உளவியற் துறைப் பின்னணிய-ினை வழங்கும் ஒரு முயற்சியாகவே இவரின் நூலினை நான் பார்க்கின்றேன்.

இவரின் நூல் தமிழிலே அறிவுரீதியாக ஒரு விடயத்தை அணுகியுள்ளது எனும் வகையில் முக்கியமானது. 'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்' என்ற பாரதியின் பாடல் வரிகளை இவர் நூல் நினைவூட்டுகின்றது. இந் நூலிலுள்ள இருபத்து மூன்று கட்டுரைகளில் பெரும்பாலானவற்றில், நூற்தலைப்புக்கேற்ப, மேனாட்டு அறிஞர் கருத்துகள் எளிமையான நடையில் கூறப்பட்டுள்ளன. பிரக்ஞை என்ற கருத்துத் தொடர்பாக உளவியலாய்வாளர்கள், தத்துவவியலாளர்கள் என்பவர்களின் கருத்துகளைத் தொகுத்துத் தந்துள்ளார்.

## - மைதிலி தயாநிதி -

எனினும், இவர் நூலினை, இவர் கூறுவது போன்று வெறும் தொகுப்பு நூலாக மட்டும் கருதிவிட முடியாது. தொகுப்பாளரின் உந்துசக்தியாக செயற்படுபவை, அவரின் தனிப்பட்ட உலக நோக்கு, அவர் வாழும் சமூகத்தின் உலக நோக்கு, இவை இரண்டுக்குமிடையிலான வேறுபாடுகள், முரண்பாடுகள் என்பன கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியவை ஆகின்றன. தொகுப்பு ஒன்றின் மூலமாகத் தொகுப்பாளர், தான் வாசித்தறிந்த கருத்துகளில் முக்கியமானதாகக் கருதுவனவற்றை, தான் வாழும் சமூகத்திற்கு ஏற்புடையதாகக் கருதி அத்தொகுப்பினைச் செய்கின்றார். இவ்வகையில் அவர் ஒரு படைப்பாளியை நிகர்க்கிறார். சமூகப் பொறுப்பினை இருவரும் எடுத்துக் கொள்வதுடன், சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவும் விைழகின்றனர்.

மேற்குலக தத்துவஞானிகள், விஞ்ஞானிகள், ஆய்வாளர்கள், புலமைசார் துறையினர் என்பவர்களின் பிரக்ஞை குறித்த கருத்துகளைக் கூறுகையிலும், தியானமுறைகளை மதிப்பீடு செய்வதிலும், போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்ச் சமூகத்தின் மன வடுக்களை ஆற்றவும், அரசியல் சமூக நிலைகளைச் சீர்ப்படுத்தவும் தியானத்தை சிபார்சு செய்வதிலும் மீரா பாரதியின் குரல் ஓங்கி ஒலிக்கிறது. பிரக்ஞையினையும், தியானத்தினையும் இணைத்து அவர் பேசும்பொழுது அவர் நூல் எழுதியதன் நோக்கமும், அவர் நூல் மூலமாக விடுக்கும் செய்தியும் புலனாகின்றன.

புலம்பெயர் தமிழ் மக்களுக்கு, தமிழ் மொழியில் ஆன்மீகத் துறையினை அறிமுகம் செய்து வைக்கும் நூலாக இவர் நூல் அமைகின்றது. கீழைத்தேய சமயங்கள் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேனாட்டில் மொழிபெயர்ப்பு நூல்கள் மூலமாக அறியப்பட்டன. அவற்றின் செல்வாக்கு பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேனாட்டில் தோன்றிய சமய இயக்கங்களில் காணப்பட்டன. இதற்கு எடுத்துக்காட்டாக, தியோசொபிக்கல் இயக்கத்தைக் கூறலாம். மேனாடுகளில் ஆன்மீகத் துறை வளர்ச்சிக்கு இந்தியாவிலிருந்து வந்த சமயத் தலைவர்கள் முக்கிய பங்காற்றினர். இவற்றுள், 1893 இல் விவேகானந்தரால் தாபிக்கப்பட்ட வேதாந்த இயக்கம் முக்கியமானது. இரண்டாம் உலகப் போரின் பின்னர் மேனாடு வந்த இந்திய ஆன்மீகத் தலைவர்கள் பலர் மேனாட்டு அறிவுப் புலமைப் பின்னணியைக் கொண்டிருந்தனர். 1963 இன் பின்னர் வட அமெரிக்காவில் புதிய ஆன்மீக இயக்கங்கள் வீறு பெற்று வளர்ந்தன. தென்னாசிய அகதிகள், குடியேற்றவாசிகள் என்பவர்களின் வருகை இப்புதிய ஆன்மீக இயக்கங்களுக்கு உரமூட்டின. ஆங்கிலம் தவிர்ந்த பிற தென்னாசிய மொழிகளில் கைந்நூல்கள், பிரசுரங்கள் வெளியிட வேண்டிய தேவையும் ஏற்பட்டது. குறிப்பாக, பல்கலாசாரக் கொள்கையுடைய கனடாவில்

தொடர்ச்சி 31ஆம் பக்கம்




# சகுனி - திரை விமர்சனம்

'சிறுத்தை' திரைப்படத்துக்குப் பிறகு நீண்ட இடைவெளி எடுத்துக்கொண்டு வந்திருக்கும் கார்த்தி படம் 'சகுனி'. 'பருத்திவீரன்', 'நான் மகான் அல்ல', 'பையா', 'சிறுத்தை' என்று தொடர்ந்து வெற்றிப்படங்களைத் தந்த நாயகன். இது கார்த்தியின் ஆறாவது படம். அதனால், எதிர்பார்ப்புகளும் அதிகம்.



நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள்: கார்த்தி, ப்ரனீதா (அறிமுகம்), அனுஷ்கா, சந்தானம், ராதிகா, பிரகாஷ்ராஜ், நாசர், ரோஜா, கோட்டா ஸ்ரீனிவாசராவ் ஆகியோர் நடித்திருக்கிறார்கள். இசை: ஜி.வி.பிரகாஷ். ஒளிப்பதிவு: பி.ஜி.முத்தையா. எழுதி இயக்கியிருப்பவர்: சங்கர் தயாள் (அறிமுகம்).


### கதை:

காரைக்குடி, நாட்டரசன்கோட்டையைச் சேர்ந்தவர் கமலக் கண்ணன் (கார்த்தி). செட்டிநாட்டு அரண்மனையை தனது பூர்வீக வீடாகக் கொண்ட பெரிய குடும்பம். ஊருக்கே சாப்பாடு போட்டவர்கள். ஆனால், தற்போது நலிந்துபோய் இருக்கிறார்கள். பிரமாண்ட வீடு மட்டும்தான் எஞ்சியிருக்கிறது. இந்நிலையில் அந்த வீட்டுக்கும் ஆபத்து வருகிறது. ரயில்வே மேம்பாலத்துக்காக அந்த வீட்டை இடிக்க வேண்டும் என்னும் நிலை உருவாகிறது. வீட்டைக் காப்பாற்றுவதற்காக, முதல் அமைச்சரிடம் மனு கொடுக்க, சென்னைக்கு வருகிறார், கார்த்தி. வந்த இடத்தில் முதலமைச்சர் (பிரகாஷ்ராஜ்) அவரை அவமானப்படுத்தி விடுகிறார். அவரை பழி வாங்கவும் வீட்டைப் பாதுகாக்கவும் சகுனி அவதாரம் எடுக்கிறார், கார்த்தி.

தொடர்ச்சி 26ஆம் பக்கம்

# குரல் வளத்தால் குடிமனை வெல்லும் குழந்தைகள்!

குரல்வளம் இறைவனது கொடையாகும். குரலின் இனிமை பாடல்களை தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கச் செய்யும். ரசிகர்கள் ஆணி அடித்தது போல அமர்ந்து பலமணி நேரம் கச்சேரியைக் கேட்டுக் கொண்டே இருப்பார்கள். மகுடிக்குக் கட்டுப்பட்ட நாகம் போல பாட்டின் பரவசத்தில் தம்மை மறந்து ரசிகர்கள் இருப்பார்கள். செவிக்கு உணவாக இருப்பது பாடல். இசை என்றால் மிகையில்லை. பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாவித்திட வேண்டும் என்றான் பாரதி. அவன் ஒரு பாவேந்தன். மனிதனது வாழ்க்கை சங்கீதத்தில் தொடங்கி (தாலாட்டு), சங்கீதத்தில் (ஒப்பாரி) முடிவடைகின்றது. எனவே சங்கீதம் மனித வாழ்வுடன் இரண்டறக் கலந்த ஒன்றாகும். ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது என்பதற்கேற்ப பாடல் வாழ்வினை பரவசத்தில் ஆழ்ந்துகின்றது. பயிர்கள் கூட சங்கீதத்தால் உச்சவிளைச்சல் தரும் என்பது சங்கீதத்தின் சால்பினை உணர்த்துவதாகும். வாய்பாட்டு சுருதி பிழையாமல் இராகம் பிசகாமல் பக்க



வாத்தியங்கள் இசையுடன் சங்கமாகும் போது 'சபாஷ்' பெறுகின்றது.

சங்கீத வித்துவான்கள் பலர் இருந்தனர். இப்போதும் இருக்கின்றனர். சங்கீத மும்மூர்த்திகள், T R. மகாலிங்கம், செம்மாங்குடி சீனிவாசையர், P.B. சிறிநீவாஸ், சிதம்பரம், ஜெயராமன், சீர்காழி கோவிந்தராசன், திருச்சி லோகநாதன், P. சுசீலா, ஜானகி, ராஜேஸ்வரி, பட்டம்மாள், KB சுந்தராம்பாள், சித்திரா... இப்படி பலபேரைக் கூறலாம். பக்திப் பாடல்களால் பலபேரைக் கவந்தவர்ளும் உண்டு. அவர்கள் இறந்தாலும் அவர்களது பாடல்கள் சாகாவரம் பெற்றவையாக விளங்குகின்றன. பாட்டைப் பண்ணோடு பாடினால் கேட்டு கிறுகிறுக்கும் நிலை ஏற்படும். பாட்டுத்திறத்தாலே பரிசுகள் பெற்றவர்கள் சங்கீத வித்துவான்கள். குயிலின் குரல், கிளியின் மொழி என்றெல்லாம் குரல் வளத்தை வர்ணிப்பதுண்டு. இத்தகைய இனிமை



நா. க. சிவராமலிங்கம்

தொடர்ச்சி 40ஆம் பக்கம்

Summer Tutoring

(Grade 1-12, College, & University)

* ENGLISH * FRENCH * MATH * SCIENCE *
* ENGINEERING * ACCOUNTING *

(647) 705 0725

* Prepares the students for next grade they enter in september
* Individual plan for each student to help build strong base
* Completely aligned with Ontario Curriculum
* Highly qualified and experienced teachers conduct lessons

## BASEMENT RENT

**MORNINGSIDE / SHEPPAED**
Newly renovated 2 அறைகள் கொண்ட bsmt வாடகைக்கு உண்டு. Gardening செய்யும் வசதியும் உண்டு. அருகாமையில் Mall, TTC, school, library U OF T. Small family preferred. No pets & No smoking. தொடர்புகளுக்கு: 416.834.1081

**MARKHAM & SHEPPARD**
1 Bedroom walk-out bsmt for rent. Laundry parking. Close TTC, mall, Tamil stores, HWY 401. Available August 01, 2012. 416.277.9044/905.683.5105

**MARKHAM & ELLESMERE**
2 Bedroom bsmt apt. for rent. Sep. entrance, Parking, laundry. Close to all facilities. Avail. immediately. Couple preferred. தொடர்புகளுக்கு: **647.680.5093**

**MIDDLEFIELD & HIGHGLEN**
1Bedroom, 2 bedroom, 3 bedroom bsmt apt. for rent. Sep. entrance, Parking, utilities included. Close to all facilities. தொடர்புகளுக்கு: **905.334.7398**

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc. தொடர்புகளுக்கு: **416.551.8379**

**MARKHAM & STEELES**
2 bedroom bsmt apt. for rent. Sep. entrance, Parking, cable. Close to bus, shopping, infront of Walmart. Avail. immediately. தொடர்புகளுக்கு: **905.471.2381**

**MARKHAM & STEELES**
1 bedroom bsmt apt. for rent. Sep. entrance, Parking. Close to bus, shopping, etc. Avail. immediately. தொடர்புகளுக்கு: **647.896.7740**

**NEILSON & MCLEVIN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to mall, TTC, school. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.725.9938

**MORNINGSIDE & MORNINGVIEW**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. 416.833.8903 / 647.995.8903

**MCCOWAN & DENISON**
1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC. Single girl or single boy preferred. Avail. immediately. 416.587.5843 / 905.472.1454

**BIRCHMOUNT & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, parking. Close to TTC, mall, YRT. Avail. immediately. 905.940.8609 / 647.760.5914

**MCCOWAN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Closet to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: 647.448.6464

**BELLAMY & PANDORA CIR.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. Students or small family preferred. 416.438.2559 / 416.454.3469

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, parking, kitchen. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.261.2279

**MORNINGSIDE & STAINS**
1 Bedroom bsmt for rent. Full washroom, laundry. Close to TTC, school. Avail. immediately. 1 Room also available. தொடர்புகளுக்கு: 647.895.8703 647.895.8702 (Before 1.00 PM)

**PHARMACY & MCNICOLL**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. July 01, 2012. தொடர்புகளுக்கு: 647.866.9464

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt fo rent. Sep. entrance, parking. Close to TTC, school & all amenities. Avail. July 01, 2012. தொடர்புகளுக்கு: 416.722.1853

**MCCOWAN & 16 TH AVE.**
Newly done 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry, bills including. Close to mall, babu catering. தொடர்புகளுக்கு: 905.887.5385

**MCCOWAN & 14 TH AVE.**
2 Bedroom + 1 washroom bsmt for rent. Sep. entrance, parking. Rent $750. We are looking for people as soon as quick. தொடர்புகளுக்கு: 416.318.4964

**BIRCHMOUNT & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately. Small family preferred. 416.873.0549 / 416.297.0549

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. July 01, 2012. 905.201.6043 / 416.725.3665

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, laundry. Close to TTC, school, mall, library. Avail. immediately. Ladies preferred. தொடர்புகளுக்கு: 416.831.8549

**9TH LINE & 14 TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, cable, parking, internet. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.400.5525

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. 905.471.2582 / 647.505.2582

**LAWRENCE & ORTONPARK**
தனிவழியுடன் கூடிய Bsmt இல் சகல வசதிகளுடனும் 2 அறைகள் வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 647.928.0667 / 416.701.0667

**PAINTED POST & BRIMORTON**
1 Bedroom apt and 1 bachelor apt for rent. Close to all facilities. Avail. immediately. 416.627.6194 / 416.880.3636

**MORNINGSIDE & SEWELLS**
1 Bedroom walk-out bsmt for rent.Sep. entrance. Close to TTC, mall, school. Avail. July 01, 2012. தொடர்புகளுக்கு: 905.946.5167 / 416.281.2509 / 416.473.7518

**NEILSON & MORNINGSIDE**
Newly finished 1 Bedroom basement apartment for rent with separate entrance. Laundry and utilities included. Minutes from TTC, malls, Tamil stores, HWY 401 & 407. Available July 1st. Couple or small family preferred. தொடர்புகளுக்கு: 416.335.9436

**KENNEDY & FINCH**
2 Bedroom bsmt for rent. Parking, laundry, cable. Close to TTC, mall, school, temle. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.291.2796

**MORNINGSIDE & OLDFINCH**
2 bedroom bsmt for rent. washroom, sept. entrance, laundry, cable. Bright window, freshly painted. Rent $850. Close to Centennial college U of T. தொடர்புகளுக்கு: 416.722.3450

**MORNINGSIDE & NIGHTSTAR**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, full washroom, kitchen. Close to TTC (116 & 133), school. Couple preferred. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.464.4132 (After 5:00pm)

**KENNEDY & FINCH**
2 Bedroom bsmt for rent. Cable, parking. Close to TTC, tamil stores, temple, Grace Hospital, school. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.230.7696 / 647.966.8612/ 416.412.0406

**KENNEDY & FINCH**
2 Bedroom bsmt apt. for rent with all facilities. Sep. entrance. Close to TTC, mall, etc. Avail. July 01, 2012. தொடர்புகளுக்கு: 647.779.3411

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt for rent. Close to all facilities. TTC, YRT. Avail. immediately. No pets. தொடர்புகளுக்கு: 416.735.5623

**WARDEN & ST.CLAIR**
2 Bedroom, 3 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Utilities included. Avail. immediately. 647.693.3107/ 416.637.2277

**MARKHAM & DENISON**
2 bedroom bsmt for rent. Close to all facilities. Avail. immediately. 2 or 3 people preferred. 905.599.1622 / 416.939.8656

**BIRCHMOUNT & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall. Avail. immediately. தொடர்புகளுக்கு: 647.783.4850 / 905.294.2674 416.293.6211

மேலும் பக்கங்கள் 25, 26

**MIDLAND & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime. தொடர்புகளுக்கு: 416.750.9138

## CONDO. FOR RENT

**KENNEDY & ELLESMERE**
2 Bedroom apt for rent in a condo. Parking, 1 washroom. Rent $1050. Utilities including. தொடர்புகளுக்கு: 416.522.3314

## HOUSE FOR RENT

**PHARMACY & FINCH**
4 Bedroom House + 1 Bedroom bsmt for rent. Laundry. Library, mall, plaza, TTC. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.301.5555

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom Bungalow House for rent.1 washroom. New kitchen, cabinets. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.301.5555

**STEELES & 9TH LINE**
4 Bedroom house for rent. 3½ washroom. parking. Avail. immediately. Close to all amenities தொடர்புகளுக்கு: 416.931.3444

**KENNEDY & EGLINTON**
3 Bedroom house with all facilities. Very good for small family with children. Very convenient location with schools, banks, shopping, docotors etc. Also parking and garden. Avail. immediately Contact: 416.264.3899

**MIDDLEFIELD & ELSON**
4 Bedroom + 2 full washroom house for rent. 2 Car parking. Close to all facilities. Avail. July 01, 2012. Family preferred. 416.819.3204 / 905.534.2121

**MARKHAM & SHEPPARD**
1 Bedroom for rent - main floor. Parking. Close to all facilities. Avail. immediately. பெண்கள் விரும்பத்தக்கது. 416.291.1752 / 416.460.2549

**MORNINGSIDE & FINCH**
2 Bedroom upper level house for rent. 8 Hours work avail. Close to all facilities. தொடர்புகளுக்கு: 647.867.2129

## HOUSE FOR SALE

**9TH LINE & HOOVER PARK**
4 Bedroom House for sale - Stouffville. Double garage, 3 washroom. Close to bus, school, plaza, Walmart, etc. தொடர்புகளுக்கு: 416.409.4730

## CAR WANTED

Toyota camry 1995 - 1998. 4 Cylinder. Any condition. தொடர்புகளுக்கு: 647.448.2569

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# ROOM RENT

**MARKHAM & BRIMORTON**
2 rooms in bsmt for rent. Sep. entrance. No Parking. Close to ttc, mall, centennial college.
தொடர்புகளுக்கு: 416.906.5331

**Room for rent only female**
**MORNINGSIDE & LAWRENCE** சந்திப்பிற்கு அருகில் வீட்டின் மேற்தளத்தில் எல்லா வசதிகளுடன் கூடிய அறை ஒன்று வாடகைக்கு உண்டு. பெண்கள் விரும்பத்தக்கது. தேவை ஏற்படின் இரண்டு நேரச் சாப்பாடு வழங்கப்படும்.
**647.344.5044 / 416.312.6827**

**MARKHAM & BRIMORTON**
2 rooms for rent in a bsmt. Sep. entrance, Parking. Close to bus, shopping, school, etc. Avail. anytime. வேலையும் எடுத்துத்தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.823.4215

**MORNINGSIDE & ELLESMERE**
1 Bedroom for rent. Close to mall, TTC, HWY, Science techno center, hospital, etc.
தொடர்புகளுக்கு: 647.981.3771

**NEILSON & FINCH**
Rooms for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.843.1568

**FINCH & MIDDLEFIELD**
1 Bedroom for rent. Close to GTA Square Mall, TTC, Tamil stores. Avail. August 01, 2012. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.546.3491

**DONMILLS & SHEPPARD**
3 Bedroom in main floor rent. Kitchen, laundry, parking. Close to TTC, bank, school, Donmills subway, HWY 401, 404. Avail. August 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.502.8053

**MORNINGSIDE & ELLESMERE**
1 Bedroom for rent. Sep. washroom, kitchen. Close to all facilities. Avail. Anytime. Student or working ladies preferred.
416.286.2932 / 416.879.3650

**MARKHAM & ELLESMERE**
One Room for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.566.1918

**KENNEDY & LAWRENCE**
1 Room for rent. Attached washroom, 3 min. walk to Lawrence LRT. ஒருவர் விரும்பத்தக்கது. Available immediately.
416.994.9635 / 416.757.9456

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom condo. வில் 1 bedroom வாடகைக்கு உள்ளது. Parking, cable, internet. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.991.1436

**BIRCHMOUNT & FINCH**
2 Bedroom condo வில் 1 bedroom வாடகைக்கு உள்ளது. Sep. washroom, parking. Ladies preferred. Big closet, sep. full washroom. Close to all facilities. Avail. immediately. Young couple. தொடர்புகளுக்கு:
416.623.9121 / 416.804.1291

**MCCOWAN & 14 AVE.**
1 Bedroom for rent. Parking, laundry. Closet to YRT, mall. Avail. immediately.
416.845.4568 / 905.946.8843

# ROOM RENT

**BSMT / ROOMS FOR RENT**
**MARKHAM & LAWRENCE**
Newly renovated bsmt apt. avail. immediately. Close to TTC, mall, centennial college.
647.706.4881 / 416.439.4076

**MCCOWAN & FINCH**
1 Room for rent. Close to TTC, mall. Avail. immediately. வயதானவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.929.0539

**MORNINGSIDE & NEILSON**
ஒரு பெரிய அறை (large Master bedroom) வாடகைக்கு உண்டு. Washroom, parking. பெண்கள் / தம்பதியினர் விரும்பத்தக்கது. Includig bedroom set. Close to all facilities. Avail. immediately.
416.267.0072 / 647.210.4292

**KEELE & FINCH**
Furnished room for rent in condo. Close to all facilities. Avail. immediately.
905.209.9212 / 416.648.1679

**DUFFRIN & HWT 7**
One Master bedroom with washroom. 1 Bedroom also avail. Close to York university, bus, shopping. Avail. immediately. Ladies or young couple preferred.
647.389.9193 / 905.832.2203

**MARKHAM & STEELES**
1 Bedroom for rent. Close to all facilities. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.209.8999

**MARKHAM & ELLESMERE**
1 Room for rent. Parking, internet, cable உட்பட சகலவசதிகளுடன் வாடகைக்கு உண்டு. Avail. immediately.
416.431.9950 / 416.557.7241

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
தொடர்புகளுக்கு: 416.335.5242

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

**NEILSON & FINCH**
**MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
647.361.9527 / 416.825.9717

# மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும், 32 வயதுடைய கனேடிய பல்கலைக்கழக பட்டப்படிப்பு முடித்து வேலை செய்யும் மணமகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர். கனடா, அமெரிக்காவில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.299.1463

# PRIVATE CONDO SALE

**MARKHAM & HIGHGLEN**
2 Bedroom + 2 full washroom condo. for sale. Sep. laundry, 5 appliance, parking, locker. Ready to move in.
Asking price $254,900.
905.471.8695 / 647.867.7816

## ADMINISTRATIVE ASSISTANTS

Required for a Law Office. Should have knowledge of Word & Excel. Ability to write and speak English. Ability to speak tamil. Training will be provided. Must be hardworking and reliable.
Fax resume to: 416.754.2150

# KEY BOARD CLASSES

**MARKHAM & LAWRENCE**
எதிர்வரும் July 01, 2012 இல் key board classes ஆரம்பிக்கவுள்ளது. தமிழ், ஆங்கில பாடல்களை 3 மாதத்தில் வாசிக்கக் கற்றுக்கொடுக்கப்படும். முதல் இரண்டு வகுப்புக்கள் இலவசமாக கற்பிக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

# TUTORING

By tutor experienced at colombo schools, university & technical college.
- Math 6 - 12, • Physics, Data Management
- Computer Training
- Web Design & Development

Use computer program to manage bills, payments, reminders, birthdays etc.
Contact: 416.706.1654

# காணி விற்பனைக்கு

குப்பிளான் தெற்கு 10 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 905.209.0876

# திருமண சேவை

உங்கள் அன்புக்குரியவர்களின் மணவாழ்க்கையை மனம்போல் அமைத்துத் தர 20 வருடங்களுக்கு மேலாக கனடாவில் திருமண சேவையை திறம்பட செய்து வருபவரை அணுகுங்கள்.
416.992.8782 / 905.472.8533

# மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட விவாகரத்தான 36 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.831.4772

# மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் விவாகரத்து பெற்ற 35 வயதுடைய ரொறொன்ரோவை சேர்ந்த மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 647.918.5520

# CAR FOR HIRE

Wedding, Airport, Temple, Special occasion ஆகிய தேவைகளுக்கும், Limousine தேவைக்கும் அழையுங்கள்.
தொடர்புகளுக்கு: 416.274.5495

# SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். சாறி Blouse ஒன்று தைப்பதற்கு $20.
தொடர்புகளுக்கு:905.492.0259

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# JOB JOB JOB

வாகன வசதி இல்லாதவர்கள், வயதானவர்கள் தங்கள் வாகன தேவைகளை பூர்த்திசெய்ய
(Pick-up, drop-off )
அழையுங்கள்: 647.607.9927

New Market இல் இயங்கி வரும் Breakfast Restaurant க்கு வார இறுதி நாட்களில் (Saturday & Sunday) அனுபவமுள்ள cook தேவை.
தொடர்புகளுக்கு: 905.392.6080

**MARKHAM & SHEPPARD**
Computer Store ஒன்றிற்கு Sales person தேவை. பெண்கள் விரும்பத்தக்கது.
idealstairs21@gmail.com

## RENOVATION

Renovation, repairs & paint. போன்ற வேலைகளுக்கு
அழையுங்கள்: 647.998.3535

**Experienced Hardwood installer**
Monday - Friday - 8.00am - 6.00pm.
தொடர்புகளுக்கு: 416.613.1919

# Classes

**MORNINGSIDE & LAWRENCE** சந்திப்புக்கு அருகில் அனுபவமுள்ள யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட பட்டதாரி ஆசிரியரினால் கர்நாடக சங்கீத வாய்ப்பாட்டு, வயலின் மற்றும் தமிழ் புதிய வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன.
**647.847.1509 / 647.344.5044**

# VAN FOR SALE

2004 Honda Odyssey 7 passenger mini van, power lock & window, A/C, silver,no accident, clean in and out, 227000KMS, leather interior, DVD, CD changer, E-TESTED. 5800$
தொடர்புகளுக்கு: 647.880.1416

# BUSINESS FOR SALE

**MCCOWAN & EGLINTON**
Grocery Store ஒன்று விற்பனைக்கு உள்ளது. 1160 Sq.ft. Avail. immediately.
416.438.6959 / 416.278.5334

# COMPUTER REPAIR

- கணனி திருத்தவேலைகள்
- கணனி தேவைகள்
- அடிப்படை கணனி பயிற்சி
- இலவச ஆலோசனைகள்



**ProWin Computers.**
2383 Eglinton Ave. East
(Wind Mobile Store) Kennedy & Eglinton
**416 - 879 7489 / 647 - 340 5568**

# இன்சுவை உணவுகள்

We can delivery your home. **அப்பம்,** தோசை, கொத்துரொட்டி, குழல்பிட்டு, பிரியாணி மற்றும் Shorteats, cake பலகார வகைகள் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும். Birthday, ஒன்றுகூடுதல், விசேட நிகழ்வுகளுக்கு உங்கள் வீட்டில் வந்து special யாழ்ப்பாண அப்பம், தோசை சுடச்சுடச் செய்தரப்படும். Monthly சாப்பாடும் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 647.522.7599

மேலும் பக்கங்கள் 25, 26



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)


BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490 / 647.831.0070

**Questions - 295**

1. Four years ago sureka was three times as old as sheromie was. In five years, Sureka will be twice as old as sheromie will be. How old is sureka now? (For Grade 8 & 9)

2. A die in a cube with its faces numbered I through 6. One red die and One blue die are rolled. The sum of the numbers on the top faces is numbered. What is the probability that this sum is a perfect square? (For Grade 8 & 9)

3. In the diagram, the circle has center O. OF is perpendicular to DC at F and is perpendicular to AB at E. If AB = 8 DC = 6 and EF = 1 determine the radius of the circle.




4. An indivitual community time (min) to work has mean 73 min. and standard deviation 12 min. How early should the person leave home to be sure of arriving at work on time atleast 80% of the time? (Grade 12)

5. If u = (5, -5, 2) v = (1, 8, -4) and w = (-2, -1, 2) express x = (-3, 6, 8)
   a. In terms of u, v and w
   b. In terms of the unit vectors u, v and w (For Gr 12)

6. If OE = - 2/5 OD +7/5 OF and OG = 1/5 OD + 4/5 OF
   a. In what ratio does D divided GE?
   b. In what ratio dies F divide GE.

7. The shadow cast by a mean standing I m from a lamp post is 1.2 m long. If the man is 1.8m tall and walks away from the lampost at a speed of 120m/m at what rate in the shadow lengthening after 5 sec? (For Gr. 12)

# சகுனி...

## 22ஆம் பக்கத்தொடர்ச்சி

இட்லிக்கடை ஆச்சியை (ராதிகா) கவுன்சிலராக்குகிறார். பிறகு அவரை மேயராகவும் ஆக்குகிறார். சும்மா கிடந்த பீடி சாமியாரை (நாசர்) சர்வதேச பிரபலமாக உயர்த்துகிறார். ஆட்சிக்கே வராத ஒரு கட்சியை சேர்ந்த, ஜெயிலில் இருக்கும் எதிர்க்கட்சி தலைவர் பெருமாளை (கோட்டா ஸ்ரீனிவாசராவ்) தேர்தலில் ஜெயிக்க வைத்து முதல்வராக்குகிறார். இதையெல்லாம் முதலமைச்சர் பிரகாஷ்ராஜை பழிவாங்கவே செய்கிறார். கடைசியில் வீட்டை இடிப்பதற்கு எதிரான உத்தரவு கார்த்தியின் கைகளுக்கு வந்து சேர்கின்றன. அடுத்து, டில்லி அரசியலை சீர்படுத்த கார்த்திக்கு அழைப்பு வருவதுடன் படம் முடிகிறது.

மேலே, முந்தின பாராவை கடைசி வரி வரைக்கும் சிரிக்காமல் படித்தீர்கள் என்றால், பலவீனமாக அடுத்து சொல்லப்படுவதை பலமாக நீங்கள் வாசிக்கலாம். ஒரு முறையாவது சிரித்தவர்கள், என்ன இது லாஜிக்கே இல்லாமல் இருக்கிறது என நினைத்தவர்கள் அப்படியே தொடரலாம்.

சரி விஷயத்துக்கு வருவோம்.

### பலவீனம்:

படத்தின் மிகப்பெரிய பலவீனம் 'தூள்' திரைப்படத்தின் கதை போலவே இருப்பது. அடுத்து கதாநாயகன் கார்த்தியின் நடிப்பு. கார்த்தி படம் நெடுக சிரிக்கிறார், சிரிக்கிறார், சிரித்துக் கொண்டேயிருக்கிறார். குட்டைப் பாவாடையுடன் ஒரு பாடலுக்கு நடனமாடுவதோடு கதாநாயகி ப்ரனிதா பணி முடிந்து விடுகிறது. 'மாமா' என்று அவர் கார்த்திக்குடன் காதல் செய்யும் காட்சிகள், ஏதோ இயக்குநர் சொல்வதால் செய்கிறேன் என்று நமக்கு உணர்த்துவது போல் இருக்கிறது. பிரகாஷ்ராஜ், கோட்டா சீனிவாசராவ், ராதிகா போன்ற திறமையான நடிகர்களும் வீணடிக்கப்பட்டிருக்கிறார்கள். "டேய் டேய் டேய்... பொதைச்சுடுவேன்டா...!" என்று பொங்கும் வில்லன் பாத்திரத்தில் இன்னும் எவ்வளவு காலம்தான் பிரகாஷ் ராஜைக் காண்பித்துக் கொண்டிருப்பார்களோ, தெரியவில்லை. ரோஜா, கார்த்தியின் அத்தையாய் வருகிறார். கிரண், வில்லனின் ஆசை நாயகியாக வருகிறார். சமீப காலம் வரைக்கும் கதா நாயகியாக நடித்தவர். பாவம் கிரண் நிலை.



- ஃபிலிம்நியூஸ் கிருஸ்ணன் -

ஜீ.வி.பிரகாஷ்குமாரின் இசையில் நினைவில் நிற்கும்படியான பாடல் ஏதுமில்லை. பல இடங்களில் உதட்டசைவு பாடல் வரிகளுக்கு பொருந்தாமல் இருக்கிறது. பி.ஜி.முத்தையாவின் ஒளிப்பதிவில் குறையேதுமில்லை என்றாலும் மெச்சும்படியும் இல்லை.

### பலம்:

அனுஷ்கா, ஒரு பாடலுக்காக மட்டும் வருகிறார். என்றாலும், அழகாக இருக்கிறார். இவரையே கதாநாயகியாக போட்டிருந்தால் கொஞ்சம் ஆறுதலாக இருந்திருக்கும். நாசரின் நடிப்பும் பரவாயில்லை. இவர்கள் இருவருடன் இன்னொரு கலக்கல் ஆறுதல் சந்தானம். சென்னையில் முதலமைச்சரிடம் மனு கொடுக்க வரும் கார்த்திக்கு ஆட்டோ டிரைவர் ரஜினியாக அறிமுகமாகும் சந்தானம், திரைக்கதைக்கு இடையூறில்லாமல் இடையிடையே வந்து சிரிக்க வைக்கிறார். கார்த்தி - சந்தானம் காட்சிகளில் இருவரும் மாறி மாறி பஞ்ச் டயலாக்குகளால் பின்னியெடுக்கிறார்கள். ஆனால், நீள நீள வசனங்களை கொஞ்சம் குறைத்துக்கொண்டு தனது உடல் மொழியை வைத்து இனிமேல் சந்தானம் தன் நடிப்பைக் காண்பித்தால் நன்றாக இருக்கும்!

### பார்க்கலாமா?

அரசியல் சூதாட்டக் கதை. எனவே, மகாபாரத சூதாட்ட நாயகன் சகுனி பெயரை படத்துக்கு வைத்திருக்கிறார்கள். ஆனால், இந்த சகுனி - காற்றடைக்கப்பட்ட சிப்ஸ் பாக்கெட்!

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8. Classes available at ***Scarborough & Stouffville***

***Contact: 647.340.9490 / 647.831.0363***

**BUY, SELL or LEASE**

**Dinesh Jeganathan**
**Sales Representative**



cell: 647-895-3466
email: jdinesh@live.ca
office: 416-298-3200
fax: 416-298-3440

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife Today Realty Ltd.,** Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.

# RENOVATION SPECIALISTS

- *Kitchen & Pantry*
- *Flooring & Tiling*
- *Basement Completion*
- *Bathroom improvements*
- *Deck & Patio*

***Before selling homes for attractive upgrades to get high value in the market or After buying homes for affordable and innovative upgrades***

***We Customize your needs!***

***Contact : Varma (416) 857-9773***

# ROOM FOR RENT

## *WARDEN & FINCH*

Condo. வில் சகலவசதிகளுடன் கூடிய இரண்டு அறைகள் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் வாடகைக்கு கொடுக்கப்படும். அருகாமையில் பஸ் வசதியுடன் உடனடியாக இருந்து வாடகைக்கு விடப்படும்.

**தொடர்புகளுக்கு: 647.402.9490**

# காணி வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் Brown Road இல் கல்லடிச் சந்திக்கு அருகில் 3 பரப்புக் காணியுடன் 5 அறைகள் கொண்ட அனைத்து வசதியும் நிறைந்த வீடு விற்பனைக்கு உண்டு. யாழ். பல்கலைக்கழகம் தொழில் நுட்பக்கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி என்பன மிகக் குறுகிய தூரத்தில் உள்ளன.

தொடர்புகளுக்கு: **416.899.5553**

# HOUSE FOR RENT

## *MIDDLEFIELD & STEELES IN MARKHAM*

*Newly renovated 4 bedroom house for rent. 2 full washrooms. Close to TTC, York transit, shoppers Drug Mart, banks, post office, super Markets, walmart. Enrgy certified. All floors are hardwood & laminated.*

***Contact: 416.857.9773***

# OFFICE SPACE FOR RENT

## *MORNINGSIDE & SHEPPARD*

Real Estate, Mortgage, Insurance offices **போன்றவையும்** Show Room **உம் நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு.** ***Including High-speed Internet, Electricity, Heating, Water.***

***Pl. Call: Murale - 416.569.4065***

# HOUSE FOR SALE - COLOMBO

கொழும்பில் அழகிய தொடர்மாடிகள் அதி நவீன வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு. 2 அறைகள், 3 அறைகளுடன் மொத்தம் 3 இடங்களில் (Temples Road, Samundra மாவத்தை, College Ave.) மொத்தமாக 70 வீடுகள் விற்பனைக்கு உண்டு. (Sea Side view & Land side view) உங்களுக்கு பிடித்தமான முறையில் வீட்டு வேலைகள் முடித்துத்தரப்படும். (GYM, Roof Top BBQ மற்றும் பல). உங்களுடைய வீடுகளை பதிவு செய்து உங்கள் முதலீட்டை உறுதிப்படுத்துங்கள்.

kulagan: **647.880.1416**

# PRIVATE TUTORING

## *By 25 years experienced teacher*

- Math - Grade 9 – 12 & college & university students
- Pre university students calculus (Summer classes)
- We do computer repair and
- Physics – Grade 11 – 12
- Computer subject Grade 9 – 12

***We do custom application programming for you business (Web base and non web base too)***

Contact: ***Siva M. Easwaramoorthy*** (B.sc. and Computer Programmer)

அழையுங்கள்: ***416.271.8467 / 416.265.9138***

# திவ்ய ஆற்றுக்கால் தேவி ஜோதிடம்



ஜாதகம் கணித்தல், திருமணப்பொருத்தம், கல்வி, குழந்தைப்பேறு, திருமணத் தடை நிவர்த்தி.

அழையுங்கள்: ராம் **மீனாட்சி சுந்தரம்**

Phone - **416.439.2002**

***67 Milford Haven Drive,***
***Scarborough, ON. M1G 3C9 Canada.***
***Attukaljothidam@gmail.com***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 24, 25

# நூல் வெளியீடு

குறமகள் எனும் புனைபெயரைக் கொண்ட வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்களின் 'மிதுனம்' எனும் நாவல், எழுத்தாளர் இணையத்தினால் வெளியிடப்படவுள்ளது. இந் நிகழவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இடம்:** *Scarborough Civic Centre Council Chambers*
**காலம்:** சனிக்கிழமை *July 7, 2012*
**நேரம்:** மாலை 3 மணி

தலைமை: சின்னையா சிவநேசன்
வெளியீட்டுரை: மனுவல் ஜேசுதாசன்
ஆய்வுரை: எழுத்தாளர் தேவகாந்தன்
முனைவர் பார்வதி கந்தசாமி

- எழுத்தாளர் இணையம்

# கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

## வருடாந்த கல்விசார்போட்டிகள் - 2012

(Educational Contest 2012 )

கொக்குவில் இந்துக்கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் -கனடா தன் அங்கத்தவர்கள், அவர்களின் வாரிசுகள் மத்தியில் நடத்தும் வருடாந்த கல்விசார் போட்டிகள்.

பண்ணிசை, பேச்சு, வாசிப்பு, கட்டுரை, சொல்வதெழுதுதல், எழுத்துக் கூட்டிச் சொல்லுதல், உறுப்பெழுத்து, கணிதம், ஆங்கிலம் ஆகிய போட்டிகள் நடைபெற உள்ளன. அங்கத்தவர்களின் வாரிசுகளை இப்போட்டியில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இடம்: St. Stephen's Pressbyterian Church
3817 Lawrence Ave.East, Scarborough,Ontario, M1G 1R2

காலம்: ஜுலை 07, 2012 - சனிக்கிழமை - காலை 8:30 மணி
விண்ணப்ப முடிவுத் திகதி: ஜுன் 30, 2012

தொடர்புகளுக்கு : ***(416) 293.2851 / (416) 414.3327 / (416) 283.5265 (416) 299.5083 / (416) 299.6645***

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு

***www.vlambaram.com***

# முகங்கள்: பிரணாப் முகர்ஜி

## இரண்டாம் இடம்!

“பொல்ட்டு! கொஞ்சம் கடைக்குப் போயிட்டு வர்றியா?”
“சரிம்மா!”

கால்சட்டையை இழுத்து விட்டுக்கொண்டு வந்த மகனிடம் சரியான சில்லறையை எண்ணிக் கையில் கொடுத்தார் அம்மா. அந்த அம்மாவுக்கு பலசரக்குகளின் விலை அத்துப்படி. கூடுதலாகக் குழந்தைகள் கையில் ஒரு காசுகூட கொடுக்கமாட்டார். 1940களில் இந்தியாவில் குழந்தைகளுக்கு பாக்கெட் மணி கொடுக்கும் வழக்கம் கிடையாது. கையில் காசு புழங்கினால் குழந்தைகள் கெட்டுப் போகும் என்பது அக்கால பெற்றோர்கள் எண்ணம். ஆனால், அம்மா அவ்வளவு கவனமாக இருந்தாலும் பொல்ட்டு கையில் கொஞ்சம் சில்லறை தேற்றிவிடுவார். அவர் அண்ணன் பியூஷ்க்கு இது ஒரே ஆச்சரியம். “எப்படிடா!” என்று மலைப்பான். பொல்ட்டு ரகசியமாய் சொல்வான்: “அம்மாவிற்கு விலைவாசி துல்லியமா தெரியும். ஆனால், எடை சரியா இருக்கானு தெரியுமா?”

**- மா. கிருஷ்ணன் -**

இந்தப் புத்திசாலி பொல்ட்டு வேறு யாருமல்ல, இந்தியாவின் அடுத்த ஜனாதிபதிக்கான தேர்தலில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள, பிரணாப் முகர்ஜிதான்



அது. “பொல்ட்டு” என்று குடும்பத்தினர் செல்லமாக அழைத்த அந்த குழந்தைக்கு தற்போது 77 வயது!

மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த பிரணாப் முகர்ஜி, அம்மாநில மூத்த காங்கிரஸ் தலைவரான கிங்கர் முகர்ஜியின் மகன். டிசம்பர் 11, 1935 அன்று பிறந்தவர். அரசியல் அறிவியல், வரலாறு ஆகிய பாடங்களில் முதுகலை பட்டம் பெற்ற பிரணாப், கல்லூரி ஆசிரியராக வாழ்க்கையை தொடங்கினார்.

இன்று பொருளாதார வல்லுநராகக் கருதப்பட்டாலும் அக்காலத்தில் அவர் போதித்தது அரசியல் அறிவியல். பின்னர் சிறிது காலம் வக்கீலாக பணியாற்றினார். ‘தேஷர் தக்’ (தாய்நாட்டின் குரல்) என்ற பிரபல வங்க மொழிப் பத்திரிகையில் பத்திரிகையாளராகவும் பிரணாப் பணியாற்றியுள்ளார். 1960களில் தீவிர அரசியலில் குதித்தார். விரைவிலேயே மேற்கு வங்காள மாநில காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஆனார். அப்போது, மேற்கு வங்க முதல்வராக அஜோய் முகர்ஜியும் துணை முதல்வராக ஜோதிபாசுவும் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

1969 ஜூலை 21ஆம் தேதி இந்திய நாடாளுமன்றத்தில் அடியெடுத்து வைத்தார் பிரணாப். அன்று மாநிலங்களவைக்கு வங்காளத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு பேரில் அவரும் ஒருவர். அன்று ஆரம்பித்த அவரது அரசியல் பயணம் பல மேடு பள்ளங்களைத் தாண்டி ஒரு நதி போல் நாற்பதாண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து 35 ஆண்டுகள் தேர்தலை சந்திக்காமல் மேல்சபை உறுப்பினராகவே பலதுறைகளிலும் அமைச்சர் பதவிகளை வகித்த பிரணாப், 2004ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் முதன் முதலாக மேற்கு வங்கத்தின் சாங்கிப்பூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதே தொகுதியில், 2009ஆம் ஆண்டு தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

தொடர்ச்சி 36ஆம் பக்கம்


# தமிழும் கடலும்

## காலம் இலக்கிய நிகழ்வு




மு. புஷ்பராஜனின்
**வலை உணங்கு குருமணல்**

**நூல் அறிமுகமும் வெளியீடும்**

யுத்தத்தால்
சின்னாபின்னப்பட்டுப்போன
கடற்கரைச் சிற்றூரையும்
அங்கு வாழும் மக்களின்
வாழ்வியலையும் ஒருவித ஏக்கத்தோடுதான்
ஆசிரியர் பதிவுசெய்துள்ளார்.
இப் பதிவை அவர் மேற்கொண்டிராவிட்டால்
ஓர் ஊரின் வரலாறு உலகிற்குத் தெரியாமல்
போயிருக்கும். அதற்காகக் குருநகரின்
இன்றையத் தலைமுறையும் எதிர்காலத் தலைமுறையும்
மட்டுமின்றி நாமும்கூட ஆசிரியருக்கு
நன்றி சொல்லியாக வேண்டும்.
தென்தமிழ் நாட்டு மீனவர்களின் வாழ்வியலைப்
பதிவுசெய்ய விரும்புவோருக்கு இந்நூல்
வழிகாட்டியாக அமையும் தன்மையது.

**July 14, 2012 5:30 P.M**

**Scarborough Village C.C**
**3600 Kingston Rd.**
**(@Markham Rd.)**
**Toronto, ON. M1M 1R9**

**எஸ். ராமகிருஷ்ணனின் இலக்கியப் பேருரை**

**கண்ணகியுடன் நடந்தேன்**
**சிலம்பும் தமிழும்**




**அனைவரையும்**
**அன்புடன்**
**அழைக்கின்றோம்!**

# கைசன்பேர்க்கின் உறுதியின்மைக் கொள்கை

## நுண்ணுலகியல் 37 குவாண்ரம் பிறந்த கதை

அணுக்கருவினைச் சுற்றிவரும் இலத்திரன்களின் இயக்கத்தினை அறிந்து கொள்ளும் முயற்சியின் போது கிடைத்ததுதான் உறுதியின்மைத் தத்துவம். இந்நாட்களில் பலரும் பல புலங்களிலும் இந்த உறுதியின்மைத் தத்துவத்தினைப் பாவிப்பதை நாம் அறிவோம். இத்தத்துவத்தின் அடிப்படையான விபரத்தினைப் பார்ப்போம். இதனைப் புரிந்து கொள்வதற்காக, பின்வரும் எடுகோளினைப் பாருங்கள். எமது உடலின் வெப்பநிலையினை உடல் வெப்பமானி கொண்டு அளவிடுகிறோம் எனக் கருதுவோம். உடல் வெப்பமானி காட்டும் எமது உடல் வெப்பநிலையானது 98 பாகை பரணைற் எனக் கொள்வோம். இந்த முடிவினை கொஞ்சம் விபரமாகப் பார்ப்போம். எமது உடலில் இருந்து சிறிதளவு வெப்பத்தினை



எடுத்தே உடல் வெப்பமானி வெப்பநிலையைக் காட்டுகிறது. அதனால் உடல் வெப்பநிலையானது அளக்கப்படும் வேளையில் உடலின் வெப்பநிலை, அது வெப்பமானிக்குக் கொடுக்கும் வெப்பத்தால் சிறிதளவு குறைந்துவிடும். அந்தக் குறைந்த வெப்பநிலையால் வெப்பமானி தந்த வெப்பநிலையில் ஒரு வழு ஏற்படுகிறதல்லவா. அதாவது வெப்பமானியின் வாசிப்பில் திருத்தம் இல்லாது ஒரு உறுதியின்மை உள்ளதல்லவா. அதாவது வெப்பமானியின் வாசிப்பானது எமது உடலின் வெப்பநிலை பற்றிய உறுதியான தகவலைத் தரவில்லை, தரமுடியாது.

ஆனாலும் இந்த வழுவானது, உறுதியின்மையானது மிகமிகச் சிறியதாக இருப்பதனால், அந்த வழுவினைக் கருதாது, எமது உடலின் வெப்பநிலையை 98 பாகை பரணைற் என்றே நாம் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் அணுக்கருவினைச் சுற்றி வருகிற இலத்திரன்களின், ஒரு குறிப்பிட்ட கணத்திலான நிலை, வேகம், அக்கணத்தினை அளக்கும் நேரம் போன்றவற்றில் அளக்கப்படும் போதிலான வழுவானது தவிர்த்துக் கொள்ளக்கூடிய அளவு சிறியன அல்ல. அங்குதான் இந்த உறுதியின்மைத் தத்துவம் பாவிக்கப்படுகிறது.

அணுவில் இலத்திரனின் நிலையினை இலகுவில் அறிந்திட முடியாது. இலத்திரனின் குறிப்பிட்ட கணத்திலான நிலையை (இடத்தை) அறிவதற்கு, அணுவின் ஊடாக ஒளித்துகள் (போட்டோன்)களை செலுத்தி, அவற்றை இலத்திரனுடன்



- கனி -
416.261.1348
leptons@hotmail.ca

தொடர்ச்சி 38ஆம் பக்கம்

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பேரண்டம் - 111

Train to be a ...
Community Service Worker With CO-OP



Other Diploma Programs:
Computerized Accounting
THE CANADIAN PAYROLL ASSOCIATION CPA ACP L'ASSOCIATION CANADIENNE DE LA PAIE
Network Engineering
Microsoft | IT Academy Program
Business Administration
Medical Office Assistant

EI, WSIB, ODSP Clients and New Immigrants welcome

citi COLLEGE

You may qualify for
SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours / week
Call us now for details
(416) 840-9179

www.CitiCollege.ca

Customized Corporate Training available for:
MS-Office 2003, 2007, 2010
Upgrade MS-Office 2003 to 2007 or 2010
Microsoft server 2003 and 2008 Subjects
A+ Certification / Cisco CCNA

OACC PROUD MEMBER ontario association of career colleges

Call Now: (416) 840-9179
Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005
Financial Assistance may be available to those who qualify

# “மேற்கில் வாழ்கிற, தமிழ் அரசியல் விவாத நெறிப்படுத்தல் செய்பவர்கள் சேனல் நான்கு மற்றும் பிபிசி இரண்டு போன்ற சேனல்களில் இதே வகையில் நிகழ்ச்சிகள் நடத்துபவர்களிடமிருந்து சில விடயங்களைப் பயில வேண்டும்”

## யமுனா ராஜேந்திரனுடன் ரதன் உரையாடல்


**கடந்த வருடம் இலண்டனில் நடைபெற்ற நிறக் கலவரம் என்ன எச்சரிக்கையை காட்டுகின்றது? பிரித்தானிய அரசு கறுப்பின மக்களுக்கு உரிய நீதி வழங்கியுள்ளதா?**

முதலாவதாக ஆப்ரோ-கரீபிய இளைஞர்கள் பெண்களின் கோபத்திற்கான காரணமாக அரசியல் விமர்சகர்கள் முன்வைக்கும் காரணங்களைப் பார்ப்போம்: வன்முறை துவங்கிய டோட்டன்ஹாம் பகுதியில் நான்கில் மூன்று பகுதியிலான இளைஞர் களுக்கும் யுவதிகளுக்கும் பிரித்தானிய அரசு வழங்கிவரும் சமூகநல உதவித் தொகைகள் நிறுத்தப்பட்டமை கலவரத்திற்கான அடிப்படைகளில் ஒன்றாகச் சுட்டிக்காட்டப்படு கிறது. டோட்டன்ஹாம் பகுதியில் வாழும் இருவரில் ஒருவர் வேலையின்மையினால் அவதிப்படுபவராக இருக்கிறார் எனப் புள்ளிவிவரங்கள் கோருகின்றன. பிரித்தானிய இனமுரண்பாடுகளால் கலகம் ஏற்படுவது இது முதற்தடவையல்ல எனவும் இக்கலவரங்கள் குற்றவாளியான மார்க் துக்கன் கொலை செய்யப்பட்டதற்கான எதிர்ப்பு அல்ல எனவும் இனரீதியாக ஒடுக்கப்பட்ட ஆப்ரோ-கரீபியன் சமூகம் பொருளாதார ரீதியில் மிகக் கீழ்நிலையில் உள்ள பிரதான சமூகத்தி லிருந்து அந்நியமான கறுப்பின இளைஞர் சமூகம் தனது எதிர்ப்பை ஒருவகையில் வெளிப்படுத்த இக்கலவரங்களின் வழியில் முயன்றுள்ளது எனவும் பல்வேறு விதமான ஆய்வுகளை சமூகநல உளவியலாளர்களும், வன்முறை குறித்த கோட்பாட்டு ஆய்வாளர்களும் முன்வைத்து வருகிறார்கள்.

அடிக்கடி தடுத்துநிறுத்தப்பட்டு காவல்துறை யினரின் சோதனைக்கு ஆளாகிறவர்களில் அதிகமானவர்கள் ஆப்ரிக்க இனத்தவர்கள் தான். காவல்துறையினரின் ஆபாச வசவுகளுக்கு ஆளாகிறவர்களாக கறுப்பின இளம் பெண்களே இருக்கிறார்கள். காவல் துறைக்குள் நிறவாதம் ஊடுருவியிருக்கிறது எனும் நினைவுகள், ஸ்டீபன் லாரன்ஸ் எனும் கறுப்பு மாணவரின் படுகொலையை அடுத்து அவர்களிடம் பதிந்துபோயிருக்கிறது. காவல் துறையினரால் மென்டிஸ் எனும் தென் அமெரிக்க இளைஞர் அநியாயமாகச் சுட்டுக் கொல்லப்பட்ட நினைவுகளையும் அவர்கள் கொண்டிருக்கிறார்கள். இவ்வகையில் காவல்துறை யினர் மீதான வெறுப்புணர்வு அவர்களிடம் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கிறது.

வேலையின்மை, கல்லூரிக் கட்டண அதி-கரிப்பினால் படிப்பைத் தொடர இயலாமை, வறுமை - இவற்றினால் அந்நியத்தன்மை, வாழ்வின் மீதான சலிப்பு, விரக்தி போன்றனவே ஆப்ரிக்க இளைஞர்களையும் இளம்பெண்களையும் வன்முறைக்குத் தூண்டியிருக்கிறது. அவர்கள் தமது குரல் கேட்கப்படவும், தமக்குப் பிரச்சினை இருக்கிறது என்பதனைத் தெரியப்படுத்தவும் விரும்புகிறார்கள். அதனது விளைவே இந்த வன்முறைகள் என கறுப்பின சமூகநல ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இப்போது ஆட்சியிலிருக்கும் கன்சர்வேடிவ் கட்சி என்பது பாரம்பரியமாகவே கறுப்பின மக்களின் மீதான துவேஷ உணர்வும் குடியேறிய மக்களின் மீதான பாரபட்ச உணர்வும் கொண்ட அரசியல் கட்சியாகும். கடுமையான குடியேற்றச் சட்டங்களை நிறைவேற்றியிருக்கும் இக்கட்சியின் பிர-தமரான டேவிட் கமரூன் ஆட்சிக்கு வந்தவுடன் சொன்ன ஒரு முக்கியமான வாசகம் ‘பல்கலாச்சாரக் கொள்கை என்பது தோற்றுவிட்டது’ என்பதுதான். இதனையே பிற்பாடு ஜெர்மானிய ஆட்சியாளர்களும் பிர-திபலித்தார்கள். பல்கலாச்சாரம் என்பதற்கு மாறாக வெள்ளையின ஆதிக்கம் கொண்ட



ஒற்றைக் கலாச்சார ஆட்சியை நிறுவ விரும்புகிற ஒரு ஆட்சியினால் அரசியலை யும். சமூகப்பிரச்சினைகளையும் குற்றத் தன்மை வாய்ந்ததாக ஆக்க முடியுமே அல்லாது அடிப்படையில் பிரச்சினையின் தீர்வுக்காக அவர்கள் யோசிப்பார்கள் எனக் கருதமுடியாது.

**இலண்டனில் பல தமிழ் தொலைக் காட்சி சேவைகளும் பத்திரிகைகளும் இணையத்தளங்களும் வெளி வருகின்றன - இயங்குகின்றன. இவை பற்றி சற்று விரிவாக கூறுங்கள்.**

சில குறிப்பிட்ட காலங்களில் தொடர்ந்து புகலிடத் தமிழ் தொலைக் காட்சிகளைப் பார்த்ததுண்டு. வானொலிகளையும் கேட்டதுண்டு. அன்றாடம் நிரந்தரமாக இவை இரண்டையும் நான் பார்ப்பவன்-செவிமடுப்பவன் என்று சொல்ல முடியாது. பொதுவாகவே இப்போது நான் சில குறிப்பிட்ட சேனல்கள், குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் என்பது தவிர நான் தமிழ்-ஆங்கிலம் என இரு தொலைக்காட்சிகளையும் வழமையாகப் பார்ப்பது இல்லை. ஆவணப்படங்களுக்காக நான் சேனல் நான்கு பார்ப்புது உண்டு. உலகத் திரைப்படங்களுக்காக பிலிம்நான்கு பார்ப்பதுண்டு. பிற கலை இலக்கிய நிகழ்வுகளுக்கு என பிபிசி மூன்று மற்றும் நான்கு பார்ப்பது உண்டு. தமிழ்த் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் அரசியல் விவாத நிகழச்சிகள் பார்ப்பது உண்டு. மற்றபடி தமிழ் தொலைக்காட்சி பார்க்காததால் நான் தகவல் பெறுதல் அலலது அறிவுறுதல் என இரு தளங்களிலும் எதனையும் இழப்பதாகத் தோன்றாததால் எனது நேரத்தை நான் விரயம் செய்ய விரும்புவதில்லை.

மேற்கில் வாழ்கிற, தமிழ் அரசியல் விவாத நெறிப்படுத்தல் செய்பவர்கள் சேனல் நான்கு மற்றும் பிபிசி இரண்டு போன்ற சேனல்களில் இதே வகையில் நிகழ்ச்சிகள் நடத்துபவர்களிடமிருந்து சில விடயங்களைப் பயில வேண்டும் என நான் நினைக்கிறேன். முதாவதாக நிகழ்ச்சியின் பேசுபொருள் குறித்து வாசிப்பு அளவிலான விரிவான அறிதலை நெறிப்படுத்துனர்கள் தேடிக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக இரு தரப்பிலிருந்தும் விவாதிப்பவர்கள் எல்லை மீறிப் போகிறார்கள் எனத் தெரியவரும் தருணத்தில் அவர்களைக் கட்டுப்படுத்தி நிகழ்வைத் தன் கட்டப்பாட்டுக்குள் கொணர அவர்கள் பயிலவேண்டும் என நினைக்கிறேன். வன்மம் காட்சியாகச் சிலரைப் பரவசப்படுத்தலாம், வேடிக்கையாகவும் இருக்கலாம். ஒருபோதும் அது கருத்து வலிமையை முன்வைப்பதாக இருக்காது, சில விவாத நிகழ்வுகள் எதிர்தரப்பினரை இகழ்வதாக, குழாயடிச் சண்டையாக ஆனதாக இருந்ததை என்னால் அவதானிக்க முடிந்தது. இவை தவிர்க்கப்பட வேண்டும்.

இணையங்கள் எனப் பார்த்தால் சமகால அரசியல் கலை இலக்கிய திரைப்படத் தகவல்களுக்காக மட்டுமே அவைகளை நான் பார்க்கிறேன். குளோபல் தமிழ் நியூஸ், பொங்கு தமிழ் போன்ற சில தளங்கள் மட்டுமே வெளிப்பாட்டு முதிர்ச்சியையும் ஆசிரியக் கட்டுப்பாட்டையும் பகுப்பாய்வுக் கட்டுரைகளையும் கொண்டிருக்கின்றன. பல தளங்கள் செய்திகளை வியாக்யானப்படுத்தி அவைகளை முன்வைக்கின்றன. இதனை வாசக சுதந்திரத்தின் மீதான மிக மோசமான அத்துமீறலாக நான் நினைக்கிறேன். நான் மிகவெறுப்பது அனைத்தையும் பகடியாக்கி விடும் அனாமதேயர்களின் பகடிப் பின்னூட்டங்களைத்தான். எத்தனை தீவிரமான மனநிலையில் எழுதப்படும் கட்டுரைகளாயினும், எத்தனை உழைப்பின் பின் எழுதப்படும் கட்டுரைகளாயினும் இத்தகைய பின்னூட்டங்கள் அதனை ஓரிரு வார்த்தைகளில் நிராகரித்துவிட்டுப் போய் விடுகின்றன. இந்த நிலைமை எந்தவிதமான அறிவார்ந்த உரையாடலையும் சாத்தியமில் லாமல் ஆக்கிவிடுகிறது. பல்வேறுவிதமான விமர்சனங்களும் பகுப்பாய்வுகளும் தேடல்களும் நிகழ்த்த வேண்டிய அவசி யத்திலுள்ள ஈழத்தமிழர்களுக்கு மேற்கில் இயங்கும் தமிழ் தொலைக்காட்சிகளும் இணையங்களும் எத்தனையோ செய்ய முடியும். அந்த இடம் இன்னும் வெற்றிடமாகத்தான் இருக்கிறது.

**அண்மைக் காலங்களில் எழுந்துள்ள அராபிய எழுச்சி என்பது தற்சமயம் இஸ்லாமிய எழுச்சியாக மாறிவருகின்றது என மேற்கத்திய பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. உங்கள் கருத்து என்ன? இதன் தொடர்ச்சியாக எழுந்த மக்கள் போராட்டங்கள் வட அமெரிக்க நகரங்கள் பலவற்றில் வால்ஸ்ரீட்டை கைப்பற்றுங்கள், வாசிங்டனைக் கைப்பற்றுங்கள் என பங்குச் சந்தை போரட்டங்களாக மாறி சடுதியாக தேய்ந்து விட்டன. இதனை எவ்வாறு பார்க்கின்றீர்கள்? இந்த மக்கள் போராட்டங்கள் வளர்ந்து வரும் நாடுகளில் ஏன் தோன்றவில்லை?**

அரபுப் புரட்சி என்பது தத்தமது சமூகங்களை ஜனநாயகப்படுத்துவதற்காக எழுந்த எழுச்சி. அதனது கோரிக்கைகள் முடிவற்றவை. ஏகாதிபத்தியம் அதற்கு ஒரு பொருட்டில்லை. காலனியாதிக்கம் அதற்குப் பொருட்டில்லை. இவர்களால் தாங்கப்படும் அரபு அரசுகளை எதிர்த்து, முடிமன்னர்களை எதிர்த்து, சர்வாதிகாரிகளை எதிர்த்து தீர்மானமான போராட்டத்தினை அவர்கள் முன்னெடுத்தனர். இந்தப் போராட்டங்களில் எகிப்து, துனீசியா போன்ற நாடுகளில் இஸ்லாமியவாதிகள் முதலில் பங்கெடுக்கவில்லை. போராட்டங் களில் இருந்து விலகி நின்றார்கள். போராட்டம் வெகுஜனமயப்பட்டபோது அதனது பெறுபேறுகளை அவர்கள் ஸ்வீகரிக்க முயன்றார்கள். எகிப்தில் ராணுவ ஆட்சிக்கு எதிரான போராட்டத்தை மதச்சார் பற்ற இடதுசாரிகளும் தாராளவாதிகளும் இளைஞர்களும் இன்றுவரையிலும் தொடர்ந்து முன்னெடுக்கிறார்கள். இஸ்லாமியவாதிகளான சகோதரத்துவ இஸ்லாம் இயக்கத்தவர்கள் எகிப்திய ராணுவத்துடன் சமரசம் செய்து கொண்டு ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற நினைக்கிறார்கள். அரபுப்புரட்சியின் முதல் கட்டம் இப்போது முடிந்திருக்கிறது. இடதுசாரிகள்-தாராளவாதிகள்-இளைஞர்கள் ஒரு புறமும், ராணுவ இயந்திரமும் இஸ்லாமியவாதிகளும் சேர்ந்து பிறிதொரு புறமும் இருக்க இரண்டாம் கட்டப் போராட்டம் இந்த நாடுகளில் தொடர்ந்து நடக்கத்தான் போகிறது. எகிப்தில் அது ஏற்கெனவே துவங்கிவிட்டது. இடதுசாரிகளிட மிருந்தும் தாராளவாதிகளிடமிருந்தும் இஸ்லாமியவாதிகள் அரபுப் புரட்சியைத் தற்காலிகமாகக் கடத்தியிருக்கிறார்கள் என்பது உண்மைதான். இது தற்காலிகமா னது. அதற்கு எதிரான இடதுசாரிகளின் தாராளவாதிகளின் போராட்டம் ஏற்கெனவே அங்கு துவங்கிவிட்டது என்பதும் உண்மை.

துனீஷியாவில் பவாசூசி தன்னை எரியூட்டிக் கொண்டதன் மூலம் எகிப்து தாஹிரர் சதுக்கத்தில் எழுந்த அரபு எழுச்சி பல்வேறு ஜனநாயகக் கோரிக்கைகளைக் கொண்டிருந்தது. சர்வாதிகரிகளை அவர்கள் பதவி விலகக் கோரினார்கள். ராணுவ ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவரக் கோரினார்கள். சிவில் சமூக நிர்வாகத்தை, பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை, மதநல்லிணக்கத்தை, பெண்ணுரிமையை அவர்கள் கோரினார்கள். சர்வாதிகாரிகளை அவர்கள் பதவியை விட்டு அகற்றினார்கள். பிற கோரிக்கைகளுக்கான அவரது போராட்டங்கள் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

போராட்ட வழிமுறை எனும் அளவில் அரபுப் புரட்சி ஸ்பெயினின் இன்டிக்னோக்களுக்கு, அமெரிக்காவின் வால்ஸ்ட்ரீட் கிளர்ச்சியா-ளர்களுக்கு மிகப்பெரும் ஆதர்ஷமாக அமைந்தது. வன்முறை தவிர்த்து, இடையறாத மக்கள் திரள் கொண்டு நகரின் சதுக்கங்களை நிரந்தரப் போராட்ட

யமுனா ராஜேந்திரன் சுமார் 20க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். உலக அரசியல், லத்தீன் அமெரிக்கா, சினிமா, மார்க்சிய விமர்சனம் போன்ற துறைகளில் இவரது நூல்கள் வெளிவந்துள்ளன. புலம் பெயர் தமிழராக இலண்டனில் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றார். கோயம்புத்தூர் இவரது பிறப்பிடம். அண்மையில் ரொரண்ரோவில் நடைபெற்ற தமிழியல் மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த இவர் விளம்பரத்துக்காக பிரத்தியேகமாக அளித்த பேட்டி இது.

# பிரக்ஞை...

## 22ஆம் பக்கத்தொடர்ச்சி

1980 களின் பிற்பகுதியிலிருந்து பெருமளவிற் குடியேறிய இலங்கைத் தமிழ்ச் சமூகம் சமயம் சார்ந்த கோயில் வழிபாட்டில் மட்டுமன்றி, பல்வேறு ஆன்மீகத் தலைவர்களிடமும், ஆன்மீகப் பயிற்சி நெறிகளிலும் ஆர்வம் காட்டி வருகின்றது. இத்தகையதொரு சமூகப் பின்னணியில் வைத்தே மீராபாரதியின் நூலைப் பார்க்க வேண்டி உள்ளது.

ஆன்மீகம் என்பதைத் தன்னைத் தானே உணரல், தனக்கும், கடவுளுக்கும் இடையிலுள்ள பிணைப்பினை உணரல், தனக்கும் பிரபஞ்சத்திற்கும் இடையில் இருக்கும் தொடர்பினை அறிதல், தனக்கும், சமூகத்தில் பிறர்க்கும் இடையிலுள்ள தொடர்பினை உணரல் என்று பலவகையாக அர்த்தப்படுத்தலாம். தியானம், பிரார்த்தனை என்பன இந்த உயர் ஆன்மீக நிலையினை எட்டுவதற்கு வழிகளாகக் கருதப்படுகிறன. தியான நிலையில் மனித மூளை அடையும் மாற்றங்கள் விஞ்ஞானபூர்வமாக ஆராயப்பட்டு வருகின்றன. அதே சமயம் ஆன்மீக இயக்கங்கள் பல தமது தியான முறைகள் விஞ்ஞானபூர்வமானவை என்று நிறுவுவதில் பெரிதும் அக்கறை காட்டுகின்றன. இவ்வகையிலே விஞ்ஞான, அறிவியற் பின்னணியில் ஓசோவின் தியான முறைகளைக் கூறவந்ததொன்றாக மீராபாரதியின் நூலினை நாம் அடையாளப்படுத்தலாம்.

இவர் நூலினை இரு பாகங்களாகப் பிரிக்கலாம்: முதலாம் பாகம் - பிரக்ஞை, பிரக்ஞையின்மை குறித்த மேனாட்டுப் புலமைசார் கருத்துகளைக் கொண்டது. இரண்டாம் பாகம் - ஓசோவின் தியான முறைகளுடன் தொடர்புடையது. இவர் நூலினை முழுமையாக நோக்கும்பொழுது பின்வரும் கேள்விகள் மனதில் எழுகின்றன:

(அ) ஓசோவின் தியான முறைகளுக்கும், மேனாட்டு தத்துவ, உளவியல் தொடர்பான புலமைசார் கருத்துகளுக்குமிடையே உள்ள தொடர்பு என்ன? இத்தொடர்பு நூலில் சரியாக விளக்கப்படவில்லை. ஓசோ எந்த தத்துவ, உளவியல் அடிப்படையில் தமது தியான முறைகளை உருவாக்கினார் என்பது பற்றிய வாதம் அவசியம். ஓசோ பிரக்ஞை குறித்துக் கொண்டிருந்த கருத்துகள் யாவை, மேனாட்டு அறிவியலாளருடன் எவ்வகையில் ஒத்துச் செல்கிறார், எவ்வெவ் அம்சங்களில் முரண்படுகின்றார் என்பன பற்றிய ஆசிரியரின் அவதானிப்புகளை உள்ளடக்கிய ஒரு அத்தியாயம் இணைக்கப்பட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

(ஆ) ப்ரொயிட், ஜுங், மார்க்ஸ், ஓசோ என்பவர்கள் பிரக்ஞை, பிரக்ஞையின்மை என்ற இரண்டு கருத்தாக்கங்களையும் ஒரே மாதிரியான அர்த்தத்தில் பயன்படுத்தியுள்ளார்களா என்பது இன்னொரு கேள்வி. ப்ரொயிட், ஜுங், மார்க்ஸ் என்பவர்களின் கருத்தியல் (ideological) ரீதியான வேறுபாடுகள் நூலிற் கூறப்பட்டிருப்பினும், பிரக்ஞைபூர்வமாகச் செயற்படல் என்பதன் அடிப்படையில் இவர்களுக்கும், ஓசோவிற்குமிடையில் ஒரு பொதுவான நிலைப்பாடொன்றினை எடுக்க ஆசிரியர் முயன்றுள்ளார் போல் தெரிகிறது. இது எவ்வளவு தூரம் பொருத்தமானது என்று தெரியவில்லை. ஒவ்வொரு சிந்தனையியலாளரும், உளவியலாளரும் பிரக்ஞையினை வெவ்வேறு விதமாக விளங்கிக் கொண்டுள்ளனர் என்பதும், பிரக்ஞையுடன் செயற்படுவதற்கான அவர்களின் அணுகுமுறைகளும் வித்தியாசமானவை என்பதும் முக்கியமாகக் கருத்திற் கொள்ளப்படவேண்டியவை.

(இ) அடிப்படையான சமூக-பொருளாதார மாற்றங்கள் இன்றி, தியானமூலமான தனி-மனித மாற்றம், சமூக மாற்றத்தைக் கொணரும் என்பது இலட்சியவாத நோக்காகப் படவில்லையா? சமூக பொருளாதார நிலைப்பாடுகளினால் வரையறுக்கப்பட்டிருக்கும் தனிமனிதனுக்குத் தியானமூலமாக உடலியல், உளவியல் நன்மைகள் கிடைக்கின்றன என்று விஞ்ஞான ஆய்வுகள் கூறலாம். ஆனால், இதன் மூலமாக சமூகத்தின் அத்திவாரமான சமூக-பொருளாதார உறவுகளை மாற்ற முடியுமா என்பது ஒரு முக்கிய கேள்வி.

(ஈ) அடுத்ததாக, எல்லா சமூக தீமைகட்கும் தியான மூலம் உண்டாகும் பிரக்ஞை மூலமாகத் தீர்வு பெற்றுவிட முடியுமா? முதலில், நன்மை, தீமை இரண்டையும் எவ்வாறு வரையறுப்பது என்பதே பெரும் பிரச்சினை. நல்லது, கெட்டது இரண்டுமே relative terms. சமூக ஒழுக்காறுகள், ஒழுக்க விழுமியங்கள் காலத்துக் காலம் பல்வேறு சமூகங்களில் வெவ்வேறு விதமாக வரையறுக்கப்பட்டு வந்துள்ளன. அதன்படி நன்மை, தீமை, நல்லதுமன்று/தீயதுமன்று (neutral/amoral) என்பன கணிக்கப்பட்டன. உதாரணமாக, பிராமண சிரேஷ்டர்கள் வர்ண தர்மத்தினை சமூகத்தின் அடிப்படை அமைப்பாகக் கருதினர். (மத்திய கால இந்தியாவில் முக்கியத்துவம் பெற்ற இச்சமூக அமைப்பு முறை இன்றைய உலகிற்குப் பொருத்தமற்றது.) ஒழுக்கவிதிகள் வர்ண தர்மத்திற்கு ஏற்றவகையில் அன்று நிர்ணயிக்கப்பட்டன. வர்ணதர்மத்திற்கு முரண்படாதவை அனைத்தும் நல்லவை என்றும், அதற்கு மாறுபாடானவை தீயவை என்றும் வகுக்கப்பட்டன. பகவத்கீதையின்படி ஆத்மபிரக்ஞையில் உறுதியாக மூழ்கியிருப்பவன் தன் வர்ணதர்மத்தினை விருப்பு, வெறுப்பின்றிச் செய்ய வல்லவனாக-ின்றான். எனவே, பிரக்ஞைபூர்வமான செயற்பாடு, நல்லது, தீயது என்ற வேறுபாடின்றி, எந்தவொரு கருமத்தையும் திறம்பட ஆற்றுவதற்கான மார்க்கமாகின்றது.

பிரக்ஞைபூர்வமான செயற்பாடு என்பது நல்லதொரு சமூக மாற்றத்திற்கான ஒரு கருவியாகவும் இருக்குமெனில், அந்த நல்ல சமூக மாற்றம் என்ன என்ற கேள்வி எழுகிறது. சமூகம் பற்றிய பார்வையினை (social vision) முன் வைக்காது, மீராபாரதி தந்நூலில் சமூக மாற்றம் குறித்துப் பேசுவது அவ்வளவு பொருத்தமானதாகப்படவில்லை.

எழுத்துப்பிழைகளைத் தவிர்த்திருக்கலாம்: உதாரணத்திற்கு மெய்ஞ்ஞானம், நினைவு கூருதல், சொற்பிரயோகம், சூனியம், சூன்யதா என்ற சொற்கள் பிழையாக அச்சேறியுள்ளன.

இவரின் நூல் புலமைசார் நூலாகத் தோற்றமளிக்க முற்படும் அதே வேளையில் ஓசோவின் தியானமுறைகளைச் சந்தைப்படுத்தும் நூலாகவும் திகழ முற்படுவது ஒரு குறைபாடு.

எனினும், இவர் நூல் நான் ஏற்கனவே கூறியது போன்று வாசிப்போர் சிந்தனையைத் தூண்டும் நூல். இவர் கூறியுள்ள விடயங்கள் குறித்து மேலும் விரிவான வாசிப்பிற்கு ஒருவரை நிச்சயமாக இட்டுச் செல்லும் என்று நம்புகிறேன்.

# "மேற்கில் வாழ்கிற,....

## 30ஆம் பக்கத்தொடர்ச்சி

மையங்களாக அரபுப் புரட்சியாளர்கள் மாற்றினார்கள். நாட்கணக்கிலல்ல மாதக் கணக்கில் அவர்கள் இலட்சக் கணக்கில் ஒரே இடத்தில் திரண்டு போராட்டங்களை நடத்தினார்கள். இந்தப் போராட்ட முறை உலகெங்கிலும் தாக்கத்தை உருவாக்கியது. தாஹிரர் சதுக்கத்துக்கும் வால்ஸ்ட்ரீட் போராட்டத்திற்கும் ஒற்றுமைகளும் உண்டு. வேற்றுமைகளும் உண்டு. இரண்டு போராட்டங்களுக்கும் ஒன்றுபட்ட, திரட்டிக் கொள்ளப்பட்ட தலைமை என்பது இல்லை. இரண்டு போராட்டங்களும் நகரச் சதுக்கங்களை எதிரப்பு மையங்களாகக் கொண்டிருந்தன. இரண்டும் அமைதிவழிப் போராட்டங்கள். இவை அனைத்தும் ஒற்றுமைகள். தாஹிரர் சதுக்கப் போராட்டம் சர்வாதிகாரியை அகற்றுதல், பாராளுமன்ற பிரதிநிதித்துவ ஜனநாயகம் என இரண்டு கோரிக்கைகளைத் திட்டவட்டமாக முன்வைத்தது, அதற்காகப் போராடியது, அதில் முதலாவதைச் சாதித்தது. வால்ஸ்ட்ரீட் போராட்டம் திட்டவட்டமான கோரிக்கைகள், இலக்குகள் எதனையும் கொண்டிருக்கவில்லை. ஜிஸாக்கும், சோம்ஸ்க்கியும் இதனைச் சுட்டிக்காட்டுகிறார்கள். திட்டவட்டமான இலக்குகளும் போராட்டத் தலைமையும், தொடர்ந்த வெகுமக்கள் திரட்டலும் தேவை என்பதனை அவர்கள் இப்போது வலியுறுத்துகிறார்கள். அரபுப்புரட்சி பற்றிய அமித் தபாசியின் புத்தகமும், வால் ஸ்ட்ரீட் பற்றிய சோம்ஸ்க்கி, ஜிஸாக் போன்றோரின் புத்தகங்களும் இப்போதுதான் வெளியாகி இருக்கின்றன. அதனது அனுபவங்களைப் பயில வேண்டிய காலம் நமக்குமுன் திறந்திருக்கிறது. தொடரும்...


# LAW OFFICE
## STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor

3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4

Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com





Niru
நிரு
பிராண்ட்
BRAND
Niru®
JACK
MACKEREL
IN BRINE
தொடர்பிற்கு தொலைபேசி.
காட்சிக்கு தொலைக்காட்சி.
இணையத்திற்கு கணனி.
உணவிற்கு நிரு பிராண்ட்.
BRAND
Niru

# விருந்தோம்பல்

விருந்தோம்பல் என்றால், வீட்டுக்கு வரும் விருந்தினர்களுக்கு மன திருப்தியோடு உணவு அளித்தலாகும். இது ஒரு தமிழ் பண்பாகும். இதற்கு உதாரணம், திருக்குறளிலும் விருந்தோம்பல் பற்றி ஒரு அதிகாரம் இருக்கிறது.

'செல்விருந்தோம்பி வரவிருந்து பார்த்திருப்பான், நல்விருந்து வானத்தவர்க்கு' விருந்தினர்களுக்கு மகிழ்ச்சியுடன் உணவு அளித்து, இன்னும் வருவார்களா என்று பார்ப்பவருக்கு, சொர்க்கத்தில் விருந்தினர் போல், வரவேற்பு கிடைக்கும் என்றார் திருவள்ளுவர். எனவே இந்த சிறந்த பண்பை நாம் வளர்க்க வேண்டும்.

விருந்தினர்களை வீட்டில் உள்ளோர் முக மகிழ்ச்சியுடன் வரவேற்றல் தான் விருந்தோம்பல். இப்போதைய காலத்தில் வீட்டில் இருக்கும் எல்லோரும் வீட்டில் வெவ்வேறு இடத்தில் இருப்பார்கள். குடும்பத்தில் உள்ள எல்லோரும் சேர்ந்துதான் விருந்தோம்பல் செய்ய வேண்டும்.



காகங்கள் கூட தன்னை சுற்றியுள்ள மற்றைய காகங்களை 'கா கா' என்று அழைத்துத்தான் சாப்பிடும். இதுவும் ஒரு வகை விருந்தோம்பலாகும். 'இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம், விருந்தோம்பி வேளாண்மை செய்வதற் பொருட்டு' வீடு கட்டி இல்லறவாழ்வு நடத்துவது விருந்தினர்களுக்கு தேவையானதை நிறைவேற்றவே என்கிறது திருக்குறள்.

விருந்தோம்பலுக்கு ஒரு சிறந்த ஆதாரம் இளையான்குடி மாறநாயனாரின் கதை. இளையான்குடி என்ற ஊரில் மாறனார் என்ற சிவபக்தனும் அவரது மனைவியும் இருந்தார்கள். அவர்கள் வீட்டுக்கு வரும் சிவபக்தர்களுக்கு உணவு அளித்து விருந்தோம்புவார்கள். ஒருமுறை அவர்களுக்கு கடும் வறுமை வந்தது. அவர்களது காசு குறைந்து போனது. ஆனால் அவர்களது விருந்தோம்பும் பண்பு இன்னும் இருந்தது.

மாறனார் வயலில் நெல்லை விதைத்துவிட்டு வீட்டில் இருக்கும்போது சிவபெருமான், சிவனடியார் வேடத்தில் வந்தார். அவருக்கு உணவளிக்க இளையான்குடி மாறநாயனார் மிகவும் கஷ்டப்பட்டார். உணவு இல்லாத-தால் அந்த இரவு நேரத்திலும் இடி மின்னலில் மாறானர் விதைத்த நெல்லை எடுத்தார். அதையும் வீட்டில் இருந்த கீரையையும் எடுத்து சமைத்தார். அவரது மனைவி சமைப்பதற்கு வீட்டில் கூரையிலிருந்த கொம்புகளை விறகுக்காக பாவித்தார்.

உணவு அளித்தபோது, சிவனடியார் மறைந்து சிவபெருமான் தோன்றி அவர்களுக்கு அருள் புரிந்தார்.

**நீதி: சிறந்த விருந்தோம்பல் பண்பை நாங்கள் வளர்க்க வேண்டும்.**



**ஞா. ஆரணி**
அகவை 13

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

HomeLife / GTA Realty Inc., Brokerage*
*Independently Owned and Operated



Gulshan Sharma, B. Eng.
Broker
Cell: 416.407.5911
5215 Finch Ave. E. # 203 Toronto, ON.
Office: 416.321.6969

MARKHAM & 14TH AVE.
Spacious new 1220 Sq.ft Retail or Restaurant use unit. Great exposure in a new plaza (New Delhi Drive).
Available for Sale / Lease.
Immediate occupancy.

Busy supermarket Convenience. Long established and well known in Scarborough (MIDDLEFIELD RD.) area.
Lotto 649.
video income.
Asking only $139, 900.

KENNEDY & FINCH
Prime Office / Retail / Restaurant.
Can be divided into smaller units.
Lots of parking. Upto 4600 Sq.ft.
Situated on Finch Ave.

MARKHAM & DENISON
Busy Supermarket / Sri Lankan South Indian. Well known and long established
Very resonable price.

# கலிபோர்ணியாவில் இடம்பெற்ற புலம்பெயர் தமிழர் கல்வி மகாநாடு - 2012

சவால்கள், நோக்குக்கள், சாத்தியங்கள் என்னும் முப்பரிமாணத்தினைக் கொண்ட மகாநாடாக இது இடம்பெற்றது. தென்னாபரிக்கா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், மலேசியா, கனடா, ஐக்கிய அரபுக்குடியரசு ஆகிய நாடுகளைச் சேர்ந்த பேராளர்களை உள்ளடக்கியதாக கல்வி மகாநாடு 2012 சிலிக்கன் வலி எனப்படும் சான்பிரான்சிஸ்கோப் பிரதேசத்தில் சான்ராகளாறா என்னும் இடத்தில் உள்ள மகாநாட்டு மண்டபத்தில் யூன் 9ம், 10ம் திகதிகளில் இடம்பெற்றது. கலிபோர்ணியா தமிழ்க் கழகத்தின் தலைவர் திருமதி வெற்றிச்செல்வி இராஜமாணிக்கத்தின் தலைமையில் மாகாநாட்டுக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இந்திய தேசியகீதம், தமிழ்த்தாய் வாழ்த்துக்களுடன் ஆரம்பமானது விழா. விழாவினை கலிபோர்ணியா மாநகர உறுப்பினர் திருமதி லிசா கில்மோர் நாடாவை வெட்டி ஆரம்பித்து வைத்தார். கலிபோர்ணியாவின் உதவி மேயர் திருமதி அனு நடராஜன் அவர்கள் மங்கலவிளக்கேற்றினார். தொடர்ந்து மாணவ மணிகளால் தமிழ்த்தாய் வாழ்த்து, அமெரிக்க தேசிய கீதம் என்பன இசைக்கப்பட்டன. தொடர்ந்து வரவேற்புரையை நிகழ்த்தினார் விழாத் தலைவர் திருமதி வெற்றிச் செல்வி. பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், பேராளர்கள், பெற்றோர், மற்றும் விழாக்குழு உறுப்பினர்கள் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் லீசா கில்மோ அவர்கள் உரைநிகழ்த்தி தமிழ் மொழியின் சிறப்பை எடுத்துரைத்து விழா சிறப்புற வாழ்த்தியமர்ந்தார். தொடர்ந்து இந்திய தூதுவர் ஆனந் குமார் உரையாற்றும்போது தமிழ் மொழி நீண்டகால வரலாற்றை உடையது. இந்திய மரபுக்கமைய தமிழ்மொழியைப் பிள்ளைகளுக்குப் பயிற்றுவித்து அதனை வளர்ப்பதில் ஈடுபட்டுள்ள தமிழ்க் கல்விக் கழகத்தையும் பாராட்டி விழா சிறப்புற வாழ்த்தினைத் தெரிவித்தார். அவரைத் தொடர்ந்து துணை மேயர் திருமதி அனு நடராஜன் உரையாற்றுகையில் தமிழ் மொழி பாரம்பரியம் மிக்கது. நான் பெங்களூரில் பிறந்து வளர்ந்தபோதிலும் தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்டு வளர்ந்ததோடு மட்டுமன்றி இன்றும் எனது பிள்ளைகளோடு தமிழிலேயே உரையாடுகின்றோம் என்ற அவர் தமிழ் மொழி சிறந்த பண்பாட்டு வளம் கொண்ட மொழி அதனை வளர்த்துவரும் அனைவரையும் பாராட்டினார். அவரைத் தொடர்ந்து சிறப்புரையாற்றினார் கியூக்குளி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஜோர்ஜ் காட் அவர்கள். தமிழ்மொழியின் தொன்மை அதன் சிறப்பு என்பனவற்றைப் பற்றி அவர் எடுத்துரைத்ததோடு நான் சமஸ்கிருதம், ஹிந்தி ஆகிய மொழிகளையும் கற்றவன். தமிழ் மொழி கற்பதற்குக் கடினமானமொழி என்றாலும் தமிழ் மொழிபோல இனிமையான சிறப்பான மொழி வேறொன்றும் இல்லை என்றார். தொடர்ந்து உரையாற்றுகையில் தமிழ் மொழியின் இலக்கியங்கள் உயர்ந்த தரத்தை உடையவை என்றும் உரைத்தார்.

தொடர்ந்து கலிபோர்ணியாப் பிரதேசத்தில் இயங்குகின்ற 18 கல்வி நிலையங்களின் மாணவர்களின் நூற்றுக்குமேற்பட்ட கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. மிகவும் உயர்ந்த தரத்தில் அவர்களது நிகழ்ச்சிகள் இருந்தமையைப்பார்த்து பார்வையாளர்கள் வியப்புற்றனர் பாராட்டினர். தென்னாலி இராமன் கதையில் கிருஸ்ணதேவராய மன்னனிடம் இருந்து அரசைப்பெற்றுக் கொண்டு திண்டாடிய கதையை மிகச்சிறப்பாகச் செய்து காட்டினர் இளம் சிறார்கள். நடனங்கள், நாடகங்கள், கும்மி எனப்பல்வேறு நெஞ்சைத் தொடும் நிகழ்ச்சிகள் இரண்டு நாட்களாக நடந்தன. மொத்தமாக 101 நிகழ்ச்சிகள் மேடை யேற்றப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை கட்டுரைகள் பல்வேறு நிமைலகளில் அமர்வுகளாகச் சமர்ப்பிக்கப் பட்டமை கவனத்திற்குரியதாகும். அத்தோடு ஆசிரியர் பயிலரங்குகளையும் நடத்தியமை

**◊ த. சிவபாலு ◊**

பயன்மிக்க ஒழுங்கமைப்பாகக்காணப்பட்டது. யூன் 9ம் திகதியும் 10ம் திகதியும் கற்பித்தல் பயில் அரங்கங்கள், கட்டுரை அமர்வுகள் நான்கு மண்டபங்களில் ஒரே நேரத்தில் இடம்பெற்றன. பார்வையாளர்கள் எங்கு செல்வது என்பதுதெரியாமல் அங்கும் இங்கும் பறந்து சென்ற கருத்துக்களைச் செவிமடுத்தமை காணக்கூடியதாக இருந்தது. ஆசிரியர் பயிலரங்கில் 'எதிர்காலத் தமிழ் கல்வியில் கணினியின் பயன்பாடு' என்னும் பொருளில் மலேசியாவில் இருந்து வருகை தந்திருந்த முரசு அஞ்சலின் கண்டு பிடிப்பாளரும் உரிமையாளருமான முத்து நெடுமாறன் அவர்கள் பயிற்சிப் பட்டறையினை நிகழ்த்தி கணிணியையும் மின்நூலையும் இணைத்துச் செயற்படுவது பற்றிய விளக்கத்தையும் கல்விக்கு கணினியின் பங்களிப்பு எத்தகையதாக அமையும் என்பதனையும் எடுத்துரைத்தார். அவ்வதிதமே 'பாரம்பரிய மொழிகளைக் கற்பித்தல் என்னும் பொருளில்' அதே நேரம் இன்னொரு மண்டபத்தில் அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்திருந்த அன்பு ஜெயா அவர்கள் அவுஸ்திரேலியாவில் தமிழ்க்கல்வி வளர்ச்சி பாடத்திட்டங்களும் பயிற்றுவித்தலும் என்னும் பொருளில் உரையாற்றினார்.

அவுஸ்திரேலியாவில் தமிழ் மேல்நிலை படிப்புக்கான பாடத்திட்டங்களும் பயிற்றுவித்தல் முறையும் பற்றி தனது ஆய்வுரையைத் தந்தார் சொக்கன் அவர்கள். அவரோடு வந்திருந்த அன்பு ஜெயா 'விளையாட்டும் செயலீடுபாடும் தொடர்பான கற்பித்தல் முறை' பற்றி பயிலரங்கத்தை நிகழ்த்தினார். கலிபோர்ணியா அரசாங்க பல்கலைக்கழகத்தின் பேராசிரியை மரியா கரேய்ரா 'பாரம்பரிய மொழிகளைக் கற்போருக்கு கற்பித்தல்' என்னும் பொருளில் உரையாற்றினார். சிங்கப்பூர் நியாங் தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்தின் இணைப்பேராசிரியர் ஏ.ரா. சிவகுமாரன் 'தமிழ் கற்போரை ஈடுபடுத்தும் மகிழ்ச்சியூட்டும் கல்விமுறை' பற்றி பயிலரங்கினை நிகழ்த்தினார். 'உரையாடற் தமிழைக் கற்பித்தல்' என்பது பற்றி சிங்கப்பூரைச் சேர்ந்த முனைவர் வேல்முருகன் விளக்கவுரை தந்தார். 'சிங்கப்பூர் தமிழ் நூல்களின் அறிமுகம்' என்பதுபற்றி சுப்பிரமணியம் நடேசன் விளக்கமளித்தார். 'தமிழ் கற்றலில் மாணவர்களின் விருப்பை அதிகரித்தல் என்னும் பொருளில் திருமதி மீனாட்சி சபாபதி அவர்கள் உரையாற்றினார். 'பயன்மிகு பாடத்தொகுப்புகளும் பாடத்திட்டமும்' என்னும் பொருளில் பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள் உரையாற்றினார். 'கனடிய பாடசாலைகளில் அனைத்துலக மொழிகள் திட்டமும் தமிழ் மொழிக் கல்வியும்' என்னும் பொருளில் கட்டுரையைத்தந்தார் கனடாவைச்சேர்ந்த திரு. த.சிவபாலு அவர்கள். 'அவுஸ்திரேலியாவில் தமிழ்க்கல்வி வளர்ச்சி பாடத்திட்டங்களும் பயிற்றுவித்தலும்' பற்றி அன்பு ஜெயாவும், 'தமிழை ஏன் நாங்கள் கற்கமுடியாது' என்பது பற்றி போராசிரியை கௌசல்யா காட் அவர்களும், 'உணர்ச்சிபூர்வ அறிவுத்தமிழ் வழிக் கல்வி கற்பித்தல்' என்னும் பொருளில் அண்ணாசுந்தரம் அவர்களும், 'இப்பொழுதும் எதிர்காலமும் அனைத்துலகத் தமிழ், உள்ளூர்த் தமிழ்' என்பது பற்றி அவுஸ்திரேலியாவிலிருந்து வந்த குலம் சண்முகம் அவர்களும் சிங்கப்பூரைச் சேர்ந்த சீதாலட்சுமி அவர்களும் உரையாற்றினர். 'தமிழ் மொழி கற்றல் கற்பித்தலில் தகவல் தொழில் நுட்பங்களின் பங்கு' சிங்கப்பூர் தேசிய கல்விக்கழகத்தைச் சேர்ந்த குணசேகரன் அவர்கள் உரையாற்றினார். 'தமிழ் பேசாத குடும்பங்களிருந்து வரும் மாணவர்களைப் பேசவும் எழுதவும் வைக்கச் சில உத்திகள்' என்னும் பொருளில் சிங்கப்பூரைச் சேர்ந்த தமிழ்ச் செல்வி உரையாற்றினார். 'தமிழ்க் கல்வியில் கலை சமூகம் கலாச்சாரத் தாக்கங்கள்' என்னும் பொருளில் கலிபோர்ணியா தமிழ் கழகத்தைச் சேர்ந்த டெய்சி ஜெயப்பிரகாஜ் அவர்கள் உரையாற்றினார். 'வம்சாவழி தமிழ் மாணர்களின் மொழி கற்றல் சூழல்களும் பாடத்திட்டங்களும்' என்னும் பொருளில் பென்சில்வேனியாப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர் வாசு ரங்கநாதன் அவர்களும், 'இன்னொரு வழி யில் தமிழ் கற்பித்தல்' என்னும் பொருள் பற்றி சிங்கப்பூரைச் சேர்ந்த பொன். சுந்தரராசு அவர்களும், 'தென்னாபிரிக்காவில் தமிழ் கல்வி' என்னும் பொருளில் முனைவர் கணாஸ் முருகன் அவர்களும், '1980க்குப் பின் மலேசியக் கல்வித் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் - தமிழ்க்கல்வியில் ஏற்படுத்திய தாக்கங்களும் எதிர்காலச் சவால்களும்' பற்றி மலேசியப் பல்கலைக்கழக விரிவுரையாளர் முனைவர் அருட்செல்வன் அவர்களும் 'உலக அரங்கில் தமிழ் கல்வியும் தொழில் நுட்பத்தின் பயன்பாடும்' என்பதுபற்றி தமிழ்நாட்டைச் சேர்ந்த முனைவர் துரை மணிகண்டன் அவர்களினதும் 'மின்வழிக்கற்றல் வழி தமிழின் கலை சமூக கலாச்சாரத் தீர்வுகள்' தி.க. இராமானுஜனின் கட்டுரையும் அதனைத் தொடர்ந்து மேலும் மொத்தமாக 21 கட்டுரைகள் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பேராளர்களால் தரப்பட்டன. மிகச் சிறப்பாக மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. மிகுந்த ஒரு வெற்றி விழாவாக இந்தவிழா அமைவதற்கு கலிபோர்ணியாவில் வாழும் தமிழர்களின் ஆர்வமும் அவர்கள் செயற்பட்ட முறைமையும், ஆற்றலும், ஒருமைப்பாடுமே காரணம் எனலாம். ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டு அக்குழுக்கள் மிகச்சிறப்பாகச் செயற்பட்டமையே இந்த விழாவின் வெற்றிக்குக் காரணமாகும்.




AYURVEDA

MASSAGE GOOD FOR HEALTH & PAINS

Back, Leg, Shoulder, Cervical, Heel, Knee and Foot Pain Stiff Neck, Severe Headacke, Migraine, Insommia Weight Problems, Sciatica, Slipped - Prolapsed Disc, Solar Piexus, Disorders Of Joints, Bones And Muscles.

Women For Women, Men For Men - 416.434.9251



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# இன்னொரு...

**பாகம் - 4 பகுதி 43**

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கன் அனைத்தும் கற்பனையே இன்னொரு....வின் முதற்பகுதியில் பரபரப்பைப் பார்த்தீர்கள். இரண்டாம் பகுதியில் துலக்கப்படாத மர்மத்தின் ஊடாகச் சென்றீர்கள். இந்த மூன்றாம் பகுதியிலோ பல வியப்பான சம்பவங்களைக் காணப் போகின்றீர்கள்.

இதில் உள்ளவற்றினை விளங்கப்படுத்துவதற்கு முன்னராக பொதுவான சில விடயங்களை, சுருக்கமாக, உங்களுக்குக் கூறகின்றேன். கொள்கையளவில் பல்பேரண்டங்கள், சமாந்தரப் பேரண்டங்கள் இருக்கலாம். அதற்கான பல கருதுகோள்களை முன்வைக்கின்றார்கள். அது பற்றிய ஆய்வுகள் இவ்விடத்தில் இல்லை அப்படியாகப் பல பேரண்டங்கள் இருக்குமாயின், அவற்றில் உயிரினங்களும் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் நிறையவே இருக்கின்றன என்பதனை எங்கள் ஆய்வுகள் கூறுகின்றன. ஆனாலும் நேரடியாக அவற்றினை நிரூபிக்க முடியாது. ஒருவேளை வருங்காலங்களில் அவற்றினை நிரூபிக்கலாம். அதற்கு எதிர்காலம்தான் பதில் சொல்ல வேண்டும்'

**◊ சி.வி. நாதன் ◊**

என்றவர், மேசையில் விரித்து வைத்திருந்த அட்டையைக் காட்டி, 'இந்த அட்டையில் உள்ள விடயம் என்னவெனில் பல பேரண்டங்கள் இருப்பதற்கான, இல்லை இல்லை இருக்கக் கூடியதான காரணங்களைக் காட்டி நிற்கின்றது' எனக் கூறினார். பின்னர் நான்சியின் பக்கமாகப் பார்த்து விட்டு,

'இவற்றை உங்களுக்கு நான்சியே விளக்கட்டும்' என்றார்.

நான்சி தனது இருக்கையை இன்னமும் சானுக்கு நெருக்கமாகப் போட்டுக் கொண்டாள். கையில் வெண்கல நிறத்தில் ஒரு சிறிய பேனா போன்ற ஒன்றினை வைத்திருந்தாள். 'இதில் இரண்டு தொகுதியிலான படங்கள் இருக்கின்றன. முதலாவது தொகுதியில் எங்களது பேரண்டம் பற்றிய விபரங்கள் இருக்கின்றன' என்றவள், தனது பேனாவால் அப்பகுதியைக் காட்டினாள். அவளது பேனா சுட்டிக் காட்டிய அந்த அட்டையின் பகுதி பளபளப்புடன் ஒளிர்ந்து அப்பகுதியை மட்டும் தெளிவாகவும் வெளிச்சமாகவும் காட்டியது. ஜேன்கின்சோ தனது இருக்கையை விட்டு எழுந்து, இருவருக்கும் பின்புறமாக வந்து நின்று கொண்டு நான்சி கூறுவதை அதானித்துக் கொண்டு நின்றார்.

'இதைத்தான் முதலில் தெளிவாகப் பார்க்கப் போகின்றோம். ஏனென்றால், இது எங்களுடையதல்லவா!' என்றவள் மெதுமையாகச் சிரித்தாள். அவளது சிரிப்பு இரசிக்க் கூடியதாகத்தான் இருந்தது.

'முதலில் 13.7 பில்லியன் ஆண்டு முன்னதாக எமது பேரண்டம் தோன்றியதில் இருந்து இப்பகுதி ஆரம்பமாகின்றது.' நான்சியின் பேனா பிக்பாங்கிற்கான இடத்தில் வெளிச்சமிட்டுக் காட்டியது.

'பேரண்டம் பிக்பாங்குடன் தோன்றிச் சில கணங்களில் பேரண்டமானது பேரண்ட வீக்கத்திற்குள்ளாகியது. பேரண்ட வீக்கத்திற்கு உள்ளாகும் முன்னரான காலத்தைத்தான் பிளாங் யுகம் என்கிறார்கள். மிகவும் சிறிய காலப் பகுதியான பிளாங் யுகத்தில் பேரண்டத்தினுள் என்ன நிகழ்ந்தது என்பதை அறிய முடியவில்லை. பேரண்ட வீக்கத்துடன், பிக்பாங் வெடிப்பினால் உண்டான அல்லது பிறந்த சக்தியால் பெருமளவு அடிப்படைத்துகள் பேரண்டத்தினுள் தள்ளி விடப்பட்டன. அதன் பின்னர் ஒவ்வொன்றாக நாலு அடிப்படைவிசைளும் பேரண்டத்தினுள் வந்து விட்டன. மிகவும் சூடாகவிருந்த எமது பேரண்டத்தில் தோன்றிய அடிப்படைத்துகள், திணிவினைக் கொள்ளமுடியவில்லை. அடிப்படை விசைகளில் ஒன்றான மெலிந்தவிசை, சடங்கள் திணிவினைப் பெறுவதைத் தடுத்துக் கொண்டது. பேரண்டம் விரிவடைய விரிவடைய, அதன் சூடு தணிந்து கொண்டு வர, மெலிந்த விசையினது வலிமையும் குறைவடைய, துணிக்கைகளில் திணிவு சேரத் தொடங்கியது.' நான்சியின் பேனாவின் வெளிச்சமும் அட்டையில் மெதுமெதுவாக நகர்ந்து கொண்டு வந்தது. ஒவ்வொரு நிலைகளுக்கான நேரங்களும் அடியில் குறிக்கப்பட்டிருந்தன.

'உங்களுக்குத் தெரியும்தானே 6 வகையான அடிப்படைத் துகள்களாகிய குவாக்சுகள். இவைதான் இப்ப எங்களுக்கு தேவைப்படுகின்றன. இதில் இரண்டு 'மேல்' குவாக்களும் ஒரு 'கீழ்' குவாக்கும் இன்னொரு அடிப்படைவிசையான வலிந்தவிசையால் சேர்ந்து புரோத்தோன்கள் உருவாகின. அதேபோலவே இரண்டு 'கீழ்' குவாக்சுகளும் ஒரு 'மேல்' குவாக்சும் சேர, நியூத்திரன்கள் வந்தன. இதெல்லாம் பேரண்டம் தோன்றிக் கிட்டத்தட்ட ஒரு செக்கனில் நடத்துவிட்டது. இந்தப் புரோத்தோன்கள்தான் ஐதரசன் அணுக்களின் அணுக்கருக்கள். இதன் பின்னராகப் பேரண்டம் குளிர்ந்து கொண்டே விரிவடைய, மெதுமெதுவாக ஐதரசன் அணுக்கருக்கள் உருகி, அதிலிருந்து மற்ற அணுக்கருக்கள் ஒவ்வொன்றாக உருவாகின, 'இவ்வணுக்கருக்கள் இலத்திரன்களுடன் மின்காந்தவியால் இணைக்கப்பட, மற்ற அணுக்கள் தோன்றி, இன்று எமது பேரண்டம் இப்படியாகக் காட்சியளிக்கின்றது.' மிக ஆறதலாகவும் நிதானமாகவும் நான்சி கூறிக் கொண்டு வர, சானுக்கு விளங்கிக் கொள்வதில் எந்தச் சிக்கலும் ஏற்படவில்லை.

கொஞ்சம் நிதானித்து இடைவெளிவிட்ட நான்சி, சானைப் பார்த்தாள். அவரது

தொடர்ச்சி 37ஆம் பக்கம்



# முகங்கள்...

28ஆம் பக்கத்தொடர்ச்சி

ராணுவம், அயலுறவு, நிதி உள்பட உள்துறை தவிர நாட்டின் முக்கியமான அனைத்துத் துறைகளிலும் அமைச்சராகப் பணியாற்றியிருக்கிறார், பிரணாப். 1973ஆம் ஆண்டு, இந்திரா காந்தி மந்திரிசபையில் தொழில்வள மேம்பாட்டு துறை மந்திரியாக பதவி ஏற்றார். தொடர்ந்து 9 ஆண்டுகள் மத்திய மந்திரியாக இருந்தார். 1982ஆம் ஆண்டு, இந்திரா காந்தி மீண்டும் பிரதமர் ஆனபோது, அவரது மந்திரிசபையில் நிதி மந்திரி ஆனார். 1984 வரை இந்திரா காந்தி அமைச்சரவையில் நிதியமைச்சராக இருந்தார். அப்போதுதான், தற்போதைய இந்திய பிரதமர் மன்மோகன்சிங், ரிசர்வ் வங்கி கவர்னராக நியமிக்கப்பட்டார். அக்காலங்களில், இந்திரா காந்தி இல்லாத சமயங்களில், பிரணாப் முகர்ஜிதான் மத்திய மந்திரிசபை கூட்டங்களுக்கு தலைமை தாங்குவது வழக்கம். டெல்லி மேல் சபையின் ஆளுங்கட்சி தலைவராகவும் இருந்தார். கிட்டத்தட்ட இரண்டாம் இடம்! மிக இளம் வயதிலேயே அவ்வளவு முன்னேறியவருக்கு, திறமை இருந்தும் பலமுறை முட்டி மோதியும் அதனைக் கடந்து முதலிடத்துக்கு நகர முடியாமலேயே, அரசியல் வாழ்க்கை முடியப் போகிறது என்பதுதான் சோகமானது.

இந்திரா காந்தி மறைந்தபோது அடுத்த பிரதமர் தான்தான் என நம்பினார், பிரணாப். ஆனால், அது ராஜீவ்காந்திக்குப் போனது. தன்னை விழுங்கி தாண்டி செல்ல வாய்ப்புள்ளவர் என்பதாலோ என்னவோ, அதன்பிறகு ராஜீவ் காந்தி கடைசி வரை பிரணாப்பை ஓரங்கட்டியே வைத்திருந்தார். இந்திராவின் அமைச்சரவையில் நிதி அமைச்சராக, இரண்டாவது இடத்தில் இருந்த பிரணாப்பிற்கு ராஜீவ் எந்தப் பொறுப்பும் கொடுக்கவில்லை. மாநில காங்கிரஸ் தலைவர் பதவிகூட கொடுக்கப்படவில்லை. இதனால், காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறிய பிரணாப், 'ராஷ்டிரிய சமாஜ்வாடி காங்கிரஸ்' என்று தனிக் கட்சி ஆரம்பித்தார். ஆனால், அதற்கு வங்கத்திலேயே ஆதரவு இல்லாததால் ஒரு வருடத்தில் கடையைக் கட்டினார். ஓரிரு ஆண்டுகளில் மீண்டும் காங்கிரசில் சேர்ந்தார். 1987ஆம் ஆண்டில் இருந்து 1989ஆம் ஆண்டுவரை, காங்கிரசின் பொருளாதார ஆலோசனை கவுன்சில் தலைவராக இருந்தார்.

ராஜீவ்காந்தி மரணத்துக்குப் பின் மீண்டும் பிரதமர் கனவு வந்தது பிரணாபுக்கு. ஆனால், இப்போது அதை நரசிம்மராவ் கலைத்து விட்டார். ஆனாலும், காங்கிரசில் பிரணாப்புக்கு மறுவாழ்வு கொடுத்தவர் நரசிம்மராவ்தான். அவர் தலைமையிலான அரசில், திட்டக் கமிஷன் துணைத் தலைவராகவும் மத்திய வெளியுறவுத்துறை மந்திரியாகவும் பிரணாப் முகர்ஜி இரட்டைப் பதவி வகித்தார்.

நரசிம்மராவ் காலத்துக்குப் பின் மீண்டும் பிரதமர் கனவு வந்தது பிரணாபுக்கு. ஆனால் சோனியா, மன்மோகன்சிங் பெயரை தேர்வு செய்தார். மன்மோகன்சிங்கின் முதலாவது மந்திரி சபையிலும் தற்போதைய இரண்டாவது மந்திரி சபையிலும் இரண்டாவது இடமாகவே திகழ்ந்து வருகிறார், பிரணாப் முகர்ஜி.

கடைசி வரை பிரணாப்புக்கு பிரதமர் பதவி கனவு கைகூடவில்லை என்றாலும், பிரதமர் பதவியில் அமர்ந்தவர்கள் எல்லாம் இவரிடம்தான் முக்கிய ஆலோசனைகளைக் கேட்டார்கள் என்பது சுவாரஸ்யமான ஆச்சரியம். மன்மோகன் சிங் தலைமையிலான முதலாவது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியிலும் சரி, இப்போதைய 2ஆவது ஆட்சியிலும் சரி பிரணாபைத் தவிர்த்து ஒரு நாள் கூட ஆட்சி நடந்ததில்லை, கட்சி நடந்ததில்லை, ஒரு கூட்டம்கூட நடந்ததில்லை.



அதற்குக் காரணம், கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு கால அரசியல்வாதி, தேர்ந்த நிர்வாகி, ஒரு மிகச்சிறந்த ராஜதந்திரவாதி, அரசியல் சட்டத்திலும் ஆட்சி நிர்வாகத்திலும் ஆழ்ந்த ஞானம் பெற்றவர், உலகின் அனைத்து நாட்டு தலைவர்களுக்கும் பரிச்சயமானவர், எந்தப் பிரச்சினையையும் பக்குவமாகக் கையாளக் கூடியவர் என்ற பாராட்டுகள்தான். பிரணாப் ஞாபக சக்தியில் புலி. அரசியல் வரலாறு தொடர்பான எந்த நிகழ்வு பற்றிக் கேட்டாலும் படாரென்று பதிலளித்து கலகலக்க வைப்பார். எனவே, இவரை 'நடமாடும் என்சைக்ளோபீடியா' என்றுதான் பலரும் செல்லமாக அழைப்பார்கள். ஒரு உதாரணம்: ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் ஒரு நூலைத் தயாரித்தபோது அதில் பட்ஜெட் தயாரிப்பு பற்றிய அத்தியாயத்தை எழுதுமாறு பிரணாப்பைக் கேட்டுக்கொண்டது. அவரும் எழுத சம்மதித்தார். ஆனால், நேரம் கிடைப்பதுதான் அரிதாக இருந்தது. கெடு தேதி நெருங்கிக் கொண்டிருந்தது. பதிப்பாளர்கள் பார்த்தார்கள். இது வேலைக்காகாது என்று டேப் ரெக்கார்டரோடு வந்துவிட்டார்கள். "நீங்க சொல்லுங்க! நாங்க பதிவு செய்து டைப் செய்து கொள்கிறோம்" என்று வந்து நிற்கிறார்கள். பிரணாப் பேச ஆரம்பித்தார். கையில் எந்தக் குறிப்பும் இல்லாமல் 1930இல் ஆரம்பித்து போடப்பட்ட பட்ஜெட்கள், தேதிகள், எத்தனை கோடிக்கு போடப்பட்டது... என பட்ஜெட் பற்றிய புள்ளி விவரங்கள் எல்லாம் சரளமாகக் கொட்டு கிறார். பதிப்பாளர்கள் டேப் ரிக்கார்டில் இருந்ததை எழுதி எடுத்து, புள்ளி விவரங்களைச் சரிபார்த்தபோது அசந்து போனார்கள். ஒரு புள்ளிவிவரம் கூடத் தவறாக இல்லை.

பிரணாப்பின் பலங்களில் ஒன்று நண்பர்களைத் தக்கவைத்துக் கொள்வது. பல்வேறு கட்சிகளிலும் அவருக்கு நண்பர்கள் இருக்கிறார்கள். எனவே, மத்திய அரசுக்கு சிக்கல் நேரும்போதெல்லாம், அதற்கு தீர்வு காண இவரைத்தான் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி பயன்படுத்துவது வழக்கம். இன்றைய சூழலில் குடியரசுத் தலைவர் பதவிக்கு சரியான தேர்வு பிரணாப் ஒருவரே என எதிர்க்கட்சிகளும் ஒப்புக்கொண்டுள்ளதே, பிரணாப் அரசியல் நட்பை எந்தளவுக்கு பேணி வந்திருக்கிறார் என்பதுக்கு சான்று! 1967இல் அண்ணா முதல்வராக இருந்தபோது வங்க முதல்வர் அஜாய் முகர்ஜியை ஒரு நிகழ்ச்சிக்கு அழைத்திருந்தார். அப்போது அஜாய் தனக்குப் பதிலாக அனுப்பியது 32 வயது இளைஞராக இருந்த பிரணாப்பை. அன்று அவரை வரவேற்க கருணாநிதியை விமான நிலையத்திற்கு அனுப்பி வைத்தார் அண்ணா. அன்று துவங்கிய அவர்களது நட்பு இன்று வரை நீடிக்கிறது. இப்போதும் கூட்டணியில் ஏதாவது பிரச்சினை என்றால் கருணாநிதியோடு பேசித் தீர்க்க சோனியா அனுப்புவது பிரணாப்பைத்தான். "பிரணாப் முகர்ஜி என்ற இந்த ஒரு மனிதர் மட்டும் இல்லாமல் இருந்தால் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு என்னவாகியிருக்கும் என்று நான் வியப்பதுண்டு" என்று சொல்லியிருக் கிறார், பாஜக தலைவர் எல்.கே.அத்வானி.

மனதில் நினைப்பதை வெளிப்படையாக பேசி விடுவது பிரணாபின் இன்னொரு பலம்.

நாடாளுமன்ற விதிமுறைகளை கடைபிடிப்பதில் கண்டிப்பானவர். எப்போதுமே கண்டிப்பும் கறாரும் மிக்க ஒரு ஆசிரியரின் உடல் மொழியை பிரணாபிடம் பார்க்கலாம். தப்பு செய்தாலோ அல்லது தவறாக பேசினாலோ யாராக இருந்தாலும் கண்டிக்கத் தயங்காதவர். அது கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி, பட்டென்று பேசி விடுவார் பிரணாப். நாடாளுமன்றக் கூட்டங்களின் போது இதை மக்களும் பார்த்துள்ளனர்.

பிரணாப் மீது பல ஊழல் குற்றச்சாட்டுகளும் உள்ளன. ஷா கமிஷன் அறிக்கை, மார்ச் 11 1978, பக்கம் 82இல், பிரணாப் முகர்ஜி 'தன் பதவியையும் அதிகாரத்தையும் தவறாகப் பயன்படுத்தியுள்ளார் என்பது தெளிவாகிறது. சட்ட ரீதியான, நிர்வாக ரீதியான நடைமுறைகள் தூக்கி எறியப்பட்டன என்பதைத் தெளிவாகக் காட்டும் எடுத்துக்காட்டு இது' எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. மேலும், அதே அறிக்கை, பக்கம் 57இல், 'இந்திய ஸ்டேட் வங்கியின் தலைவரை நியமிப்பதில் இந்திய ஸ்டேட் வங்கிச் சட்டம் 1955ஐயும், வழக்கமான நடைமுறைகளையும் (பிரணாப்) பின்பற்ற வில்லை எனத் தெரிகிறது. வரதாச்சார் என்பவரை பாரத ஸ்டேட் வங்கித் தலைவராக நியமிப்பது என்ற முடிவில் முற்றிலும் தொழில் ரீதியான தகுதிக்குப் பதில் வேறு சில காரணங்கள் செயல்பட்டுள்ளன என கமிஷன் கருதுகிறது. திரு. வரதாச்சாரியை நியமிக்கு விஷயத்தில் திரு. பிரணாப் முகர்ஜி ஏற்கெனவே பலகாலமாக நிறுவப் பட்டுள்ள மரபுகளையும் நடைமுறைகளையும் மீறிச் செயல்பட்டு, தனது பதவியைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளார்' எனக் குற்றச்சாட்டுகிறது.

இந்திரா அமைச்சரவையில் பிரணாப் நிதியமைச்சராக இருந்தபோது, ரிலையன்ஸ் நிறுவனத்திற்கு உதவுவதற்காக அதன் தொழில் போட்டியாளர் பாம்பே டையிங் நிறுவனத்தின் மீது எப்படி வரிகளைச் சுமத்தி அதை முடக்கினார் என்பதை அருண் ஷோரியும் குருமூர்த்தியும் விரிவாக எழுதியிருக்கிறார்கள். அன்னா ஹசாரே குழுவைச் சார்ந்த அரவிந்த் கெஜ்ரிவால், பிரணாப் மீது இரண்டு ஊழல் புகார்களைக் கூறுகிறார். அவை ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக சுயேச்சையான குழுவால் விசாரிக்கப்பட வேண்டும் எனவும்


தொடர்ச்சி 37ஆம் பக்கம்






# முகங்கள்...

வற்புத்துகிறார். ஒன்று: 2007ஆம் ஆண்டு நடந்த அரிசி ஏற்றுமதி ஊழல், பசியில் வாடிக் கொண்டிருந்த கானா நாட்டிற்கு எனச் சொல்லி 2,000 கோடி மதிப்புள்ள 2 லட்சம் டன் அரிசி மற்றொரு மூன்றாவது நாட்டின் வழியாக அனுப்பப்பட்டது. ஆனால், இதில் முறைகேடுகள் நடந்ததாகச் சொல்லி கானா அரசு பிரணாப் முகர்ஜியையும் கமல்நாத்தையும் விசாரிக்க வேண்டும் என இந்திய அரசுக்குக் கடிதம் எழுதியது. இரண்டு: 18,760 கோடி ரூபாய் நீர்மூழ்கிக் கப்பல் பேரம். பிரணாப் முகர்ஜி பாதுகாப்பு அமைச்சராக இருந்தபோது நீர்மூழ்கிக் கப்பல் கட்டுவதற்காக பிரான்ஸ் நாட்டுடன் ஒப்பந்தம் செய்துகொண்டது. இந்தப்



பேரத்தில் பெரும்தொகை கமி'னாக பெறப்பட்டது என்று கெஜ்ரிவால் குற்றம் சாட்டுகிறார். இந்தப் புகாரை பிரணாப் நாடாளுமன்றத்தில் ஏற்கெனவே மறுத்துள்ளார். நீர்மூழ்கிக் கப்பல் கட்டும் பணி காலதாமதமாகிக் கொண்டே போகிறது. இப்போது அந்தத் திட்டத்தின் செலவும் 23,582 கோடியாக உயர்ந்துவிட்டது.

எப்படியோ, அதிகாரத்தின் உச்சத்தில் நீண்டநாட்கள் இருந்தாலும் பிரணாப் முகர்ஜியின் நீண்டநாள் கனவென்பது பிரதமர் பதவிதான். என்றாவது ஒருநாள் பிரதமர் இருக்கையில் அமரலாம் என்று காத்திருந்தவருக்கு, ஜனாதிபதி பதவியை அளிப்பதன் மூலம் நிரந்தரமாக வழியை அடைத்துவிட்டனர் சோனியாவும் மன்மோகன்சிங்கும். காங்கிரசு கட்சியிலும் அமைச்சரவையிலும் நாடாளுமன்றத்திலும் பிரணாப் முகர்ஜியின் ஆதிக்கம்தான் நீடித்தது. இன்னும் சொல்லப்போனால், சோனியா காந்தி, ராகுல் காந்தி, மன்மோகன் சிங் ஆகிய மூன்று பேரும் யாராவது ஒருவரைக் கண்டு கொஞ்சமாவது பயந்தார்கள் என்றால் அது பிரணாப் மட்டும்தான். இப்போது காங்கிரசு கட்சி, அமைச்சரவை, நாடாளுமன்றம் என்கிற மூன்று இடங்களிலிருந்தும் அவரை வெளியேற்றிவிட்டார்கள். கட்சிப் பதவிக்கோ, அமைச்சர் பதவிக்கோ, நாடாளுமன்ற உறுப்பினராகவோ இனி ஒருபோதும் அவரால் வரவே முடியாது. ஒருமுறை குடியரசுத் தலைவர் ஆனால், அப்புறம் வேறு பதவிக்கு போவது மரபல்ல.

பிரணாப் இனிப்புகளின் பிரியர். ரசகுல்லாவைக் கண்டால் பாய்ந்து விடுவார். பலுசஷி என்று ஒரு வங்காள இனிப்பு இருக்கிறது. அது அவருக்கு உயிர். பிரணாப்பிற்கு இரண்டு மகன்கள், ஒரு மகள். 'அரசியலில் இருந்து ஓய்வு பெற வேண்டும் என என் மனம் சொல்கிறாது. ஆனால், அதை இதயம் அனுமதிக்க மறுக்கிறது' என்று பிரணாப் ஒருமுறை சொன்னார். கடைசியில் மனம் ஜெயிக்கிறது.

இதுவரை 'ரப்பர் ஸ்டாம்ப்' என கிண்டலடிக்கப்பட்டு வந்த இந்திய குடியரசுத் தலைவர் பதவி, பிரணாப் மூலம் பரபரப்பான, நிஜமான அரசியல் தலைமைத்துவத்தைப் பெறும் என அரசியல் தாண்டி பலரும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

அந்த நம்பிக்கையை பிரணாப் காப்பாற்றுவாரா?


விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு

www.vlambaram.com


# இன்னொரு

35ஆம் பக்கத்தொடர்ச்சி

முகத்தில் எந்தக் குழப்பமும் இல்லை.

தொடர்ந்தாள். 'இனி அடுத்த தொகுதியைப் பார்ப்போம்' இந்த நேரத்தில் ஜென்கின்சோ இடைப்புகுந்தார்.

'மிஸ்டர் சான், அடுத்த தொகுதியைப் பார்ப்பதற்கு முன்னராக சின்னதொரு விடயத்தைக் கருத்தில் எடுங்கோ.' என்றவர் தொடர்ந்தார்.


'இந்த மேல், கீழ் குவாக்சுகளின் திணிவில் கொஞ்சம் வித்தியாசம். அதாலை, நியூத்திரன்கள் புரொத்தோன்களையும் விட ஒரு வீதம் திணிவு கூடியவை.'

'ம்', சுவாரசியமாக இருக்கின்றதே' சான் 'இந்த ஒரு வீதத் திணிவு வித்தியாசம்தான் எங்களது பேரண்டத்தை இப்படியாக வைத்திருக்கின்றது. இந்தத் திணிவு வித்தியாசம் இல்லை என்றால், ஒருவேளை நானும் நீங்களும் கூட இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்' ஜென்கின்சோவைத் தொடர்ந்து நான்சி கூற,

ஆச்சரியத்துடன் 'வாவ்' என்றார் சான். அவரது கண்கள் விரிந்திருந்தன.
'இந்த அடிப்படைத் துகளின் திணிவுகளில் இருக்கும் வித்தியாசத்தில், சிறு மாற்றம் இருந்திருந்தாலே எங்களது பேரண்டத்தின் கதி வேறு ஏதோவாகத்தான் இருந்திருக்கும்' நான்சி தொடர்ந்து கூற, தலையை ஆட்டினார் ஜென்கின்சோ.

'இனி, இரண்டாவது தொகுதியைப் பாருங்கள்.' என்றாள் நான்சி. தொடரும்...

# தமிழர்களின் உடை என்னும் அடையாளம்




என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள். நலம் பெறப்பிரார்த்திக்கின்றேன்.

மனித குல அடையாளங்களும், இனவழிப் பட்ட குடிகளின் அடையாளங்களும், மொழிவழி அடையளங்களும் பேணப்பட வேண்டிய கட்டாயத்தில் இன்றைய உலகம் கரிசனை காட்டி வருகின்றது. கனடா என்ற பல்கலாச்சாரக் கட்டமைப்பில் வாழும் இனங்கள் தங்கள் அடையாளங்களை இனங்கண்டு போற்றவும், வளர்க்கவும் உரிமை பெற்றிருக்கின்றன. பொது நீரோட்டத்தில், பொதுக்கட்டுமானத்தில் இணைந்த வாழ்வில் பிறருக்குத் தொல்லை தராத, தனது தனித்தன்மைகளைத் தக்க வைத்து வருங்காலப் பாரம்பரியத்தினருக்கு அறிவூட்டியும், கையளித்தும் வாழும் சுதந்திரமே கனடாவின் மாண்பான மேன்மையான, கணிப்புக்குரிய இருப்பாய் கொள்ளப்பட வேண்டும்.

நண்பா!
தமிழர் என்னும் இனக்குடியின் அகமும் புறமும் குணம் குறிகளால் அடையாளத்தை வெளிப்படுத்தும் நோக்கிலே அவ்வினத்தின் தேசிய உடைகள் பற்றிய அவதானமும் பிரதானமானதே. வேட்டி, சால்வை, சேட்டு, சேலை, சட்டை கட்டிய தமிழ் நாகரிகத்தின் அடையாளத்தைப் புறக்கோலம் என்றும் அன்பு, ஆதரவு, கனிவு, இரக்கம், கருணை என்னும் பண்பு நலன்களை அகக்கோலம் என்றும் வகைப்படுத்திச் சிந்தித்தல் வேண்டும் நண்பா!

பொறுப்புணர்வு, குற்ற உணர்வு, நல்லது கெட்டது என்கின்ற இருமைப் பண்பு களெல்லாம் காலாவதியாகிவிட்டன. நவீன உலகம் பயித்தியக்காரர்களாலானது. அறிவாளிகளுக்கோ முட்டாள்களுக்கோ இங்கு இடமில்லை என்ற நாவலாசிரியர் மார்கெரித்தூராஸ் என்ற முதிர்ந்த பெண்மணியின் கூற்றினைக் கண்டதும் கலங்கி விட்டேன். அதிர்ச்சியில் உறைந்து கிடந்த பின்பு மனதை ஆசுவாசப்படுத்தி இக்கடிதத்தை எழுதுகிறேன். மனிதனின் அகமும் புறமும் இணைந்த வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை. தமிழ் இலக்கியத்தின் தொன்மையும் வன்மையும் கூர்மையும் பேசும் அக நானூறும் புறநானூறும் எழுந்தமைக்கே தமிழ் இனத்தின் வாழ்வியல் கோலங்களான அடையாளங்களே பெரிதும் காரணமாயின.

தமிழரான ஆணும் பெண்ணும் பொதுநிகழ்வுகளில் தமது புறஅடையாளமான வேட்டி சேலைகளை அணிவதால் பெறுகின்ற கணிப்பும் மதிப்பும் அடையாள முகவரிக்கும் தமிழ் முகத்திற்கும் ஒரு பதிவினை உண்டாக்கும் பயன்களையும் பெற்றுத்தரும். இவை குறித்த என் அனுபவங்கள் இரண்டு இங்கு முக்கியமானது.

தென் தமிழ் நாட்டிலே சென்னை மாகாணத்தை முதன் முதலாக தேர்தல் மூலம் கைப்பற்றிய தி. மு. கழகம் அரசு அமைத்தபோது அறிஞர் அண்ணா முதல் அமைச்சர் ஆனார். இரா. நெடுஞ்செழியன் கல்வி அமைச்சர் ஆனார். கலைஞர் மு. கருணாநிதி பொதுப்பணித்துறை அமைச்சரானார். அமைச்சர் அவையின் முதல் கூட்டத்திற்கு சமூகம் அளித்த கல்வி மந்திரி நெடுஞ்செழியன் தேசிய உடையான வேட்டியினை விலக்கி நீளக் கால்சட்டை, கோட்டோடு சென்றிருந்தார். அமைச்சர் களைப் பத்திரிகையாளர்கள் படம்பிடித்த போதும் நெடுஞ்செழியன் அதே கோலத்தோடுதான் இருந்தார். இது தி.மு. கழகத்துக்குள் பெரிய அடையாளப் பிரச்சினை ஆகிவிட்டது.



தமிழர் அமைத்த தமிழ் அமைச்சர் அவையில் ஒருவர் தமது அடையாளத்தை விலக்கியது பலவிதமான கேள்விகளை எழுப்பியது. அறிஞர் அண்ணா சொல்லியும் நெடுஞ்செழியன் கேட்கவில்லை என்ற குற்றச்சாட்டுப் பரவியது. அவருடைய அமைச்சு, கல்வி அமைச்சு ஆனதினால் அவர் நீளக்கால் சட்டை கோட்டோடு தான் போக வேண்டும் என அவர் மனைவி விசாலாட்சி கடும் கட்டளை போட்டிருந்தார் என்றும் ஒரு செய்தி சொல்லப்பட்டது. இதனுடைய தாக்கம் நெடுஞ்செழியனுடைய அரசியல் வாழ்வில் பெரும் சிதைவையும் திருப்பத்தையும் உண்டாக்கி விட்டது.

1969ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அமரரானார். அடுத்த முதல் அமைச்சர் யார்? என்ற கேள்வி எழுந்தது. இயல்பாகவே கழகத்தின் இரண்டாம் இடத்தில் ஏற்கப்பட்டிருந்த நெடுஞ்செழியனுக்கு முதல் அமைச்சர் பதவி வழங்கப்பட்டிருக்க வேண்டும். அவரிடம் அறிவு, ஆற்றல், தகுதி, தமிழ்ப்பண்பாடு என்னும் அகக்கோலங்கள் இருந்தன. எதிர்க்கட்சிகளும் மதிக்கும் புறநிலை ஆதரவும் இருந்தது. ஆயின் ஆட்சி அமைத்த காலத்தில் அவருடைய அகம் ஒன்றாயும் புறம் இன்னொன்றாயும் மாறியதால் அவரை முதல் அமைசராக்க விரும்பவில்லை. அவர் வேட்டி என்னும் தமிழர் நாகரிக உடையை விலக்கி கால்சட்டை கோட் அணிந்தமை

தொடர்ச்சி 39ஆம் பக்கம்

நகைச்சுவைத் தொடர் 249

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



## பேசப் படாத அனுபவங்கள்



அன்றைய மேடை நாடகங்கள், கோவில் திருவிழாக்கள் பற்றி திரும்பத் திரும்ப நினைத்து மகிழாதவர்களும் இப்போ அப்படியில்லையே என்று கவலைப்படாதவர்களும் இல்லை.

நாடகங்கள் மட்டுமல்ல திருப்பூங்குடி ஆறுமுகம், சின்னமணி, வடிவேலு ஆகியோரின் வில்லுப்பாட்டு.

சோக்கல்லோ சண்முகம், கோப்பாய் தியாகு போன்றோரின் நகைச்சுவை நிகழ்ச்சிகள், பட்டிதொட்டியெல்லாம் வயது வித்தியாசமின்றி ரசித்த இன்றும் நம்முடனுள்ள அண்ணை றைற் கே.எஸ். பாலச்சந்திரனின் அண்ணை றைற். நான் இணுவிலில் பிறந்து வளர்ந்தாலும் பாலச்சந்திரண்ணருக்கு இணுவிலில் கூடிய தொடர்பு இருந்தாலும் இலங்கையில் கூட்டத்தோடு கூட்டமாகத்தான் அவரைப் பார்த்திருக்கிறேன்.



ரி.வி.ஐ. யில் பிரபல்யமான Y.T. லிங்கம் சோவில் என்னையும் என்னோடு சிறுவயதிலிருந்து பாடி நடித்துவரும் எனது மகன் அனுராகவனையும் கலந்துகொள்ளச் செய்துள்ளார்.



Y.T. லிங்கம் சோ மூலம் பல கலைஞர்களை மக்களுக்கு அறிமுகம் செய்துள்ளார். அதேபோல நடிகரும் கீதவாணி அறிவிப்பாளருமான ஜனகன் பிக்சர்ஸ் வாரம் ஒரு கலைஞர் எனும் நிகழ்ச்சி மூலம் 100 க்கு மேற்பட்ட பல துறைசார்ந்த கலைஞர்களை அறிமுகப்படுத்தியுள்ளார்.






சங்கமம் சி.ரி.பி.சி. வானொலி மூலம் பல கலைஞர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர், பாராட்டப்பட்டுள்ளனர்.

நாம் கலந்துரையாடல்கள், பேட்டிகளின்போது எமக்குத்தெரிந்த மறைந்து போன, வாழும்போது மறந்துபோன கலைஞர்கள் அறிஞர்களைப் பற்றி எமக்குத் தெரிந்தவற்றைப் பேசலாம் தானே.


நல்ல மனம் வாழ்க. நாடுபோற்ற வாழ்க.

அந்தக் காலகட்டத்தில் அரியாலையில் வாரம் தவறாமல் மேடையேற்றப்படும் அடங்காப் பிடாரி, வெளிக்கிடடி விசுவமடுவுக்கு மற்றும் கோண்டாவிலில் பிரசித்திபெற்ற அலாவுதீன் போன்ற நாடகங்கள், வைரமுத்து என்றால் அரிச்சந்திரா, அரிச்சந்திரா என்றால் வைரமுத்து என்று சொல்லுமளவிற்கு அரிச்சந்திரா மயான காண்டம் இலங்கையில் மேடையேற்றப்படாத இடங்களே இல்லை. அன்று இன்றுள்ளதுபோல் நமிதா தமன்னா ஹன்சிகா அனுஸ்கா போன்ற பெண் நட்சத்திரங்கள் இல்லை. சந்திரமதி பாத்திரத்தில் ஆண் ஒருவரே பெண் வேடமேற்று நடிப்பார். அதுமட்டுமல்ல சந்திரமதி சாறியுடன் வரவேண்டும். ஆனால் இன்றுள்ள நட்சத்திரங்கள் சாறியுடன் நடிப்பது குறைவு. இதனால்தான் பழைய நாடகங்கள் இன்று இல்லை.




கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே.

சமயப்பாட வாத்தியாரின் முயற்சியில் உலகர் பாடமாக்கிய திருநாவுக்கரசரின் தேவாரமும் அந்தக்காலத்தில் அனல் வாதம், புனல் வாதம், சுர வாதம் போன்றவை சமயச் சண்டைகள், கோயில் எரிப்பு, பள்ளிவாசல் தகர்ப்பு அன்றுமுதல் இன்றுவரை தொடர்ந்துகொண்டிருக்கிறது.





கதிர்காமம் எமது தெய்வம், சிவனொளிபாத மலை எமது தெய்வத்தின் காலடி என இன்றுவரை விடைகாண முடியாத கேள்வியாகவே இருக்கிறது.



வருடா வருடம் கோவில் திருவிழா என திரிந்த ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்ட் புளோர் செல்லம்மாவும் ஒன்றுகூடல் பீச் வெளிநாட்டுப்பயண திட்டங்களில் இறங்கிவிட்டனர்.




கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என எங்கோ கேட்டது உலகரின் காதில் ஒலித்தது.

இப்போ கோவில் இல்லாவிட்டாலும் பரவாயில்லை, பிறிம்லி மீனாவோ எங்கடையாக்கள் இல்லாத இடத்திலை போய் இருக்கப்போறனெண்டு போய் அஜாக்ஸ் ஓசாவாவிற்கும் அங்காலை போய் ஒருவருசமாச்சு. ஆட்டிலறி அன்னம்மாவுடனும் செக்கண்ட்புளோர் செல்லம்மாவுடனும் இடைக்கிடை ரெலிபோனில் (காட் போட்டு) கதைக்கும்போது இங்கு பாபொயில் அரிசி, மரக்கறி மலிவு. நேரடி ஒலிபரப்பு செய்வது போல சொல்லிக் கொண்டிருப்பார்கள். தன்னிடம் தமிழ் ரேடியோ இல்லை கேட்க நேரமில்லையென பிறிம்லி மீனா அடிக்கடி சொல்லிக்கொள்ளுவா.

வடபகுதியில் தமிழ்ப்பகுதிகளில் ஆக்கிரமித்த காணிகளைத் திருப்பிபெற்றுத்தரும்படி கேட்ட மக்களுக்கு கடவுளை வேண்டுங்கள் காணிகிடைக்கும் என்று ஆளும்கட்சியைச்சேர்ந்த பிரமுகர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

காணி நிலம் வேண்டும் பராசக்தி,
காணி நிலம் வேண்டும் ….பாரதியார்.




“அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்” என்பதுபோல ஐ.நா மனித உரிமைக்குழு இலங்கை அரசை கொலக்சன் ஏஜென்சிக்காரன் தொந்தரவு கொடுத்ததால் ஏதோ கதைக்க விருப்பம் என்பது போல சமிக்கை கொடுக்கிறார்களாம். நான் சின்னனா இருக்கேக்கை மகாவலி கங்கையை யாழ்ப்பாணம் வரை கொண்டுவரப் போயினமெண்டு சொன்னதிலை பள்ளிக்கூடத்திலை என்னை ஓல் சிலோன் ரூர் போகினம் மகாவலி கங்கையெல்லாம் பாக்கலாம் போகட்டோ எண்டு கேட்க மகாவலிகங்கை லெக்சன் முடிய யாழ்ப்பாணம் வரும் எண்டு அப்பு சொன்னவர் லெக்சன் முடிய வெண்ட எம்.பி.யும் வரேல்லை மகாவலிகங்கை இன்றுவலை வரவில்லை. ஆமியும் ஆட்டிலறியும்தான் தமிழர் பகுதிகளுக்க வந்திருக்கு.






யூலை

1. கனடா டே
4. சுவாமி விவேகானந்தர் நினைவுதினம்
8. நடிகமணி வி.வி. வைரமுத்து நினைவுநாள் …..
   (தமிழ்ப்பகுதிகளில் அனைத்துமக்களையும் கவர்ந்த பல நூற்றுக்கணக்கான மேடையேறிய அரிச்சந்திரா மயானகாண்டம்

# கைசன்பேர்க்கின்....

29ஆம் பக்கத்தொடர்ச்சி

மோத விடுவார்கள். ஒரு சில போட்டோன்கள் மட்டுமே இலத்தின்களுடன் மோதும். ஏனயவை நேராகவே அணுவின் ஊடாகச் சென்றுவிடும். மோதலினால் தனது பாதை யில் இருந்து விலகும் ஒளித் துகளினை கண்டு, அதன் விலகலைக் கணித்து அதில் இருந்து மோதும் இலத்திரனின் நிலையானது கணிக்கப்படும். ஆனால் இது உறுதியான முடிவல்ல. இதிலுள்ள சிக்கல் என்னவெனில், போட்டோன், அலை ‘துணிக்கை இருமைத் தன்மை காட்டுவதால், அதன் அலைநீளம், சிக்கல் ஒன்றினை ஏற்படுத்துகிறது. இலத்திரனின் நிலையின் சரியான கணிப்பில், இந்த போட்டோனினது அலைநீளமளவு வழு, அதாவது உறுதியின்மை ஏற்படுகிறது. இதனைக் குறைக்க வேண்டுமெனில், போட்டோனின் அலைநீளத்தைக் குறைக்க வேண்டும். ஆனால் அலைநீளத்தைக் குறைத்தால் போட்டோனின் சக்தி அதிகமாக இருக்கும். அதனால் போட்டோன் - இலத்திரன் மோதலினால் ஏற்பட்ட சக்திப் பரிமாற்றத்தினால், கணிக்கப்படக் கூடிய இலத்திரனின் மோதும் கணத்திலான இலத்திரனின் வேகத்தின் உறுதியின்மை யானது அதிகரிக்கும். அதுமாத்திரமல்ல இந்த உறுதியின்மைகள் இரண்டும் தவிர்த்துவிடக் கூடிய அளவு சிறியனவாகவும் இராது. இதுவே நுண்ணுலகின் துகள்களின் சிக்கலாகும். அதாவது குவாண்டம் உலகின் ஒரு கணியத்தின் உறுதியின்மையைக் குறைக்கும்போது, அதனுடன் தொடர்பான இன்னொரு கணியத்தின் உறுதியின்மை அதிகரிக்கும். முடிவுகளின் இந்த உறுதி யின்மைகளானது அவற்றின் அளவுகளில் ஒன்றுக்கொன்று பரிமாறல் முறையில் அமை- வதை கைசன்பேர்க் அவதானித்தார்.

இந்நிலையில்தான் கைசன்பேர்க் தனது பிர- பலமான உறுதியின்மைக் கொள்கையைக் கூறினார். அதாவது இரண்டு உறுதியின்மைத் தன்மைகளிடையேயான தொடர்பினைக் கணித்துக் காட்டினார். குவாண்ரம் துணிக்கை ஒன்றின் திணிவினதும் வேகத்தினதும் பெருக்குத் தொகையின் (இதனை உந்தம் என்பார்கள்) உறுதியின்மையின் அளவினதும் அத்துணிக்கையினது நிலையினது உறுதி யின்மையின் அளவினதும் பெருக்குத் தொகையானது ஒரு குறிப்பிட்ட பெறுமானத்திற்குக் குறைவாக இருக்க முடியாது. இதில் ஒரு சிறப்பான விடயம் என்னவெனில், இந்தக் குறிப்பிட்ட பெறுமானமானது பிளாங்கின் மாறிலியின் பெறுமதிக்குச் சமனாகும். இதனைப் பின்வருமாறு கூறலாம். ‘குவாண்ரம் துணிக்கையின் உந்தத்தின் உறுதியின்மை யினதும் அதன் நிலையின் உறுதியின்மை யினதும் பெருக்குத் தொகையானது பிளாங்கின் மாறிலியின் பெருமானத்திற்குச் சமனாகவோ அல்லது பெரியதாகவோ இருக்கும்.’ இதுவே கைசன்பேர்க்கின் உறுதி யின்மைத் தத்துவம் ஆகும். இதில் இருந்து குவாண்ரம் துணிக்கையின் சக்தியிற்கும், நேரத்திற்கும் ஆன, அளவீடுகளின் உறுதி யின்மைகளின் பெருக்குத் தொகையும் கணிக்கப்பட, அதுவும் இதே பொருளைத் தந்தது.




YARL WINDOW
BLINDS & DRAPERY
Since 1991
VENETIAN / VERTICAL / ROLLER
WOOD / FORMWOOD
BLINDS WOOD & VINYL SHUTTERS
CALL: N. SELVAM



We have experience
to make your home
more beautiful
Tel: 416.806.5397
905.201.7733

# தமிழர்களின்...

37ஆம் பக்கத்தொடர்ச்சி

அவரைப் புறந்தள்ளியது.
நெடுஞ்செழியன் முதல் அமைச்சரானால் கழகத்தின் கொள்கைப்படி ஆட்சியை நடத்தாமல் அவர் மனைவி விசாலட்சியின் சொற்படியே ஆட்சியை நகர்த்துவார் என்ற பிரசாரம் வலுவாய் எடுபட்டது. நல்லவர் என்றும் நேர்மையானவர் என்றும் கருதப்பட்ட ஒருவர் தனது புற அடையாளத்தை மாற்றிய காரணத்தினால் புறக்கணிக்கப்பட்டார்.

கலைஞர் கருணாநிதியின் மரணமான மூத்த தமக்கையார் பெரிய நாயகி பற்றி குமுதத்தில் கட்டுரை வரைந்துள்ள கலைஞர் தமது தமக்கையாரே அண்ணாவுக்கு அடுத்த வரிசையிலிருந்த நெடுஞ்செழியனை முதல் அமைச்சராக்கவே விரும்பினார் என்றும் எம்.ஜி. ஆர், மதியழகன், நாஞ்சில் மனோகரன் முதலியோரும் ஈரோடு சின்னச்சாமியும் வேறு முடிவெடுத்தனர் என்றும் எழுதியுள்ளார். அந்த முடிவுக்கு நெடுஞ்செழியனின் தமிழ் அடையாள மாற்றமே உறுதுணையாகியது. இக்காலப் பகுதியில் நான் சென்னையில் இருந்ததால் தகவல்களை அறிய முடிந்தது.

அண்ணாமலைப் பல்கலைக்கழ இசைக்கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த சாவகச்சேரியைச் சேர்ந்த மாணவியைக் காண்பதற்கு மனைவியுடன் வந்திருந்தார் சாவகச்சேரிப் பாராளுமன்ற உறுப்பினர் வி.என் நவரத்தினம். அவரைப் பல்கலைக் கழக விருந்தினர் விடுதியில் இடம் எடுத்து தங்கவைத்தேன். அப்பொழுது பல்கலைக் கழக தமிழ்மன்றச் செயலாளராய் இயங்கிய நான் சேரிப் பிரதிநிதியை பேசவைத்தேன். 1965 ஆம் ஆண்டு என்று நினைவு. இலங்கைத் தமிழர்கள் என்ற தலைப்பில் பேசும்படி கேட்டிருந்தேன். மேடைக்கு வருவதற்கு முன்பு நவம் என்னைக் கேட்ட கேள்வி எந்த உடுப்பில் வருவது என்பது. வேட்டி உடுத்துக் கொண்டு வாருங்கள் அது தமிழரின் புற அடையாளம். மாணவர்கள் பெரிதும் விரும்புவார்கள் என்றேன். அவர் வெள்ளை வேட்டி சேர்ட்டோடும் கருகரு தாடியோடும் மேடையில் நின்று பேசினார். அவருடைய பேச்சு முடிந்ததும் ஒரு மாணவன் எங்களைக் கேட்காமலே மேடைக்கு வந்தார்.

இலங்கை தமிழர்களின் அடையாளமும் அல்லலும் இங்கு பேசிய இலங்கைப் பாரளுமன்ற அங்கத்தவருடைய பேச்சில் மட்டுமல்ல அவருடைய கோலத்திலும் தெரிந்தது. தமிழருடைய அடையாளம் வேட்டியிலும் ஈழத்தமிழர்களுடைய அல்லல் அவருடைய தாடியிலும் தெரிகிறது. நமது அடையாளத்தோடு வாழும் நாம் தமிழர்களின் அல்லல்களில் அக்கறை கொள்ள வேண்டும் என்று பேசிவிட்டு இறங்கினான். இது எதிர்பாராது நிகழ்ந்த சம்பவம். இது பற்றி தமிழகப் பத்திரிகைகளில் சிறப்புச் செய்தி வெளியிடப் பட்டிருந்தன. இதுபற்றி 'கண்ணதாசனைக் கண்டேன்' என்ற எனது நூலிலும் குறிப்பிட்டிருக்கிறேன். இன்று கனடாவின் தலைநகரான ஒட்டாவாவில் வாழும் திருமதி நவரத்தினமும் இதனை நினைவு கூர்வார்.

கனடாவில் தமது இனத்தின் தேசிய உடைகளுடன் காட்சி தரும் மக்கள் மதிப்புக்குரியவர்கள். வாழும் தேசத்தின் சமுதாயக் கட்டுமானத்துக்குள் தமது அடையாளங்களைப் பேணும் மனப்பான்மை பாராட்டுக்குரியது. உறைபனி கொட்டும் காலங்களிலும் கடும் குளிரிலும் வேட்டி



சேலை கட்டி உலவும் தமிழர்கள் முதல் மரியாதைக்குரியவர்கள். தம்மை உணர்ந்தவர்கள், தம்மை உணர்த்துபவர்கள், கோவில்களுக்கு கால்சட்டையோடு போக வேண்டிய நேரத்திலும் கையில் ஒரு வேட்டியையும் எடுத்துச் சென்று கோயிலில் வைத்து உடுத்துக் கொள்ளும் அடையாள விருப்பத்தை வியக்க வேண்டும். பொதுமேடையில் தமிழ் மேடையில் இருப்பவர்கள் தேசிய அடையாளங்களோடு இருக்க வேண்டும் என்னும் எண்ணத்தைக் கண்ணைப் போல் காக்க வேண்டும். 'மனம் உண்டானால் இடம் உண்டு.'

நண்பா!

மாணிக்கவாசகர் சிவபெருமானை நண்பா! என்று அழைத்த உறவு நெருக்கத்தை உன்னோடு வைத்துக் கொள்ள இப்படி அழைத்தேன். ஒரு குலமும் சுற்றமும் ஓருரும் அவன் அல்லவா? கனடா போன்ற நாடுகளில் குளிர் விறைப்பும் கூதல் உறைப்பும் உள்ள சூழ்நிலையில் உடை என்னும் அடையாளம் உடம்புக்கு ஒத்து வருமா? உள்ளத்து உணர்வுகளும் உந்துதல்களும் உடம்புக்கு ஒத்துவராத உபத்திரவங்களும் உண்டு தான். உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்து உடம்பைப் பேணும்படி திருமந்திரத்தில் திருமூலர் சொன்னதும் கருத்தில் கொள்ள வேண்டியதுவே. முடிந்த அளவு கோடை காலத்திலாவது நமது உடை என்னும் அடையாளத்தைப் போட்டுக் கொள்ள வேண்டும் என்ற சிந்தனை நமது மனத்துள்ளே பதிந்திருக்க வேண்டும் என்பதற்காகவே எழுதினேன். மனம் பற்றி வாழ்தல் என்னும் காரியங்களில் இதுவும் ஒன்று தானே!

வேறு என்ன? பிறபின்பு



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)



# குரல் வளம்...

23ஆம் பக்கத்தொடர்ச்சி

இழையோடும் குரல்வளம் மக்களை ஆகர்ஷித்து விடுகின்றது. மழலை மொழியும் மனங்கவரும் இசையாகும். எனவேதான் 'குழல் இனிது யாழ் இனிது என்பர் தம் மக்கள், மழலைச் சொல் கேளாதவர்.' என்றார் வள்ளுவர்.

குரல்வளம் இருந்தாலும் இசை சிறப்புற பயிற்சியும் தேர்ச்சியும் அவசியமாகும். பட்டை தீட்டிய மாணிக்கக்கல் எவ்வாறு ஒளிவிடுகின்றது. அதேபோன்று சாதகம் செய்வதனால் குரல் வளம் மெருகு பெற்று மற்றவரை உருகச் செய்து தருகின்ற இன்பம் அருமையானது.

இசையானது எல்லோருக்கும் வாய்த்து விடும் ஒன்றல்ல. எனவே சில இசைப்பாடல்களை கேட்கும் போது கழுதை கத்துகிறமாதிரி இருக்கின்றது. இப்பொழுது இசை பல்வேறு வடிவங்களை பெற்றுள்ளது. இது எல்லோர்க்கும் ஏற்புடையதல்ல. வயதுக்கேற்ற இசை, வளமான இசை, வலிந்திழுக்கும் இசை என்பனவே எப்போதும் வரவேற்புப்பெறும்.

விஜய் தொலைக்காட்சி நிறுவனம் இசை ஆர்வலர்களுக்கிடையில் திறமையான இளம் பாடகர் தெரிவுக்கான போட்டிகளை நடத்தி வருகின்றது. குரல்வளம் குபேர சம்பத்தைத் தேடித்தரும் என்பது இந்நிகழ்சியின் மூலம் உறுதியாயிற்று. இத்தகைய குரல்வளத்தில் தெய்வீகம் குடிகொண்டிருக்கிறது. முன்பு பாடகர்களுக்கு பரிசுப் பொருட்களும் நிலபுலனும் வழங்கப்பட்டன. இப்பொழுது குடிமனை வழங்கப்பட்டிருக்கின்றது. இப்பிள்ளைகள் பிற்காலத்தில் பின்னணிப் பாடகர்களாகும் வாய்ப்பும் உளது. இவர்களுக்கு எமது பாராட்டுக்கள்.




எனவே உங்கள் குரல் வளத்தை உதாசீனம் செய்யாதீர்கள். சாதகம் செய்யுங்கள். எதிர்கால சங்கீத மேதைகள் நீங்கள் தான். இசையால் இசைபட வாழலாம்.

சுகிசிவம் ஒரு பொருளாதாரப்பட்டதாரி. அத்துடன் வக்கீல் படிப்பும் மேற்கொண்டவர். தான் படித்த துறைகளில் தொழில் செய்யாமல் இன்று தனது பேச்சாற்றலால் நயத்தால் பொருளீட்டுகின்றார். அவர் ஒரு சொல்லின் செல்வர்.


உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்
SASI CHELVARATNAM
Sales Representative
Direct: 416.725.1125 / 416.858.4828
Bus : 416.321.6969
HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*
5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S 0C2
*Independently Owned & Operated

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga - 905.712.2666

"Let me help you make the right choice"
SchurenSriskandarajah B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393

Kantha Property Management Group Inc.
KPM Group Inc.
Personal and Business Loans
Line of Credits
Business Setup Consultancy
1st and 2nd Mortgages
Residential and Commercial Leasing
Investment Properties
Property Management Services
Bad Credit Solutions
Bankruptcy
Consumer Proposals
3015 Kennedy Road, Suite 205, Toronto, ON M1V 1E7
www.KPMInvestment.com, kantha@KPMInvestment.com
T: 416-214-6161
F: 416-465-3535

Thayalan (Thaya) Gobalakrishnan
Mortgage Development Manager
Scarborough North, Markham and Stouffville
Call me for any Mortgage Financing questions
* New Mortgages
* Refinance
* Equity take out
you're richer than you think.
Cell: 416-575-3211
Fax: 1-888-545-0462
E-Mail: thaya.gobal@scotiabank.com
Scotiabank

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
☒ Virus Removal
☒ Internet Sharing
☒ Computer Tune Up
☒ Computer Repair
அனைத்து கணனி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES

TD Canada Trust
Supen Subramaniyam (Manager, Residential Mortgage)
416-844-8692 1-888-809-9154
supenthiran.subramaniam@td.com
ADVICE WHEREVER WHENEVER
Banking can be this comfortable
Low Mortgage Rates
கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும அழையுங்கள்
Buying Home Home Equity Line of Credit
Consolidation Existing Debts Refinancing
Switching your mortgage From another financial institute